கல்கி



KALKI
அக்டோபர் 30 1955
4 அணா

“என்ன நறுமணம்! என்ன புதுமலர் இனிமை!”

என்கிறார் குசலகுமாரி

“லக்ஸ் டாய்லட் சோப்பிலுள்ள மனோகரமான புது நறுமணத்தை விரும்புகிறேன்.”

சினிமா நட்சத்திரங்களைப்போல்— உலகத்தின் மிக்க அழகுடைய பெண்மணிகளைப்போல், நீங்களும் செய்யுங்கள்! சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப்பின் மிகுந்த நறுமணமுள்ள நுரை உங்களுடைய வதனத்திற்கு ஒரு புதுமையான பொலிவையும், நேர்த்தியான புதியதொரு வனப்பையும் அளிக்கட்டும்.

உங்கள் தினசரி எழிலளிக்கும் ஸ்னானத்திற்கு பெரிய சைஸ் சோப்புக் கட்டியை உபயோகியுங்கள்.



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

இந்தியாவில் தயாரித்தது

LTS 457-50 TM

மலர் 15
இதழ் 13

கல்கி
பொருளடக்கம்

மன்மத ஐப்பசி 13

1955 அக்டோபர் 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜெமினியின்
மகோன்னத சித்திரம்....
இன்ஸானியத்
உங்கள் அபிமானமிகுந்த நக்ஷத்திரங்கள்
எல்லோரும் சேர்ந்து நடிக்கும் அருமையான கதை...
திலீப் குமார் - தேவ் ஆனந்த் - பீனுராய் - விஜயலக்ஷ்மி -
ஜெயந்த் - ஜெயராஜ் - சோபனு சமர்த் - குமார் -
பத்ரி பிரசாத் - ஆகா - மோஹனு -
ஹாலிவுட் ஜிப்பி நடித்தது...
அக்டோபர் 21உ முதல்
பெங்களூர் - ஸ்டேட்ஸ்
மைசூர் - உட்லண்ட்ஸ்
தவணகிரி - சாந்தி
மங்களூர் - ஜோதி
எர்ணாகுளம் - லக்ஷ்மண்
ஆலப்புழை - சீமாட்டி
திருவனந்தபுரம் - சென்ட்ரல்
அக்டோபர் 28உ முதல்
சென்னை வெலிங்டனிலும்
மற்றும்
பல முக்கிய நகரங்களிலும்
சென்னையில்
தினசரி 3 காட்சிகள்
3 - 6-15 - 9-30



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | மன்மத ௵
இதழ் 13 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார், | ஐப்பசி 13

புது ஏற்பாடு

“விசாலாந்திரா ! இன்றே விசாலாந்திரா !”


“விஸ்தார கேரள ராஜ்யம் !”

“அகண்ட கர்னுடகா !”

“விச்வ விக்ரம ஹிந்த் பிரதேச் !”

என்றெல்லாம் மற்றவர்களுடைய கோஷங்கள். நம்முடைய தமிழ் நாட்டிலோ, “போ, மலையாளம் !” “போ மங்களூர் !” “வாழ்க பட்டை சின்ன தனித் தமிழகம்” இவையே நம்முடைய மகிழ்ச்சி. “கொடு ! கொடு !” என்கிறார்கள் மற்றவர்கள். நாம், “எடுத்துக்கோ, எடுத்துக் கொண்டு போ !” என்கிறோம்.

“மாப்பிள்ளைக் கிழவர் போனாலும் போனார். நல்லவேளை அம்மாவுக்கு இன்னொரு பெண் குழந்தை பிறந்தது” என்று மகிழ்ச்சி அடைகிறோம். ‘நஷ்டத்தைக் கவனியாமல் அற்ப லாபத்தைப் பற்றி சந்தோஷம் அடைகிறோம். ‘மலையாளம் போனாலும் போகட்டும், மங்களூர் பறி போனாலும் நல்லதே. செங்கோட்டை வந்து விட்டதே’ என்று கூத்தாடுகிறோம். தமிழரைப் போன்ற வேதாந்திகள் உலகத்திலில்லை. “வேண்டாமை என்னுஞ் செருக்கே செருக்கு !” அல்லவோ? “யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்” என்று விஷயம் தெரிந்தல்லவோ வள்ளுவர் எழுதினார். மலையாளத்துத் தலைவலியும் மங்களூர்ச் சங்கடமும் தீர்ந்தால் நல்லதேயல்லவோ? தமிழகத்துக்குள் தனி சம்ஸாரம் நடத்துவதே சுகம். தேர்தல்கள் மிகச் சுருக்கமாக முடியும். வேண்டாதவர்கள் வெளியேறி விட்டால் ஜில்லாவும் ஜில்லாவும் பிறகு தாராளமாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கலாம். பிறகு ஒரு நாள் பாண்டி நாடு ஒரு கூறாகவும் சோழ நாடு ஒரு கூறாகவும் கொங்கு நாடு மூன்றும் கூறாகவும் பிரிந்து போகலாம். ஏன் கூடாது? அந்த நாட்களில் நாம் சுகமாக இருந்தது பொய்யா? “துண்டு பட்டால் உண்டு வாழ்வே”— என்று புது கீதம் பாடுவோம்.



*   *   *   *

அன்பார்ந்த தென்மக்களே ! ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ! துண்டு பட்டால் அனைவர்க்கும் தாழ்வு. நன்றிது தேர்ந்திடல் வேண்டும் !

ஆரம்பக் கல்விச் சீர்திருத்த யோசனைகள்

ஆரம்பக் கல்விச் சீர்திருத்த விஷயமாகப் பரிசீலனை செய்து தகுந்த யோசனைகளைக் கூறுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த கமிட்டியாரின் அறிக்கை சென்ற வாரம் வெளியாகியுள்ளது. பத்திரிகைகளில் வெளியாகியுள்ள மேற்படி கமிட்டியின் சிபார்சுகளை அன்பர்கள் படித்திருக்கலாம். இந்த மாகாணத்திலே ஐந்து முதல் பதினொரு வயதுவரையில் உள்ள குழந்தைகளின் தொகை 63 லட்சம் ஆகும். இவர்களில் 32 லட்சம் குழந்தைகள்தான் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லுகின்றனர். மீதியுள்ள 31 லட்சம் குழந்தைகள் கல்வி பெறுவதற்கு வழி என்ன என்பதே இப்போது நம் முன்னுள்ள மகத்தான பிரச்னை. இந்தப் பிரச்னையைத் தீர்க்க வழி என்ன என்பதுபற்றிப் பிரஸ்தாப அறிக்கையில் யாதொரு யோசனையும் கூறப்படவில்லை.

அடுத்தபடியாக, பாரத நாட்டு அரசியல் சட்ட விதியின்படி மேற்படி சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து பத்து வருஷங்களுக்குள், அதாவது 1961-ம் ஆண்டுக்குள் பதினொரு வயதான எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கப்படவேண்டும். அவ்விதம் எல்லோருக்கும் கல்வி அளிப்பது எப்படி என்பது பற்றியும் மேற்படி அறிக்கையில் வழி எதுவும் கூறப்படவில்லை.

அத்திட்டம் அமுலுக்கு வந்து ஏற்கனவே நாலு ஆண்டுகள் சென்று விட்டன. ஆனால் மேற்கொண்டு கால் மடங்கு அதிகக் குழந்தைகள் கல்வி பெறுவதற்குக் கூட வழி பிறந்ததாகத் தெரியவில்லை.

அடிப்படையான இத்தகைய விஷயங்களை விட்டு விட்டு, அறிக்கையில் வேறு பல யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன.

இளம் குழந்தைகளின் மூளையைக் குழப்பாமல், அரை நாள் படிப்பு முறை போன்ற ஒரு வழியைக் கடைப்பிடித்தாலன்றி, எல்லாக் குழந்தைகளுக்கும் சமீப காலத்தில் கல்வி அளிப்பது அசாத்தியமான காரியமாகி விடும்.

ஒரு நாட்டின் கல்வி முறைக்கு அஸ்திவாரமாக அமைவது ஆரம்பக் கல்வி. இளம் பிள்ளைகளின் மூளையை உருவாக்கும் காரியம் புனிதமானது. அந்தப் புனிதமான காரியத்துக்கு உருப்படியான யோசனைகள் அமலாகி நமது நாட்டின் கல்வி நிலை சீர்திருந்த வழி இனித்தான் பிறக்க வேண்டும்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் பத்தாவது ஆண்டுவிழா

சென்ற வாரத்தில் உலகில் உள்ள பல நாடுகளிலும் ஐ. நா. ஸ்தாபனத்தின் பத்தாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஐம்பத்தொரு நாடுகளிலிருந்து சென்ற பிரதிநிதிகளுடன் 1946-ம் ஆண்டில் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மகாசபையில் இன்று மேலும் ஏராளமான நாடுகள் அங்கத்தினராகச் சேர்ந்து அதை மிகவும் சக்தி பொருந்திய ஒரு ஸ்தாபனமாகச் செய்திருக்கின்றன. அச் சபையில் அங்கம் வகிக்கும் வல்லரசுகளின் வேற்றுமையும் போட்டியும் காரணமாக மற்றும் பல நாடுகள் அதில் அங்கத்தினராகச் சேர முடியாமல் இருக்கின்றன. அவைகளும் ஐ. நா. சபையில் சேர வழி பிறக்குமாயின் அது உண்மையான உலக மகாசபையாகத் திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.

பத்தாவது ஆண்டு விழாவை ஒட்டி ஐ. நா. ஸ்தாபனத்துக்குப் பாராட்டுச் செய்தி விடுத்துள்ள நேருஜி, ஐ. நா. ஸ்தாபனம் இல்லாத ஓர் உலகத்தை நாம் கற்பனையே செய்து கொள்ள முடியாது. அந்த அளவுக்கு மேற்படி ஸ்தாபனம் இன்று உலக மக்களின் வாழ்க்கையில் அவ்வளவு முக்கிய ஸ்தானம் வகித்து வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆம், உலகத்தின் பொருளாதார, ஆரோக்கிய, அரசியல் துறைகளில் ஐ. நா. ஸ்தாபனம் மகத்தான தொண்டு புரிந்திருக்கிறது. ஐ. நா. ஸ்தாபன மத்தியஸ்த சபையின் மூலம்தான் கொரியா, இந்தோ சீனா முதலிய நாடுகளில் யுத்தம் நின்று சமாதானம் உண்டாகும்படி செய்வது சாத்தியமாயிற்று. அச் சபையில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, ருஷ்யா போன்ற வல்லரசுகள் பரஸ்பரம் எதிர்க் கட்சியில் இராமல் ஒத்துழைக்குமாயின், பல்வேறு உலகப் பிரச்னைகளையும் ஐ. நா. ஸ்தாபனத்தின் மூலம் எளிதில் தீர்த்துக் கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலக அமைதிக்கும் உலக நாடுகளின் நல்லுறவுக்கும் ஒரு கோட்டையாகத் திகழ்ந்து வருகிறது என்றும், உலகத்தின் எதிர்காலத்தில் மானிட வர்க்கத்துக்கு உள்ள நம்பிக்கையே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாக உருவாகியிருக்கிறது என்றும் ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருக்கிறார். அந்த நம்பிக்கை வீணாகி விடாமல் நிறைவேறும்படி செய்ய வேண்டியது ஐ. நா. ஸ்தாபனத்தின் ஆதிகர்த்தாக்களான அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் முதலிய வல்லரசுகளின் இன்றியமையாத கடமையாகும்.

அட்டைப்பட விளக்கம்

பட்டாபிஷேகம்

சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்து, மனிதர்களின் துயரங்களை யெல்லாம் தானும் பிரத்யட்சமாக அனுபவித்து, தீமையைக் கொன்று அறத்தை நிலைநாட்டி மக்களையும் தேவர்களையும் மகிழ்வித்தான் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி.

ஸ்ரீராம பட்டாபிஷேகம் என்றால், தர்மத்தின் கொலு, அறத்தின் ஆட்சி என்று பொருள். அந்த தெய்விகக் கோலத்தை நமது நாட்டு மரபோடு ஒட்டிய முறையிலே எழுதி இந்த இதழ் அட்டைச் சித்திரமாகத் தருகிறார் ஓவியர் மணியம்.

ஆ - ரம்பம்!



என்ன சேதி?

நூற்றாண்டு விழா

சென்னைப் பட்டணத்துக்கு யாராவது முதன் முதலாக வந்தால் அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? சென்னை நகரில் உள்ள பிரும்மாண்டமான கட்டடங்களையோ, கடற்கரையையோ, பெரிய பெரிய தொழிற்சாலைகளையோ பார்க்கச் செல்ல மாட்டார்கள். உயிர்க் காலேஜைப் பார்க்கத்தான் ஆவலுடன் செல்லுவார்கள். 'உயிர்க் காலேஜ்' என்று பாமர மக்களாலும், 'ஸூ' என்று படித்தவர்களாலும் சொல்லப்படும் மிருகக் காட்சி சாலைக்குத்தான் செல்லுவார்கள்.

சென்னை மிருகக்காட்சி சாலை, சென்னை நகர சபையின் அருமையான நிர்வாகத்துக்கு ஒரு எடுத்துக் காட்டு. சென்னை நகரசபையைப் போலவே, மிருகக் காட்சி சாலையும் பழம் பெரும் ஸ்தாபனமாக இருந்து சென்னை நகரின் சிறப்புக்குச் சான்றாக விளங்கி வருகிறது.

அக்டோபர் மாதம் முப்பத்தோராம் தேதியிலிருந்து சென்னை மிருகக்காட்சி சாலையின் நூறாவது ஆண்டு விழாவை ஐந்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடச் சென்னை நகர சபையார் பிரமாதமான ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

முப்பத்தோராம் தேதியன்று மிருகக் காட்சி சாலை நூறாவது ஆண்டு விழாவைச் சென்னை கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா ஆரம்பித்து வைக்கிறார். ஐந்து தினங்களும் அருமையான காட்சிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு புதுக் காட்சி. நாய்களின் கேளிக்கை விளையாட்டு, குதிரைகளின் அற்புதமான ஆட்டங்கள், பறவைகளின் விசித்திரக் காட்சிகள், பல தரப்பட்ட மீன்களின் விநோதக் காட்சிகள், இன்னும் சென்னை போலீஸ் இலாகாவின் துப்பறியும் நாய்களின் அற்புதமான சாமர்த்தியங்கள் எல்லாம் இந்த ஐந்து தினங்களும் நடக்கப் போகின்றன.

ஐந்து தினங்களும் இந்த உலகை மறந்து மிருகங்களின் விசித்திர உலகத்தில் இருப்பது போன்ற பிரமையே நமக்கு ஏற்பட்டு விடும் போலிருக்கிறது, இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்க்கும்போது.

மிருகக் காட்சி சாலையில் உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் இருக்கும் அபூர்வ மிருகங்கள் இருக்கின்றன. நூறாவது ஆண்டு விழாவுக்காக அமெரிக்காவிலிருந்தும், ருஷ்யாவிலிருந்தும்கூடப் பல அபூர்வ மிருகங்கள் வந்திருக்கின்றன.

"நீ என்ன வெள்ளைக் காக்காயைப் பார்த்ததாகக் கூடச் சாதிப்பாய் போலிருக்கிறதே!" என்று காகத்தில் வெள்ளைக் காகமே கிடையாது என்பதற்காகச் சொல்வார்கள். ஆனால் உண்மையிலேயே சென்னை மிருகக் காட்சி சாலையில் வெள்ளைக் காகம் இருக்கிறது! வெள்ளை மயில் இருக்கிறது! சிங்கம், புலி, கரடி, காண்டாமிருகம், வரிக் குதிரை முதலியவைகள் இருக்கின்றன. இன்னும் எத்தனை எத்தனையோ விதமான மிருகங்களும், பறவைகளும், மீன்களும், பாம்புகளும் இருக்கின்றன. குரங்கில்தான் எத்தனை வகை. மிருகக் காட்சி சாலையில் உயிருள்ள மிருகங்களுடன் உயிரில்லாத ஒரு அபூர்வ பிராணியும் சிலையுருவில் இருக்கிறது. 'கொரில்லா' என்னும் மனிதக் குரங்கு ஒன்று அங்கு சிலையாக இருக்கிறது. பார்க்க வேண்டிய உருவம். இதைப் பார்த்தவுடன் இப்படி ஒரு மிருகத்தை எங்கேயோ பார்த்திருக்கிறோமே என்று வியந்து போவோம்.

மனிதர்களின் முகத்தையே பார்த்துப் பார்த்து அலுத்துப் போனவர்களுக்கு மிருகக் காட்சி சாலை ஒரு நல்ல இடம். உலகில் ஆண்டவன் படைப்பில் எத்தனை எத்தனை விதமான பிராணிகள்தான் இருக்கின்றன! ஆனால் மனிதன் அந்தப் பிராணிகளை விட எவ்வளவோ உயர்ந்தவன் என்பதைச் சென்னை மிருகக் காட்சி சாலைக்குப் போனால் புரிந்து கொள்ளலாம்.

நூறு ஆண்டுகளாக மிகத் திறமையாக மிருகக் காட்சி சாலையை நடத்தி வரும் சென்னை நகர சபையைப் பாராட்டுகிறோம். ஒவ்வொருவரும் பாராட்டுவதற்கு அறிகுறியாக மிருகக் காட்சி சாலையின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு விதம் விதமான மிருகங்களையும், பட்சிகளையும் பார்த்து மகிழும்படி கேட்டுக் கொள்கிறோம். வாழ்க, மிருகக் காட்சி சாலை!

பெண்கள் போலீஸ் படை

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே!' என்றார் மகாகவி பாரதியார். இதுதான் இந்த யுக தர்மத்தின் குரல்.

ஆணுக்குப் பெண் எந்த விதத்திலும் தாழ்வில்லை என்று எத்தனையோ பெண்கள் ஆடவர்கள் புரியும் காரியங்களையெல்லாம் இன்று செய்து வருகிறார்கள். பட்டப் படிப்புப் படித்துக் கலெக்டராக வேலை செய்கிறார்கள். இயந்திர நுட்பம் தெரிந்து கார் ஓட்டவும் செய்கிறார்கள். ஏன், மேல் நாடுகளில் தூதர்களாகப் பணி புரியும் பெண்மணிகளினால் பாரத நாட்டின்

துங்கம் உயர்கிறது என்று பெருமிதத்தோடு நமது பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் அடிக்கடி கூறக் கேட்கிறோம்.

இவ்வளவு முன்னேறி விட்ட நமது சகோதரிகளுக்குப் போலீஸ் இலாக்காவிலும் ஒரு நல்ல ஸ்தானம் வழங்க வேண்டும் என்று சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

பதவிகள் அந்தஸ்துகள் முதலிய விஷயங்களில் எப்படி ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமோ அப்படியே குற்றம் புரியும் விஷயத்திலும் சமமாகத்தான் விளங்குகிறார்கள். பெண்களில், திருடுபவர்கள் இருக்கிறார்கள். மற்ற மற்றக் குற்றம் செய்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

ஆனால் பெண்கள் புரியும் குற்றங்களைப் பரிசீலனை புரிவதிலும், கண்டு பிடிப்பதிலும் ஆண் போலீஸ்காரர்களுக்குச் சற்றுத் தயக்கமும் சங்கோசமும் இருக்கவே செய்கிறது. அதனால் பெண் குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதில் கஷ்டம் இருக்கவே செய்கிறது.

இந்தக் குறையை நிவர்த்தி செய்துவிடும் இந்தப் புது ஏற்பாடு. அதனால் பெண்மணிகள் போலீஸ் ஏற்படுவதைப் பொது மக்கள் உற்சாகமாக வரவேற்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால் ஒன்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மிகவும் முற்போக்கும் நாகரிகமும் அடைந்த நாடுகள் என்று சொல்லப்படும் மேனாடுகளில் கூட, பெண்கள் தொகை சர்க்கார் காரியாலயங்களிலும் சரி, மற்றக் காரியாலயங்களிலும் சரி அப்படி யொன்றும் அதிகமாக இல்லை. அங்கெல்லாம்கூடப் பெண்கள் படித்துவிட்டுக் குடும்ப நிர்வாகம் செய்வதே தங்களுக்கு உகந்த காரியம் என்று கருதி அதில் ஈடுபடுகிறார்கள்.

காரியமும் வேண்டும்

அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் அக்டோபர் 26-ம் தேதியன்று உலக சமாதானத்துக்காகப் பிரார்த்தனை புரியும்படி அமெரிக்க மக்களை வேண்டிக் கொண்டிருக்கிறார்.

இம்மாதிரி சில மாதங்களுக்கு முன்பு ஜனாதிபதி அமெரிக்க மக்களைப் பிரார்த்தனை புரியும்படி அறிக்கை விடுத்தது, நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

இவ்விதம் அடிக்கடி பிரார்த்தனை புரியும்படி மட்டும் அறிக்கை விட்டு விட்டு, சமாதானத்துக்கான காரியங்களில் ஈடுபடாமலிருந்தால் அதன் பொருள் என்ன? தன்னைத்தானே ஏமாற்றும் வித்தையாக

அல்லவோ போய்விடும். இப்படி எத்தனை நாள் நடத்தலாம்!

பிரார்த்தனையால் பலனுண்டு என்பது மகான்கள் கண்ட முடிவு. இது நிரந்தரமான உண்மைதான். ஆனால் அத்தகைய மெய்யான, பரிசுத்தமான தவம் பண்ணக் கூடிய தகுதியும் வாய்ப்பும் யாருக்கு உண்டு? மக்கள் நிச்சயம் செய்யக்கூடிய காரியம் ஒன்று உண்டு. சமாதானத்துக்கு வேண்டிய நடவடிக்கைகளில் மனத்தைச் செலுத்துவதுதான் அது. மக்கள் தலைவர்களும் செய்ய வேண்டிய காரியம் இதுவே. இதைச் செய்து விட்டுப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டால் அந்தப் பிரார்த்தனைக்குப் பொருள் உண்டு.

பி. ஸி. ஜி விஷயம்

பி.ஸி.ஜி ஊசியைப் பொதுஜன இயக்கமாக நடத்துவதில் உள்ள தீமைகளை ராஜாஜி ஆதார பூர்வமாகச் சொல்லி வருகிறார். உண்மை ஒன்றையே கருதி நின்று சென்னை, டில்லி அரசாங்கங்களின் போக்கைக் கண்டித்து வருகிறார். எவ்வளவு சொல்லியும் சர்க்கார் பிடிவாதமாக இருந்து வருகிறார்கள்.

ஆனால் கீழ்க்கண்ட செய்தி மக்கள் கவனத்துக்கு உரியது.

"சித்தூர் டவுனில் செப்டம்பர் முதல் தேதி ஆரம்பித்த பி. ஸி. ஜி ஊசி குத்தும் இயக்கம் பொது மக்கள் ஆதரவு இல்லாததால் நிறுத்தப் பட்டுவிட்டதென ராயலசீமா பி. ஸி. ஜி ஊசி குத்தும் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்" என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

'ராஜாஜி சொல்லுகிறார். எதையும் ஆராய்ந்து தெளிவாகப் பார்க்கும் ஓர் அறிவாளி சொல்லுகிறார். அவர் சொல்லை ஆராய்ந்து தெளிந்தோம்' என்ற பெருமை சர்க்காருக்குக் கிட்ட வில்லை; பொது மக்களுக்குத்தான் கிட்டியது. அந்தப் பொது மக்களை வாழ்த்துகிறோம்; வணங்குகிறோம்!

கையெழுத்து

அமெரிக்க தூதர் திரு ஷெர்மன் கூப்பர் சமீபத்தில் சென்னை, திருவனந்தபுரம் பெங்களூர் முதலிய இடங்களில் எல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவருக்குச் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் நல்ல வரவேற்பளித்து அமெரிக்க மக்களிடம் பாரத மக்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைக் காண்பித்துக் கொண்டனர்.


பெங்களூரில் திரு கூப்பரிடம் யாரோ கையெழுத்து வேட்டை நிபுணர்கள் கையெழுத்துப் போட்டுத் தரும்படி கோரினார்களாம். மிக்க தயக்கத்துடன் போட்டுக் கொடுத்தாராம். அவருடைய தயக்கத்தின் காரணம் என்ன என்று கேட்ட பொழுது தமது கையெழுத்து நன்றாக இராது என்பதுதான் என்று கூறினார். அத்துடன் நில்லாமல் தமது வாழ்க்கையில் நிகழ்ந்த ரஸமான ஒரு அனுபவத்தையும் சொன்னாராம்.

ஒரு முறை அவர் தமது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினாராம். சில நாட்களில் அக் கடிதம் தந்தையின் கடிதத்துடன் திரும்பி வந்ததாம். தந்தையின் கடிதத்தில் "உன் கையெழுத்துப் புரியவில்லை. தயவு செய்து தெளிவாக எழுதி அனுப்பவும்" என்று எழுதி யிருந்தாராம்.

அவர் கையெழுத்து எப்படி யிருந்தால் என்ன? அமெரிக்க நாட்டின் இந்திய தூதராக இருக்கும் பேறு அல்லவா அவருக்குக் கிடைத்திருக்கிறது. அந்த 'எழுத்'தின் மகிமையை என்ன என்று சொல்ல!

சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி



92. மங்களம்

ராமசந்திரனுடைய ஏவலின்படி விபீஷணனுக்கு லங்காபுரியில் ராஜ்யாபிஷேகம் உடனே விமரிசையாக நடத்தப்பட்டது. லங்கேசனாகப் பட்டம் சூட்டப்பட்டு விபீஷணன் நகரத்துக்கு வெளியில் பாசறையிலிருந்த ராமனிடம் வந்து வணங்கினான்.

"அரசனுடைய உத்தரவு பெற்று லங்கைக்குள் சென்று சீதைக்குச் செய்தியைத் தெரிவிப்பாய்" என்று ராமன் ஹனுமானிடம் சொல்ல, அவனும் அவ்வாறே விபீஷணன் ஆணையைப்பெற்று அசோகவனம் சென்றான்.

ஹனுமான் சீதையைக் கண்டான். பிராட்டியின் ஆனந்தம் பேச்சுக்கு இடம் தரவில்லை.

"ஏன், அம்மணி, பேசவில்லை?" என்றான் ஹனுமான்.

"பேச முடியவில்லை, என் அப்பனே! உனக்கு நான் என்ன செய்து நான் பட்ட கடனைத் தீர்ப்பேன்? உன் விவேகம், உன் வீரம், உன் மனோ பலம், உன் பொறுமை, உன் வினயம் உலகத்தில் வேறு யாருக்கு உண்டு? உனக்குச் சமானம் இந்த பூவுலகில் ஒருவர் இல்லை" என்றாள். கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக இவ்வாறு சீதை சொன்னாள். அப்போது ஹனுமான் சிறை காத்த அரக்கிகளைப் பார்த்தான். அவர்களைக் கண்டதும் அவனுடைய பழைய கோபம் மறுபடியும் பொங்கிற்று.

சீதையைப் பார்த்து "உம்மை வேதனை செய்த இந்தப் பாபிகளை வதம் செய்வேன். உத்தரவு அளிப்பீராக!" என்றான் ஹனுமான்.

"வேண்டாம், அப்பனே! தவறு செய்யாதவர்கள் உலகத்தில் யாரே உளர்?" என்றாள் சீதை.

ந கஶ்சித் ந அபராத்யதி.

பிராட்டியின் இந்தச் சொற்களை வைஷ்ணவ பக்தர்கள் அமிருதமாக பாவிக்கிறார்கள். தேவியின் அருள் இருக்க பயம் என்பது கிடையாது. எந்தப் பாபியும் பிராட்டியின் பொன்னடியை அடைந்து உய்யப் பெறலாம் என்பது சாஸ்திரம்.

"அரசனுடைய உத்தரவை அவர்கள் நடத்தினார்கள். அவர்கள் பேரில் என்ன குற்றம்? அரசன் மாண்டான். இவர்களை இப்போது தண்டிப்பது நியாயமல்ல" என்றாள் சீதை.

"ராமனுக்கு என்ன செய்தி கொண்டு போக உத்தரவு?" என்று ஹனுமான் கேட்டான்.

"அவனைக் காண ஆசைப்படுகிறேன். அவ்வளவே!" என்றாள்.

ராமனிடம் ஹனுமான் திரும்பிச் சென்று சீதையைத் தரிசித்து வந்ததாகச் சொன்னான். என்ன காரணமோ ராமனுடைய முகம் கறுத்தது. கண் கலங்கிற்று. பெரும் யோசனையில் ஆழ்ந்தான். கொஞ்ச நேரங் கழித்து. "விபீஷணா! சீதையை நீராட்டிச் சகல பூஷணங்களும்



தரிக்கச் செய்து அழைத்து வருவீர்" என்றான்.

செய்தியை அசோக வனத்துக்குக் கொண்டு போனதும் சீதை, "நான் இருக்கும் இந்த நிலையிலேயே போக விரும்புகிறேன்" என்றாள்.

"அப்படியல்ல, தேவி! சக்கரவர்த்தித் திருமகன் உத்தரவுப்படி செய்ய வேண்டும்!" என்று விபீஷணன் சமாதானப்படுத்தினான்.

சகல பூஷணங்களும் தரித்துப் பல்லக்கில் சென்றாள் சீதை.

* * *

'சீதை வருகிறாள்' என்று தெரிந்ததும் ராமன் தன் தியானத்தினின்று விழித்தான். நடந்து போன நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் மனத்தில் சமுத்திர அலைகளைப் போல் மோதின. ரோஷம், துயரம், சந்தோஷம் எல்லாம் கலந்த நிலையில் இருந்தான்.

வானரப் படையின் அபார கூட்டத்துக்கு நடுவில் சீதையைப் பல்லக்கில் எடுத்து வரும்பொழுது வானரர்கள் தேவியைப் பார்க்க ஆசைப்பட்டுப் பெருங் கூட்டமாகச் சுற்றிக் கொண்டார்கள். வானரத் தலைவர்கள் அவர்களைத் தள்ளி அப்புறப்படுத்தவும் பெரும் குழப்பம் உண்டாயிற்று.

"யாரையும் தடை செய்ய வேண்டாம். எனக்கு உதவிய இந்த வானரர்கள் என் ஆப்த நண்பர்கள் ஆவார்கள். என்னைச் சுற்றி இவர்கள் இருப்பதே அவளுக்கு மகிழ்ச்சி தரும். யாரையும் விலகச் சொல்ல வேண்டாம்" என்றான் ராமன்.

ராமனுடைய மன நிலையானது பக்கத்திலிருந்த நண்பர்கள் யாருக்கும் விளங்கவில்லை. லக்ஷ்மணனுக்குங்கூட விளங்கவில்லை.

பல்லக்கிலிருந்து இறங்கித் தரையைப் பார்த்தவண்ணமாக சீதாதேவி ராமனை நோக்கி நடந்தாள். "ஆரிய புத்திரனே!" என்று ஒரே ஒரு சொல்லைச் சொல்லி விட்டு விம்மி அழுதாள்.

"சத்துருவை வதம் செய்தேன். உன்னை மீட்டேன். என் க்ஷத்திரியக் கடமையைச் செய்து முடித்தேன். என் சபதம் முடிந்தது" என்றான் ராமன்.

இவ்வாறு பொருள் விளங்காத, கொஞ்சமும் எதிர்பாராத, சொற்கள் வெளி வந்ததும் அல்லாமல், சக்கரவர்த்தித் திருமகனுடைய முகம் ஏனோ கறுத்தது. பிறகு இன்னும் கடுஞ் சொற்களைச் சொன்னான்.

"உனக்காக அல்ல இந்தக் கோர யுத்தத்தை நான் நடத்தியது. என் கடமையைத் தீர்க்கத்தான் செய்தேன். உன்னை யடைந்தது எனக்கு இப்போது மகிழ்ச்சி தரவில்லை. அபவாதம் என்கிற புகை உன்னை மூடி மறைக்கிறது. இப்போது என்ன செய்யப் பிரியப்படுகிறாய்? நீ என்னை விட்டுத் தனியாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய பந்துக்கள், நண்பர்கள் இவர்களில் எவருடைய பாதுகாப்பிலாவது நீ இருக்கலாம்.

க்ஷத்திரியனை ஒருவன். அயலான் இல்லத்தில் வெகு காலம் இருந்த தன் மனைவியை எப்படித் திரும்ப அழைத்துக் கொள்வான்? உன் யோசனை என்ன?" என்றான்.

சீதை ராமனை நோக்கினாள். அவள் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. "தகாத மொழிகளைப் பேசினீர். இதயத்தைப் பிளக்கும் சொற்களைக் காதால் கேட்டேன். பாமரர்கள் சொல்லக் கூடிய சொல் ஆரிய புத்திரனுடைய வாயினின்று வந்தது. அரக்கன் என்னைப் பலாத்காரமாகத் தூக்கி வந்தான். உம்முடைய ரோஷம் உம்முடைய விவேகத்தைக் கலைத்து விட்டது. நாதனே! நான் எந்தக் குலத்தில் பிறந்தவள் என்பதை மறந்தீர். ஜனகராஜன் என் தகப்பனார் ஆவார். அவரால் வளர்த்துப் பண்பட்டவள் நான். லக்ஷ்மணா, கட்டைகளைக் கொண்டு வருவாய். தீயை வளர்ப்பாய்!" என்றாள்.

அப்போது, ராமன் செய்து வந்ததையெல்லாம் பார்த்து மகா கோபம் பொங்கிப் பொறுக்க மாட்டாமலிருந்த லக்ஷ்மணன் சீதையின் உத்தரவைக் கேட்டதும் ராமன் முகத்தைப் பார்த்தான்.

ராமன் "வேண்டாம்" என்று சொல்லவுமில்லை. மனம் இளகினதாக யாதொரு சின்னமும் காணப்படவுமில்லை.

சீதை சொன்னபடியே லக்ஷ்மணன் தீ மூட்டி விட்டான். பிராட்டியானவள் தரையைப் பார்த்த வண்ணமாகக் கணவனை வலம் செய்து விட்டு, "தெய்வங்காள்! உங்களை வணங்குகிறேன்! மகரிஷி கணங்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். அக்னியே! என் பரிசுத்தத்தை நீ அறிவாய். இதோ உனக்குள் பிரவேசிக்கிறேன்" என்று சொல்லிக் கொழுந்து விட்டு எரியும் தீயில் குதித்து விழுந்தாள்.

* * *

தேவர்கள் அனைவரும் வந்து கூடி விட்டார்கள். பிரமன் பேசினான்.

"நாராயண, ராவணனைச் சம்ஹாரம் செய்ய அவதரித்த சர்வேசுவரனே! இவள் உம்முடைய பிராட்டி லக்ஷ்மியன்றோ!" என்றான் பிரமன். எல்லோரும் துதித்த வண்ணம் நின்றார்கள். அச்சமயம் ஒரு அற்புதம் நிகழ்ந்தது.

சாக்ஷாத் அக்னி தேவன் எரியும் நெருப்பிலிருந்து கிளம்பி சீதையை அப்படியே வஸ்திர பூஷணதாரியாக எடுத்து ராமனிடம் தந்தான்!

பிரமனைப் பார்த்து ராமன் சொன்னான்:


"நான் தசரதன் மகன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் யார்? எங்கிருந்து வந்தேன் என்பது உங்களுக்குத்தான் தெரியும். நீங்கள்தான் சொல்ல வேண்டும்."



இவ்வாறு ராமன் பிரமனுக்குச் சொல்லி விட்டு தேவியை அழைத்துக் கொண்டான்.

"சீதையே! உன் பழியற்ற புனித நிலை எனக்குத் தெரியாதா? இந்தப் பரீட்சை நான் செய்தது மக்களின் இருப்பிக்காகவே, ஜனங்கள் சொல்லுவார்கள் அல்லவா—'ராமன் காமத்தால் மதி யிழந்தான், உலக வழக்கத்துக்கு மாறுபட்டு நடந்து கொண்டான்' - இவ்வாறு அவர்கள் என்னுவார்களே என்று இப்படி உன்னைச் சோதனை செய்தேன்" என்று சொல்லி ராமன் அவளை இரு கையும் நீட்டி அழைத்துக் கொண்டான்.

அப்போது தசரதனும் வந்து இறங்கி, சக்கரவர்த்தித் திருமகனைத்



தஞ்சை ஜில்லா கலெக்டராக இருந்த திரு சி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. ஸி. எஸ். அவர்கள் இந்திய சர்க்கார் உணவு இலாக்கா டைரக்டர் ஜெனரலாகப் பதவி உயர்ந்தப் பட்டுத் தில்லிக்குச் செல்கிறார். அவருக்கு 17-10-55 அன்று தஞ்சை ஜில்லா என். ஜி. ஓ., சங்கத்தினர் ஓர் பிரிவு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தனர். தஞ்சை என். ஜி. ஓ. சங்க அங்கத்தினர்களையும் அவர்கள் அன்பைப் பெற்ற திரு சி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. ஸி. எஸ். அவர்களையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

தன் மடியில் உட்கார வைத்து ஆசிர்வதித்தான்.

"குழந்தாய்!" என்று தசரதன் சீதையை நோக்கி, "என் மகனை மன்னிப்பாய்! உலக தருமத்தைக் காப்பதற்காக அவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்வாய். உனக்கு மங்களம்!" என்றான்.

இந்திரனும் வரன் தந்தான். யுத்தத்தில் ராமனுக்காக மாண்டு பிரேதங்களாகக் கிடந்த வானரர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தார்கள்.

* * *

வனத்தில் ஆசிரமத்திலே தனியாக விட்டுப் போன தேவியை இழந்து துயரத்தில் மூழ்கி, பிறகு ராமன் தடையும் தடங்கலும் தாண்டி மகா பல பராக்கிரமம் பெற்ற அரக்கனுகிய திருடனை வதம் செய்து விட்டு மறுபடியும் அடைந்தான். சீதையும் நாதனை அடைந்து விட்டாள். இருவரும் விமானத்தில் அயோத்திக்குத் திரும்பிச் சென்றார்கள். கூட நண்பர்களாகிய வானர வீரர்களும் விபீஷணன் முதலியவர்களும் சென்றார்கள். ராவணனுடைய புஷ்பக விமானத்தில் மேலே வாயு மார்க்கமாகப் போய்க் கொண்டிருந்தபோது, சக்கரவர்த்தித் திருமகன் தானும் லக்ஷ்மணனும் நடந்த காட்டையும், என்றும் மறக்க முடியாத எல்லா இடங்களையும் சீதைக்குக் காட்டி விளக்கிக் கொண்டே சென்றான். "அதோ, பார்! உன்னை நான் அடைவதற்காக நளன் கட்டித் தந்த சேது. அதோ பார்! கிஷ்கிந்தை! ஹனுமானையும் சுக்ரீவனையும் நான் நண்பர்களாக அடைந்த இடம் இதுவே!" என்றெல்லாம் சொல்லிக் காட்டிக் கொண்டே சென்றான்.

* * *

பரத்துவாஜ ஆசிரமத்தில் தங்கி அங்கிருந்து குகனுக்கும் பரதனுக்கும் முன்னதாகச் செய்தி அனுப்பினார்கள்.

அயோத்தி நகரம் ஆனந்த வெள்ளத்தில் தெப்பமாக மிதந்தது. பரதனைச் சேர்ந்து விட்டான் ராமன். கூனியும் கைகேசியும் இவனுக்காகப் பதவியை விரும்பினார்கள். விரும்பி ஏதேதோ செய்தார்கள். அவர்கள் கோரிய பயனைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய மகிழ்ச்சியை யல்லவோ இப்போது அடைந்தான் பரதன், ராமனடியில் பணிந்து? எந்தக் கிரீடம் தரும், ராமன் பாதங்கள் அளிக்கும் மகிழ்ச்சியை? எந்த ராஜ்ய பதவி தரும் பரதன் அடைந்த பல்லாண்டுப் புகழை? 'பரிசுத்தத்தில் பரதாழ்வானுக்கு ஒப்பாகார் பெருமான்; யோக்யதையில் பரதாழ்வானுக்கு ஒப்பாகார் பெருமான்' இவ்வாறு அல்லவோ திவ்விய பிரபந்தங்களில் ஸ்ரீ ராமனுக்கும் மேலே தைரியமாக பரதாழ்வானை வைத்துச் சொல்லப்படுகிறது!

ராமன் திரும்பி வரும் வரை பதினான்கு வருஷங்கள், அண்ணன் பாதுகைகளைச் சிம்மாசனத்தில் வைத்து ராஜ்யத்தைத் தொட்டுக் கொண்டு தவம் கிடந்தான் பரதன். இப்போது தந்தை தசரதன் முதலில் விரும்பிய வண்ணம் ராமன் ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்றதைக் கண்டு, இவ்வளவு நாள் தவம் கிடந்த பரதன், உள்ளம் பூரித்து மகிழ்ந்தான்.


ஆஞ்சனேயனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ராமன் கையிலிருந்து பிராட்டி முத்துமாலையை வாங்கி ஹனுமான் கழுத்தில் போட்டாள். போடும் சமயம் தேவியின் அன்பு முகத்தில் முறுவலாகப் பூத்தது! ஹனுமனுக்கு வேறு என்னவேண்டும்?

* * *

வால்மீகியால் பாடப்பட்ட சக்கரவர்த்தித் திருமகன் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். கணக்குப் பார்க்காமல் எழுதிக் கொண்டு போனது எப்படியோ விஜயதசமியன்று சரியாக முற்று பெற்றது. படித்தோரும் கேட்டோரும் எல்லா பாபத்தினின்றும் கஷ்டத்தினின்றும் மீள்வார்களாக.

ஞான சாகரமான ஸ்ரீ சங்கரர் சொன்னார். தசரதன் திருமகனை நாம் துதித்து ஆராதித்து தியானித்து உள்ளத்தில் நிறுத்தி வைத்தோமானால் செய்த பாபங்களனைத்தும் அற்றுப் போகும். ராமாவதாரத்துக்குப் பிறகு மகா சௌலப்ய மூர்த்தியாக மீண்டும் அவதரித்தான் பகவான். கோவிந்தனாகி இடையர்களுடன் வாசம் செய்து வளர்ந்து பிறகு அர்ஜுனனுக்கு வார் பிடித்துக் கோல் எடுத்துத் தேர் ஓட்டினான். பார்த்தனுக்கு ஞானம் உபதேசித்து விட்டு முடிவில் பகவான் சொன்னான்: "நான் ஒருவனே புகலிடம் என்று அறிந்து ஐயம் தீர்ந்த உள்ளத்துடன் என்னை அடைவாய். எல்லா பாபங்களினின்றும் உன்னைத் தவிர்ப்பேன். இது சத்தியம் அன்பனே. கவலைப் படாதே!" கண்ணபிரான் செய்த இந்தச் சூளுரை நம் எல்லோருக்குமாகச் செய்த சூளுரையாகும். நம் அனைவருக்காக அர்ஜுனன் அந்த வாக்கை பகவானிடம் பெற்றான்.

மங்களம்.


PIONEERS IN TRANSPORT
அன்றாடத் தேவைகளையும்
மற்றும் வருங்காலத் தேவை
களையும் பரிசீலித்து திருப்தி
அளிக்கும் வகையில் புதுப்
புது முறைகளைக் கையாள்வ
தால் நாங்கள் இன்று போக்கு
வரத்து சாதனங்களை அமைப்
பதில் முன்னணியில் நிற்கிறோம்.
எங்கள் மிகச் சிறந்த அனுபவ
மும், வேலைத் திறனும், திருப்தி
கரமான சேவை அளிப்பதற்
காகவே பயன்படுகிறது.
Simpson & Co Ltd
MADRAS-2.
கிளைகள் :
பெங்களூர் - உதகமண்டலம் - திருச்சி - செகந்திராபாத் (டெக்கான்)



பங்காரு பாப்பா

சமூகவாழ்வில் ஏற்படும் சந்தர்ப்பவிசேஷங்கள்தான் பெரும்பாலும் மனிதனை நல்லவனாகவும் கெட்டவனாகவும் அமைக்கின்றன. தீயவனை நல்ல வழிக்கு இழுக்கும் அரிய சந்தர்ப்பங்களும் மனித வாழ்வில் ஏற்படாமல் இல்லை.

இந்த இரண்டு சக்திகளையும் ஒரே பாத்திரத்தில் புகுத்தி, அந்தப் பாத்திரத்துக்கு உணர்ச்சி மிகுந்த உருவம் கொடுத்து உருவாக்கப்பட்ட திரைப் படம் தான் "பங்காரு பாப்பா."

வாஹினியாரின் தயாரிப்பு என்றால், பண்பில் உயர்ந்த ஒரு நல்ல படத்தை எதிர்பார்க்கலாம்.

"பங்காரு பாப்பா" ஒரு தெலுங்குப் படம்; தமிழ் விளக்கத்துடன் திரையிடப்பட்டிருக்கிறது. திரைக் கதையைக் கொஞ்சம் கவனிப்போம்.

கிராமத்தில் தச்சு வேலையும் கருமான் வேலையும் செய்து நல்லபடியாகப் பிழைத்து வந்தான் கோட்டய்யா; நல்ல உழைப்பாளி; இறைவனிடம் மாறாத நேயம் பூண்டவன்; இரவெல்லாம் பரமனைப் பாடி பஜனை செய்து அகங் கனிந்து உருகுவான். அந்த பஜனை கோஷ்டிக்குக் கோபாலசாமி தலைவனாயிருந்தான். அவன் பசுவின் தோல் போர்த்திய புலி; நம்பியவரை மோசம் செய்யும் நாசகார மனிதன் அவன்; அவனுடைய வெளிவேஷத்தில் மயங்கிப் போன கோட்டய்யா அவனையே குருவாகக் கொண்டான்.

பக்தியும், பஜனையும், பாட்டும், கூத்தும், மோசக் கருத்தும், நாசவேலையும் மாத்திரம் திரைக் கதைக்கு உணர்ச்சி யூட்டி விடுமா! நெஞ்சை யள்ளும் வேறு சில அம்சங்களும் வேண்டுமல்லவா!

கடுமையான கருமான் தொழிலுக்கும் கடவுள் பக்திக்கும் இடையில், கோட்டய்யாவின் உள்ளத்தில் பண்ணை வீட்டு வேலைக்காரி ராமியும் இடம் பெற்றுத் திகழ்ந்தாள். கள்ளமற்ற வெள்ளை உள்ளம் படைத்த கோட்டய்யா அவள் மேல் கொள்ளை ஆசை வைத்திருந்தான். அவன் விருப்பம் போல் ராமிக்கும் அவனுக்கும் விவாகம் செய்ய நிச்சயித்து முகூர்த்தமும் வைக்கப்பட்டது.

விஷ நாகமான கோபாலசாமியின் சதி இப்பொழுது தான் உருவாகிக் கோட்டய்யாவின் விதியையே மாற்றியமைத்தது. கள்ளக் காதலர்களான வேஷதாரி கோபாலசாமியும் வேலைக்காரி ராமியும் பண்ணை வீட்டு நகைகளைத் திருடிப் பையில் போட்டுக் கொண்டு பழியைக் கோட்டய்யாவின் தலையில் போட்டார்கள். அதன் பலன் கோட்டய்யா சிறை சென்றான்.

கோபாலசாமியின் தீய குணம் அவனைச் சும்மா விடவில்லை. திருட்டு நகைகளை விற்க முயன்ற கோபாலசாமி போலீசாரிடம் சிக்கினான்; கோட்டய்யா விடுதலையானான்.

விடுதலை அடைந்த கோட்டய்யா குடிகாரனாக மாறி விட்டான்; தனக்கு இழைக்கப்பட்ட அநியாயால் சமூகத்தினிடம் நம்பிக்கை இழந்து, அன்புக்கு உறைவிடமாகச் சிறை புகுந்த அவன், அடியோடு மாறிக் கொடூரத்தின் கோபுரமாக வெளியே வந்தான்; கோபாலசாமியைப் பழி வாங்கத் துடித்தான்.

துயரமும் ஏமாற்றமும் நிறைந்த கோட்டய்யாவின் கதையுடன், இந்தப் படத்தில், இன்னொரு கதையும் உருவாகிறது. அது தான் பண்ணையார் மகன் மனோகர்—சாந்தா காதல் கதை. கல்லூரி மாணவன் மனோகர் சாந்தாவைக் காதலித்து ரகசியமாக மணம் புரிந்து கொண்டான். ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. தகப்பனாரிடம் நடந்ததைச் சொல்லிப் பிறகு சாந்தாவை அழைத்துப் போவதாகக் கூறி விட்டுக் கிராமத்துக்குப் போனான் மனோகர். அங்கு அவன் தந்தை அவனுக்கு வேறொரு பெண்ணை நிச்சயித்திருப்பதை அறிந்து துடித்துப் போனான்.

விவாக நாள் நெருங்கியது. மனோகரின் விவாக விஷயத்தைக் கேள்விப்பட்டுச் சாந்தா குழந்தையுடன் அவனது கிராமத்துக்குப் புறப்பட்டாள். தான் அங்கு வருவதை முன்னதாக அவனுக்குக் கடிதம் எழுதி அறிவித்தாள்.

திரைப் படக் கதையின் திருப்பு முனை இங்கு உருவாகிறது. கத்திச் சண்டை இல்லாமல், குத்துப் போர் இல்லாமல், மல் யுத்தம் இல்லாமல், திரைக் கதைச் சம்பவம் நம்மைப் பரவசப் படுத்துகிறது.

சாந்தா வந்து சேரும் அதே தினத்தில், கோபாலசாமி கிராமத்துக்கு வரப் போகும் செய்தி கோட்டய்யாவுக்கு எட்டியது. தீட்டிய கத்தியுடன் கோபாலசாமியை எதிர் கொள்ளத் தயாரானான் கோட்டய்யா. அவனது ஆத்திரத்தை அதிகப்படுத்த அன்றைக்கு என்று புயலும் மழையும் வீசின.

ரயிலை விட்டு இறங்கிய சாந்தா குழந்தையுடன் கடும் மழையில் சிக்கிக்கொண்டு ரயிலடிக்கு அருகில் இருந்த தோப்பில் இறந்து

விட்டாள். குழந்தை மட்டும் உயிர் தப்பிக் கதறியழுதது. குழந்தையின் அலறல், பகைவனைப் பழிவாங்கும் வெறியுடன் ரயிலடிக்கு ஓடிக் கொண்டிருந்த கோட்டய்யாவின் செவியில் விழுந்து அவனது அசுர வெறியைத் தடுத்தது; அவனுடைய உள்ளமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கியது. கோட்டய்யா குழந்தையின் அலறல் ஒலியைக் கொண்டு அது இருக்கும் இடத்தைக் கொட்டும் மழையில் கண்டு பிடித்து, சாந்தாவையும் குழந்தையையும் வீட்டுக்கு எடுத்துச் சென்றான். ஊரார் உதவியுடன் சாந்தாவின் சடலம் எரிக்கப்பட்டது. இறந்தவள் யாரென்று அறிந்த மனோகர் அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாமல் புகையும் உள்ளத்துடன், புகைந்து கொண்டிருக்கும் தனது அருமை மனைவியின் சிதையைப் பார்த்து உள்ளங் குமுறினான்.


எஸ். வி. ரங்காராவ்

“பங்காரு பாப்பா” படத்தில் கோட்டய்யா ஒரு இணையற்ற பாத்திரம். அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் நடிகருக்கு, கோபம், வெறுப்பு, சோகம், விரக்தி மனப்பான்மை, அதனால் ஏற்பட்ட ஒரு பைத்திய வெறி, இத்தனைக்கும் மேலாக ஒரு தந்தையன்பு, எஜமான விசுவாசம்—ஆகிய இத்தனை குணாதிசயங்களையும் காட்டும் ஆற்றல் வேண்டும். அது கோட்டய்யாவாக நடிக்கும் ஸ்ரீ எஸ். வி. ரங்காராவிடம் அற்புதமாக அமைந்திருக்கிறது.

அனாதைக் குழந்தை (பங்காரு பாப்பா) கோட்டய்யாவின் உள்ளத்தில் அடைபட்டுக் கிடந்த அன்பின் ஊற்றுக் கண்களைத் திறந்து விட்டது. கடுமையும் குரோதமும் பொங்கிய கோட்டய்யாவின் உள்ளத்தில் கனிவும் கசிவும் பொங்கின; அவனுள் இதுகாறும் ஒய்ந்திருந்த மனித இதயம் ஒலிக்க ஆரம்பித்தது. பாப்பாவின் மேல் அன்பைப் பொழிந்து ஆசையோடு வளர்த்தான் கோட்டய்யா.

மனோகரின் இரண்டாம் மனைவி பார்வதிக்கு டாக்டர் செய்த சஸ்திர சிகிச்சையின் பலனாக மக்கட் பேறில்லாத மர வாழ்வு நேருகிறது. மனோகர் இதனால் நொந்து விடுகிறான். சாந்தாவின் பிரதிபிம்பமான பாப்பாவை வளர்க்கக் கோட்டய்யாவுக்கு மறைமுகமாக உதவுகிறான்.

மனோகராக நடிக்கும் ஸ்ரீ கே. ஜெக்கையா பாராட்டுக்கு உரிய முறையில் நடித்திருக்கிறார். கல்லூரி மாணவனாயிருந்து காதல் வாழ்வு வாழ்ந்ததிலிருந்து கடைசியில் பாப்பா—சேகர் திருமணத்தை முடித்து வைக்கும் வரையில் அவர் நடிப்பு நன்றாக அமைந்திருக்கிறது. திரைக் கதையிலும் பல இடங்களில் அவர் உதவி ரொம்ப ரொம்பத் தேவையாயிருக்கிறது. மனோகர் மட்டும் இல்லையென்றால் திரைக்கதையில் பங்காருபாப்பாவை அறிமுகம் செய்து வைப்பது பெரிய பிரச்னையாக இருந்திருக்கும். தன் மனசுக்குள் பொங்கியெழும் உணர்ச்சி வெள்ளத்தை அணை போட முடியாமலும், வெளிப்படையாக யாரிடமும் சொல்ல முடியாமலும் மனோகர் தவித்து விம்முகிறான். திரைக்கதையின் சோகத்துக்கு இது பெரிதும் உதவுகின்றது.

திரைக் கதையில், ஆரம்பத்தில் முளைவிட்டுக் கருகிப் போன காதல், இடைவேளைக்குப் பிறகு மீண்டும் அரும்புகின்றது.

சேகர், மனோகரின் தமக்கை மகன். மக்கட் பேறில்லாத மனோகர் சேகரைத் தன் மகனாகவே பாவித்து வளர்த்தான்.

சிறுமி பாப்பா, சிறுவன் சேகர் இவர்கள் இருவர் உள்ளங்களிலும், வயது வந்ததும், பருவம் தன் சக்தியைப் பொழிந்தது. சிறுபிராயத்து அன்பு காதலாகப் பரிணமித்தது. அதைப் பாழாக்கச் சமூக அந்தஸ்து சீறி எழுந்தது. பணக்காரப் பண்ணையார் வீட்டுப் பையனை, பாட்டாளியின் வளர்ப்பு மகள் பதியாக அடைவதா என்றகேள்வி எழுந்து பண்ணையார் குடும்பத்தைக் குழப்பியது; அவர்களுக்குத் தடை யுத்தரவு போட்டனர்.

நந்தவனத்திலும், தடாக தீரத்திலும், சோலைப் புறத்திலும், வேலிப் புறத்திலும், கடைத் தெருவிலும், கோச்சு வண்டியிலும், ஊஞ்சலிலும் தடையின்றி வளர்ந்து வந்த சேகர்—பாப்பாவின் காதல் பண்ணையார் வீட்டார் தடை யுத்தரவினால் உரம் பெறுகிறது.

பாப்பாவாக நடிக்கும் ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி நன்றாகப் பேசி, நன்றாக நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு நல்ல அம்சம் காணப்படுகிறது.


கல்லூரி மாணவன் மனோகர் நல்ல இளைஞனாகக் காணப்படுகிறான். வருஷங்கள் செல்லச் செல்ல, காலம் அவன் தோற்றத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்துகிறது. அழகாகப் படிய வாரி விடப்பட்டிருந்த அவன் தலையில் வழுக்கை விழுந்து வயதை நினைவூட்டுகிறது. இதேமாதிரி மிடுக்கும் இளமையும் கொண்டு ஊர் சுற்றிய கோட்டய்யா, பிராயம் முதிர்ந்து, பல் உதிர்ந்து, தலை நரைத்து, முதுமைக்கு முரசு கொட்டும் பழங்காலத்து மூக்குக் கண்ணாடியுடனும் தளர் நடையுடனும் காட்சியளிப்பது திரைக் கதை நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாக நினைக்க உதவுகிறது.

இந்தப் படத்தில் டைரக்டர் பி. என். ரெட்டி, படத்தின் கதை யம்சத்திலும், கலை நுணுக்க அம்சங்களிலும் குறை சொல்ல முடியாதபடி நன்றாகத் தயாரித்திருக்கிறார்.

பண்பில் உயர்ந்த பாத்திரங்கள் கொண்ட “பங்காரு பாப்பா” படத்தைக் குடும்பத்துடன் சென்று பார்க்கலாம். நல்ல படம்.



மகிமை வாய்ந்த இந்திய
புராணக் கதையை
அலங்கரிக்கும் சாவித்ரி
இந்தியப் பெண்மையின்
சின்னமாகவும் சிகரமாக
வும் விளங்குகிறள் ......
அந்தப் புனிதவதியைப்
போன்றவளே இந்த......
அருணா பிலிம்ஸ்
டாக்டர் சாவித்ரி
பாட்டு...... நாராயணகவி • மருதகாசி
ஸ்டூடியோ...... ரேவதி • வாஹினி
சங்கீதம்..... G.ராமனாதன்
டைரக்ஷன்: R.M.கிருஷ்ணஸ்வாமி
புரொடக்ஷன்: M.ராதாகிருஷ்ணன்
ARUNA FILMS
அருணா பிலிம்ஸ்.... மதராஸ் -17.



தூசி படர்ந்திருந்ததால் நீல நிறமான ஆகாயம்புகைசூழ்ந்து போய் மங்கலாகக் காணப் பட்டது. தகிக்கும் சூரியன் மேகத் திரை வழியே புதிதாகக் கிளம்பிய நங்கல் நகரத்தைப் பார்க்கும் காட்சி ரம்யமாக இருந்தது. நங்கல் ரயில் நிலையத்தில், அதிகமான ஜன நடமாட்டம் இல்லாத ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் கரும்புகையைக் கக்கிக் கொண்டு நாங்கள் சென்ற ரயில் நின்றது. புதிதாகக் கட்டப்பட்ட ரயில் நிலயம் ஆனதால் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளித்தது. பஞ்சாபில் உள்ள புகழ் பெற்ற ஸட்லஜ் நதிக் கரையில் அமைந்துள்ள ரயிலடியில் பத்திரிகைப் பிரதிநிதிகளை வரவேற்க பக்ரா நங்கல் அணையைச் சேர்ந்த இன்ஜினியர்களும் இன்னும் சில அதிகாரிகளும் காத்துக் கொண்டிருந்தனர். நங்கல் கால்வாயை, மனித உழைப்பின் மகத்தான வெற்றியைக் காண வந்திருக்கும் எங்களைக் கைகூப்பி வரவேற்றனர். கைவேலையின் கலியுக அற்புதமான பக்ரா அணையைக் கட்டி முடிக்கும் திருப்பணியில் இருக்கும் அவர்கள் உற்சாகத்துடன் இருந்தார்கள்.

எங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த விசேஷ பஸ்ஸில் ஏறிக் கொண்டு பக்ரா நங்கல் அணையின் விருந்தினர் விடுதிக்குச் சென்றோம். "ஒரு காலத்தில் இந்த இடத்தில் மனிதர்களே வர முடியாது. முட்கள் நிறைந்த காடும், கொடிய மிருகங்களும், கொள்ளைக்கூட்டத்தாருமாக வாழ்ந்த பயங்கரமான இடமாக இருந்தது" என்று சொன்னார் எங்களுடன் வந்த இன்ஜினியர். நான் வியப்படைந்து, "சென்னையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நகரம் போல் அல்லவா இருக்கிறது. இங்கு காடுகளும், கொடிய மிருகங்களும் இருந்ததாகவே கற்பனை செய்ய முடியவில்லையே!" என்றேன். "நங்கல் கால்வாய் வெட்ட ஆரம்பிக்கும் போதே இந்த நகரையும் நிர்மாணிக்க ஆரம்பித்து விட்டோம்" என்று அவரிடமிருந்து பதில் கிடைத்தது.


"நங்கல் கால்வாய்" என்ற பெயரை அடிக்கடி சொல்லிப் பார்த்துக் கொண்டேன். பாரதத்தின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற வருஷம் மே மாதம் நங்கல் கால்வாயைத் திறந்து வைத்த வைபவம் நினைவுக்கு வந்தது. அடாடா! அந்தக் கால்வாயை 'உலகிலேயே ஒரு அதிசயம்' என்றல்லவா வர்ணித்தார்கள். அந்தக் கால்வாயை ஒட்டி அதன் பெயரில் அமைந்துள்ள நகரத்துக்குள்ளாகவே போகிறோமென்று நினைத்தபோது எனக்கு ஏற்பட்ட ஆனந்த உணர்ச்சியைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன்.


பஞ்சாப் இந்தியாவில் உள்ள மிகச் செழுமையான பிரதேசங்களின் சிகரம் போன்றது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை ஆனந்த மயமானது. இந்தியாவின் உணவுக் களஞ்சியம் என்று பஞ்சாபைப் புகழ்ந்து கூறுவார்கள். கோதுமைப் பயிர்கள் செழிப்பாக வளர்ந்து கோதுமை மலை போலக் குவியும் பிரதேசம்.

இதற்கெல்லாம் காரணம் பஞ்சாபில் ஐந்து நதிகள் பாய்ந்து ஓடுகின்ற அற்புதம்தான். அவற்றிலிருந்து ஏராளமான பாசனக் கால்வாய்கள் பிரிந்து சென்று பஞ்சாபின் மண்ணைப் பொன்னாக்கி வருகிறது. கால்வாய்களில் எப்பொழுதும் ஆற்றுத் தண்ணீர் அளவில்லாமல் சென்று கொண்டிருந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்றபோது பாரதத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்து விட்டதல்லவா! பஞ்சாபின் வளமான பாகம், பொன் கொழிக்கும் பூமி, பாசனக் கால்வாய் உள்ள பிரதேசம் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டது. பாரதத்தின் பகுதி வறண்ட பஞ்சாப்தான்.

நமக்குக் கிடைத்த பஞ்சாபின் பெரும் பகுதி வெறும் பாலைவனம்தான். பஞ்ச நதிகளின் பயனைப் பெறாத பஞ்சப் பிரதேசம்தான். இங்கு வாழ்ந்த மக்கள் தண்ணீர் தண்ணீர் என்று தவித்துக் கொண்டிருந்தார்கள். தண்ணீ





ரைக் காண்பது தெய்வத்தைக் காண்பது போல இருந்தது. அன்றாடம் ரயிலில் தண்ணீர் கொண்டுபோய் அவர்களுக்கு வழங்கி வந்தனர்.

இப்படித் தண்ணீர் தண்ணீர் என்று தவித்த மக்கள் இன்று தண்ணீரில் மூழ்கித் திளைக்கின்றனர். பாலைவனம் போல் இருந்த பூமி பசுமை நிறைந்து காணப்படுகிறது.[இந்த அதிசயத்தை ஏற்படுத்திக் கொடுத்த புதிய கால்வாய்தான் நங்கல் கால்வாய்.

இந்த விவரங்களை எல்லாம் ஏற்கனவே பத்திரிகை வாயிலாகத் தெரிந்து கொண்டிருந்ததால் நங்கல் கால்வாயை ஒட்டிய நங்கல் நகரத்துக்குச் சென்றதும் ஏதோ புனித ஸ்தலத்துக்கு, புண்ணிய நகரத்துக்கு வந்து விட்டது போன்ற பிரமை ஏற்பட்டது.

"நங்கல் நகரம் அமைப்பதற்கு ஒரு திட்டம் போட்டிருந்தோம். போட்ட திட்டத்தில் கண்டதைக் காட்டிலும் முன்னதாகவே நங்கல் நகரைக் கட்டி முடித்து விட்டோம்" என்றார் இன்ஜினீயர். அவர் கூறிய செய்தி என்னை ஆச்சரிய நகரத்தில் தூக்கிப் போட்டது.

சாதாரணமாகத் திட்டத்தில் குறிப்பிட்டதைக் காட்டிலும் அதிக காலம் ஆவதுதான் சர்க்கார் செய்யும் வேலைகளின் வழக்கம். இந்த நகரமும், நங்கல் கால்வாயும் மாமூலுக்கு விரோதமாக முன்னதாகவே முடித்து விட்டார்கள் என்றால் அதைக் கேட்டு ஆச்சரியப் படாமல் வேறு என்ன செய்ய முடியும்!

நங்கல் நகரம்

இந்த ஆச்சரியம் தீருவதற்குள்ளாகவே 'நங்கல் நகரம்' என்னும் புதிய பட்டணத்துக்குள் புகுந்து விட்டோம். ஒழுங்காக பிளான்செய்து அமைத்த நகரமல்லவா! நீள நீளமான சாலைகளும், சாலைகளின் இரு புறத்திலும் வரிசை வரிசையாக வீடுகளும் தென்பட்டன. அணைக்கட்டில் வேலை செய்யும் ஊழியர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் என்று தெரிந்துகொண்டோம். ஒவ்வொரு வரிசையிலுமிருந்த வீடுகள் அச்சில் வார்த்து எடுத்ததுபோல் அழகாக இருந்தன. ஆனால் வீடுகள் வரிசைக்கு வரிசை உத்தியோகத்தின் தரத்துக்கு ஏற்ப அளவிலும் செலவிலும் வித்தியாசப்பட்டது. இங்கு சாதாரணத் தொழிலாளர்களுக்கு என்று அமைந்துள்ள வீடுகளைப் போல் சென்னை, கோவை, மதுரை, தஞ்சை, திருச்சி முதலிய பெரிய நகரங்களில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கு வீடு கிடைத்து விட்டால் மோட்ச வீடே கிடைத்து விட்டது போல் சந்தோஷப்பட்டு விடுவார்கள்.

தொழிலாளர் வீடுகள் சிறிய வீடாக இருந்தாலும் கச்சிதமாகவும், வசதியாகவும் இருந்தன. எல்லா வீடுகளுக்கும் விசேஷ நவீன வசதிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. 'பிளஷ் அவுட்' என்று சொல்லும் சுகாதார வசதிகள் ஒவ்வொரு வீட்டிலும் பொருத்தப்பட்டிருப்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இதனால் காற்று அசுத்தப்படுவதில்லை. சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் மக்களுக்கு நோய் நொடி ஏற்படுவதற்கில்லை. இந்த வசதிகள் பாரத நாட்டில் உள்ள எல்லா கிராமங்களிலும் ஏற்பட வழிசெய்ய வேண்டும். அந்த நல்ல நாள் என்று வருமோ!

ஆயிரக்கணக்கான வீடுகள், தூசி பறக்காத காங்கிரீட் சாலைகள், தபால், தந்தி நிலையங்கள், ஆஸ்பத்திரி, கேளிக்கை நிலையம், பள்ளிக்கூடம் ஆகிய எல்லா வசதிகளும் கொண்ட நகரம் இந்திய இன்ஜினீயர்களாலேயே வெகு விரைவில் கட்டப்பட்டது என்பதை அறிந்தோம். ஆரம்பத்தில் இன்ஜினீயர் சொன்னது போல பயங்கரக் காடுகள் இருந்த இடத்தில் சின்னஞ் சிறு பட்டணமே முளைத்து எழுந்திருக்கிறது! இந்த அதிசயத்தைப் பற்றி



நிருபர்கள் எல்லோரும் தங்களுடைய வியப்பைத் தெரிவித்துக் கொண்டபோது, "இது என்ன அதிசயம்! நங்கல் கால்வாயையும், இப்போது கட்டிவரும் பக்ரா அணையையும் ஒப்பிட்டால் இது ஒன்றும் வியப்பளிக்கும் விஷயம் இல்லை" என்றார் இன்ஜினீயர்.

சர்க்காரே இந்த அணையைக் கட்டுவதால் ஏற்பட்டிருக்கும் பெரிய சௌகரியங்களில் இது முக்கியமானது. யாராவது கண்டிராக்டர்களிடம் விட்டு அணை கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தால் அவர்கள் தொழிலாளர்களுக்கு இவ்வளவு வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்து வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா!

ஐந்து சதுர மைல் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள நங்கல் நகரில் இப்பொழுது நாலாயிரம் வீடுகள் இருக்கின்றன. சுமார் பதினாலாயிரம் மக்கள் அந்த நகரில் வாழ்கின்றனர். பதினாறு லட்சம் மக்கள் சுகமாக வாழ்வதற்கு வசதியாக நங்கல் நகரம் வளருவதற்கு வேண்டிய வளமான எதிர்காலம் இருக்கிறது.

இந்த அற்புதமான நகரமும், அதனால் ஏற்படும் பேறும் எதனால் உண்டானது! ஆற்றை வெட்டியதால்தான் உண்டாயிற்று." அப்படிப் பட்ட அதிசயமான நங்கல் கால்வாயைப் பார்க்கப் போகலாம்.

நங்கல் அணை

ஸட்லஜ் நதியிலிருந்து புதிதாக வெட்டியிருக்கும் நங்கல் கால்வாய் உற்பத்தியாகும் இடத்துக்குச் செல்வோம்.

ஸட்லஜ் நதியில் குறுக்கே அணை கட்டி நீரைத்தேக்கி நங்கல் கால்வாயில் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு வழி செய்திருக்கிறார்கள்.

அணைக்கட்டு ஆரம்பமாகும் இடத்தில் அழகான தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்தத் தூண்கள் ஒவ்வொன்றும் தீபஜோதியாகத் திகழ்கின்றன. அதில் ஒரு தூணில் இந்த அணை கட்டும்போது உயிர்நீத்த உத்தமத் தொழிலாளர்களின் ஞாபகார்த்தமாக அவர்களுக்கு வணக்கம் செலுத்தும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அணைக்கட்டில் பிரவேசிப்பதற்கு முன்பு அதைப்பற்றி இன்னும் சில விவரங்களைத் தெரிந்துகொண்டு விடுவோம். இந்த அணைக் கட்டை இந்த இடத்தில் கட்டுவதற்குக் காரணமாயிருந்தவர் ஒரு வெள்ளைக்காரர். பக்ரா அணையை இப்பொழுது கட்டிக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா! அதை அங்கு கட்ட வேண்டும் என்று உத்தேசம் செய்தவர் நூறு ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாப் கவர்னராக இருந்த ஒரு வெள்ளைக்காரர். ஆனால் வெள்ளையர்கள் நம் நாட்டு நலத்தில் அவ்வளவு அக்கறை காட்டாததினால் அது அப்படியே கிடந்து விட்டது. தேசம் சுதந்திரம் பெற்ற பின்பு திட்டம் வெகு வேகமாகத் தீர்மானிக்கப் பட்டுக் காரியத்திலும் நிறைவேற்றப்பட்டது.

அணையின் எதிரில் அழகாகக் கட்டியிருக்கும் தூண்களையும், வளைவுகளையும் கடந்து அணைக் கட்டின்மீது செல்லலாம். அதன்மேல் அருமையான காங்கிரீட் சாலை அமைந்திருக்கிறது. அதில் சென்று அணையின் நடுவிற்கு வந்து நிற்போம். அங்கிருந்து இருபுறமும் பார்க்கலாம். எதிரில் ஸட்லஜ் நதித் தண்ணீர் சமுத்திரம்போல் தேங்கி நிற்கிறது. இதிலிருந்து ஆற்றின் நடுவில் அணை கட்டினால் தண்ணீர் தேங்கும் என்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெரிந்து கொள்ளலாம்.

அப்படித் தேங்கிய தண்ணீரை நதியின் இடது புறத்தில் புதிதாக வெட்டியிருக்கும் நங்கல் கால்வாயில் திறந்து விட்டால் தங்கு தடையில்லாமல் அது ஓடும் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

அடிவாரத்தில் இருந்து தொண்ணூற்றேழ் அடி உயரமும், ஆயிரம் அடி நீளமும் உள்ள இந்த அணை முழுவதும் சிமிண்டினால் கட்டப்பட்டது. உறுதியான காங்கிரீட் அணை. ஸட்லஜ் நதியிலிருந்து நங்கல் கால்வாய்க்குத் திருப்பி விட்ட தண்ணீர் போக, எஞ்சிய தண்ணீரை ஸட்லஜ் நதியிலேயே விடுவதற்கு வசதியான இருபத்தாறு மதகுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் முப்பது அடி அகலம் உள்ள பிரம்மாண்டமான மதகுகள். அந்த மதகுகளை மூடித் திறப்பதற்கு வசதியான பலம் பொருந்திய கதவுகள் இருக்கின்றன.

அப்படித் திறந்திருந்த மதகுகள் வழியாகத் தாராளமாக ஸட்லஜ் நதியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அணைக்கு இந்தப் பக்கத்தில் இருந்து ஸட்லஜ் நதியைப் பார்த்தால் இரு கரையும் வெள்ளம் போல் தண்ணீர் ஓடிக் கொண்டுதான் இருந்தது. நதியில் அணை கட்டித் தேக்கிய பின் ஓடி வரும் தண்ணீரா இது என்று ஒரே வியப்பாயிருந்தது. ஏதோ நங்கல் கால்வாய் வெட்டித் தண்ணீரைத் தங்களுக்கு அனுப்பாமல் திருப்பி விடுகிறார்கள் என்று பாகிஸ்தான் அடித்துக் கொள்கிறதே, அது எவ்வளவு அபாண்டம் என்பதை அங்கு நேரில் பார்த்து உணர்ந்து கொள்ள முடிந்தது. இந்தியா – பாகிஸ்தான் ஒப்பந்தத்துக்கு அதிகமாகவே ஸட்லஜ் நதியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அது பாரதத்தின் பண்பை, பெருமையை எடுத்துக் கூறிக்கொண்டு கம்பீரமாக ஓடுவது போலிருந்தது.


இத்தகைய உறுதியான அணையை அடிக்கடி பரிசோதித்துப் பார்ப்பதற்கு வசதியாக அணைக்கு உள்ளே பரிசோதனைச் சுரங்கப் பாதைகள் வைத்திருக்கின்றனர். அந்தச் சுரங்கப் பாதைக்குள் இறங்கிச் செல்வோம்.

சோதனைச் சுரங்கப் பாதை


வெளியில் தகிக்கும் வெயிலில் இருந்து விட்டுப் பரிசோதனைச் சுரங்கப் பாதைக்குள் சென்றதும் பஞ்சாபில் கோடை காலத்தில் இருக்கிறோம் என்ற உணர்வே இல்லை. ஜிலு ஜிலு என்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. விசேஷ குளிர் சாதனம் செய்யப் பட்ட அறைக்குள் இருப்பது போன்ற அதிசய பிரமை உண்டாயிற்று.

எங்கள் தலைக்கு மேலே ஸட்லஜ் நதி ஓடிக் கொண்டிருந்தது. பரமசிவன் தலையில் கங்கை யிருப்பதுபோல எங்கள் தலையில் ஸட்லஜ் நதி இருந்தது. அது ஓடிக் கொண்டிருந்த சத்தம் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

"சிமிண்டினால் கட்டிய காங்கிரீட் அணை அல்லவா! அந்த அணையில் ஏதாவது பிளவுகள் ஏற்பட்டால் அதை உடனுக்குடன்


FAMOUS throughout INDIA
Gateway of India, Bombay.
கேட்வே ஆப் இந்தியா கட்டுவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே புகழ் பெற்ற 'வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.' என்ற பெயர் கடியாரங்கள் உலகில் சிறப்புடன் விளங்கி வருகிறது.
உழைப்பாளிகளின் கைகளுக்கும் உல்லாசப் பிரியர்களுக்கும் ஏற்றவாறு பல மாடல்கள் உள்ளன. (ரகத்துக்கான விலைகளில்). நீடித்து உழைக்கவும், சரியாக மணி காட்டவும், இவை நமது நாட்டு நிலைக்கு ஏற்றபடி நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நீங்கள் வாங்கு முன் டையல்மேலுள்ள வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ. என்ற பெயரைக் கவனியுங்கள்.
SOWAR PRIMA
CALENDAR
CENTRE - SECOND
Steel ... Rs. 185
West End Watch Co.
BOMBAY CALCUTTA
Write for FREE catalogue


நீங்களும்
இத்தகைய
அழகை
பெறலாம்
SANDALWO
அழகிய மாதரைப் பற்றி பொறாமை வேண்டாம். அழகின் இரகசியம் உங்கள் கையிலேயே இருக்கிறது. தவறாமல் கேரளா சாண்டல்வுட் சோப்பை உபயோகித்து வாருங்கள். அதன் அற்புத சுகந்தமும், மழமழப்பான செழிப்பான நுரையும் உங்கள் சருமத்தை மிருதுவாக்கி அழகுபடுத்தும்.
கேரளா
சந்தன சோப்
கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கோழிக்கோடு
சென்னை ராஜ்ய தொழில் & வர்த்தக
இலாகாவின் ஒரு பிரிவு



மேலே: ஆயிரம் அடி நீளமுள்ள பிரும்மாண்டமான நங்கல் அணை. கீழே: மூன்று பக்கமும் சிமெண்ட் பூசியுள்ள நங்கல் கால்வாயின் அழகு நிறைந்த தோற்றம். நதியில் இறங்குவதற்கு வசதியாகக் கரையில் இரும்பினால் ஏணி வைத்திருப்பதைப் பாருங்கள்.

பார்த்து அந்தப் பிளவுகளை அடைத்து அணையைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்துவருகிறோம்'' என்றார் இன்ஜினீயர்.

இந்தச் சமயத்தில் ஸட்லஜ்நதியின் குறுக்கே கட்டியிருந்த அணை திடீர் என்று பிளந்து இடிந்து விட்டது போன்ற பேரிரைச்சல் கேட்டது. அடுத்த கணம் எல்லாரும் ஆற்று வெள்ளத்தில் அமிழ்ந்து விட்டது போன்ற ஒரு நிலை. பதினைந்து பத்திரிகை நிருபர்களும் எப்படியோ ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு சோதனைச் சுரங்கப் பாதையின் வாசலுக்குச் சென்று விட்டோம். எப்படித்தான் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் அப்படிச் செய்ய முடிந்தது என்பதை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் கூட வியப்பாக இருக்கிறது. உயிரின்மீது மனிதனுக்கு உள்ள ஆசையை அந்த ஒரு கணத்தில் நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது.

இந்த அதிர்ச்சி நீங்குவதற்குள் இன்ஜினீயர் ' கலீர் ' என்று பெரிய குரலில் எங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. அணைக்கு ஒன்றும் அபாயம் ஏற்படவில்லை. எல்லாரும் உயிருடன் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டோம்.

இன்ஜினீயர் எங்களைக் கூப்பிட்டார். ''இப்பொழுது ஏற்பட்ட சத்தம் அணையின் பிளவுகளுக்குள் சிமெண்ட் குழம்பைச் செலுத்தும் இயந்திரத்தின் சத்தம்'' என்று சொல்லி அந்த இயந்திரத்தைக் காண்பித்தார்.

அணையில் ஆங்காங்கு சிறு சிறு துவாரங்கள் எடுத்திருக்கிறார்கள். அந்தத் துவாரத்தில் ஒரு குழாயைச் செலுத்தி விட்டு அருகில் உள்ள இயந்திரத்தை மின்சார சக்தியினால் இயங்கும்படி செய்து விடுகிறார்கள். அது சிமெண்ட் குழம்பை அந்தத் துவாரத்தின் மூலமாக அணைக்குள் தள்ளுகிறது! அது தள்ளும் பயங்கர வேகத்தில் சிமெண்ட் குழம்பு அணையில் எங்கெல்லாம் கீறல் ஏற்பட்டிருக்கிறதோ, பிளவு உண்டாகி யிருக்கிறதோ அந்த இடத்தில் போய்ப் புகுந்து அணையை முன்னைவிட உறுதியுள்ளதாக மாற்றி விடுகிறது.

இந்த இயந்திரத்தின் சத்தத்தைக் கேட்டுத்தான் எல்லாரும் அப்படி அலறி அடித்துக் கொண்டு ஓடினோம் என்பதைத் தெரிந்து கொண்டபோது வெட்கமாகப் போய்விட்டது. ஆனால் அதை வெளியில் காண்பித்துக் கொள்ளச் சங்கோஜப்பட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் பயந்து ஓடியதற்குக் கூறிய காரணங்கள் பல ரஸமான சிறுகதைகளாகும்!

மீண்டும் வந்த வழியே திரும்பாமல் அங்குள்ள ' லிப்ட் 'டின் மூலம் அணைக்கு மேலேயே ஏறி வந்து விட்டோம். வெளியில் பஞ்சாபின் கொடிய வெயில் எங்களை வாட்டிப் பிழிய ஆரம்பித்து விட்டது.

ஆனால் அந்த வெயிலின் கொடுமை புகழ் பெற்ற நங்கல் கால்வாயைப் பார்த்தவுடன் பறந்தோடிப் போய் விட்டது.

நூற்று நாற்பது அடி அகலமும், இருபதரை அடி ஆழமும், நாற்பது மைல் நீளமும் உள்ள அந்த அற்புதக் கால்வாயை வெட்டியது ஒரு அதிசயம். அதைவிட அதிசயம் அந்த நாற்பது மைல் நீளமும் மூன்று புறமும் அதற்குச் சிமிண்ட் காங்கிரீட் போட்டிருப்பது. உலகிலேயே இந்தமாதிரி கான்கிரீட் போட்ட நீளமான கால்வாய் நங்கல் கால்வாய் ஒன்றுதான் என்பதை மறந்து விடக் கூடாது.

தண்ணீரே காணாத பிரதேசத்தின் வழியாக எத்தனையோ பல இயற்கை முரண்பாடுகளை எல்லாம் தாண்டிச் செல்லும் அந்த அற்புதக் கால்வாயை வெட்டும்போது அதில் ஈடுபட்டு உழைத்த தொழிலாளியைச் சந்தித்தேன். அவன் சொன்ன கதையைக் கேளுங்கள்.

நங்கல் கால்வாய்

வருஷம் முழுவதும் தண்ணீர் ஓடும் வசதியுடையது ஸட்லஜ் நதி. அந்த நதியின் இரு கரையும் வெள்ளம் போல் தண்ணீர் அலை மோதிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது. அந்தத் தண்ணீரைத் தொட்டால் தொட்ட பாகம் உணர்ச்சியற்றுப் போகும் அளவுக்குக் குளிர்ச்சியான நீர். அந்த நீர் மனிதர்களைப் பார்த்துக் கன்னம் குழியச் சிரிப்பது போல் சுழியிட்டுக் கொண்டு ஸட்லஜ் நதியில் ஓடுகிறது. அந்தத் தண்ணீர் ஓட்டத்தில் கூட

மற்ற குழந்தை கண்மண் தெரியாமல் ஓடுவது போன்ற ஒரு குதூகலம் குடியிருந்தது.

அந்தத் தண்ணீர் நங்கல் கால்வாயில் 'குடுகுடு' என்று சத்தம் போட்டுக் கொண்டு பாய்ந்து ஓடுவதைப் பார்த்துக் கொண்டு ஒரு தொழிலாளி உட்கார்ந்திருந்தான். தலையிலே முண்டாசும், முகத்திலே மீசையும் தாடியுமாகக் காட்சி அளித்தான் அந்தப் பஞ்சாபித் தொழிலாளி. ஆண்மையையும் அன்பையும் சித்திரித்தன அவன் முகம்.

உழைப்பினால் உரமேறியிருந்தது அவன் கைகள். நிமிர்ந்த மார்புடன் உட்கார்ந்திருந்த அவன் தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தான்.

“நங்கல் கால்வாய் வெட்டிய போது எனது உழைப்பை எத்தனையோ தரம் பாராட்டினார்கள். இப்போது பக்ரா அணைக்கட்டு கட்டுவதற்கு உழைத்து வருகிறேன். அங்கும் என் உழைப்பைப் பாராட்டத்தான் செய்கிறார்கள்” என்று சொல்லி என்னைப் பார்த்தான்.

திடீரென்று சுறுசுறுப்பு அடைந்தவன் போல் பேசினான். அவன் கூரிய கண்கள் உற்சாக மிகுதியினால் மினுமினுத்தன.

“கால்வாய் வெட்டியதை இப்போது நினைத்தால் பயமாகத்தான் இருக்கிறது. மண்ணுக்குக்கூட ஏதோ ஒரு உணர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. பூமியை வெட்டி மண்ணைத் தோண்டும் போது பூமி எங்களை எதிர்ப்பது போல்தான் இருந்தது. நாங்கள் பூமியுடன் போராடத்தான் செய்தோம். அப்படிப் போராடும்போது எங்கள் இதயங்கள் குவிந்தன ; தலைகள் கனத்தன ; எலும்புகள் வலித்தன. இதை எத்தனையோ பேர் அனுபவித்தோம். உதய வேளையில் மண் தோண்ட ஆரம்பிப்போம். மாலைவரையில் வெட்டுவோம். இரவு நேரத்திலும் பலர் வேலை செய்திருக்கிறார்கள். எங்களோடு சேர்ந்து இயந்திரங்களும் வாயில்லாத ஜீவன்களான கோவேறு கழுதைகளும் பூமியுடன் போராடத்தான் செய்தன. அப்பொழுது ஏற்பட்ட இயந்திரங்களின் ஓசையும், மனிதர்களின் கலகலப்பான பேச்சுக் குரலும் கேட்டு அனுபவிக்க வேண்டிய அருமையான இன்ப ஒலிகள் !”

நங்கல் கால்வாயை ஒருதரம் பார்த்தான். அதில் வினாடிக்கு 12,400 கன அடி தண்ணீர் ஓடும் அதிசயமான வேகத்தையும் பார்த்தான்.

“தண்ணீர் என்னமோ தடங்கல் இல்லாமல் ஓடுகிறது. அப்படி அது ஓடுவதற்கு நாங்கள் எவ்வளவு பாடுபட்டோம் ! பூமியிலிருந்து சில இடங்களில் ஐம்பது அடி உயரமும், சில இடங்களில் எழுபது அடி ஆழமும், இந்தக் கால்வாய் எதிர்த்து நேராகச் செல்லவேண்டியிருந்தது. அந்த இடங்களில் எல்லாம் செல்லும் போது, பூமி மட்டத்துக்கு மேலே உயர்ந்து நிற்கும் அந்த உயரமான இடங்களில் பூமியின் தலையை வெட்டி வீழ்த்துவதுபோல அந்த மேடுகளைக் கரைத்துக் கொண்டிருந்தோம். நாங்கள் மனம் தளராமல் உழைத்தோம்” என்றான். சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு பெருமையோடு பேசினான்:

“மனிதன் மட்டும் தன்னுடைய சக்திகளை உணர்ந்து ஒற்றுமையுடன் வேலை செய்து விட்டானானால் அவனால் சாதிக்க முடியாத காரியமே ஒன்றுமில்லை. அதற்கு மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டும். அந்தச் சுதந்திரத்தையும் பயனுள்ள காரியங்களில் செலவிட வேண்டும். அப்போது மனிதன் எத்தனையோ கஷ்டங்களைச் சகித்துக் கொள்ள நேரிடும். அதைப் பொறுமையுடன் அனுபவிக்கத்தான் வேண்டும். இந்தக் கால்வாயை வெட்டுவதற்குள் அநேகர் சிக்கில் விழுந்து செத்துப் போனார்கள். பலர் மண் வெட்டும் போது காயம் பட்டுப் போனார்கள். இதையெல்லாம் மீறி ஆற்றை வெட்டிக் கொண்டுதான் இருந்தோம். நங்கல் கால்வாயை வெட்டும்போது கஷ்டமான மேடு பள்ளங்களைத் தவிர பயங்கரமான காட்டாறுகள் வேறு குறுக்கிட்டன. ஒன்று, இரண்டா! ஐம்பத்து மூன்று காட்டாறுகள் குறுக்கே வந்தன. அந்த ஆற்றைக் கடப்பதற்கு வேண்டிய அதிசயமான பல இன்ஜினீயரிங் பாலங்களை நிர்மாணித்துக் கொண்டு மேலே சென்றோம்.

“உழைப்பதால் ஏற்படும் உற்சாகமான ஒலிகளைக் கேட்டுக் கொண்டே முன்னேறிக் கொண்டிருந்தோம். கால்வாயின் வேலை முடியும் தருணம் நெருங்க நெருங்க வெற்றி வீரர்களின் வெறி மகிழ்ச்சி எங்களைப் பற்றிக் கொண்டது. பிசாசுகள் போல உழைத்தோம். சோர்வின்றி உழைத்தோம். உழைப்பின் பலனால் நாங்கள் குழந்தைகளாகி விட்டோம்.

“முடிவாகக் கால்வாய் முழுவதையும்வெட்டி விட்டோம். கால்வாயின் மூன்று புறமும் சிமின்ட் பூச்சு வேலையும் செய்து முடித்து விட்டார்கள். கடைசியாகச் சென்ற ஆண்டு நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு தமது பொற் கரங்களால் இந்தக் கால்வாயில் தண்ணீரைத் திறந்து ஓட விட்டார்.

“கால்வாய்க்குள் தண்ணீர் புகுந்து வேகமாக ஓடியது. அப்போது நாங்கள் எல்லாம் ஆனந்தக் கண்ணீர் வடிய நின்று அந்தக் கால்வாயைப் பார்த்து அனுபவித்தோம். வெற்றி கோஷங்கள் இடியென அதிர்ந்தன! கோலாகலமான ஒலிகள் வானத்தை எட்டின!

“எங்களில் பலர் கால்வாய்க்குள் ஓடிய தண்ணீரில் 'பொதுகடீர்' என்று குதித்தோம். தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுந்து ஆனந்தப் பட்டோம். தண்ணீரைக் கட்டி அணைத்து முத்தமிட்டோம். தண்ணீர் தண்ணீர் என்று தவித்துக் கொண்டிருந்த கிராமத்து மக்கள் கடவுளே நேரில் வந்து விட்டது போல மகிழ்ந்து போனார்கள். பக்தியோடு மலர் மாலைகளும், தீபங்களும் விட்டு ஆனந்தப்பட்டார்கள். ஒரு நாள் பூராவும் இருபத்து நாலு மணி நேரமும் உணவை மறந்து தண்ணீரில் மூழ்கித் திளைத்து மகிழ்ந்தார்கள்” என்று சொல்லி விட்டு “இதுதான் நங்கல் கால்வாய் வெட்டிய கதை” என்றான் அந்தத் தொழிலாளி.

ஏதோ உணர்ச்சி நிறைந்த கற்பனைக் கதையைக் கேட்டது போலிருந்தது இந்த உண்மைக் கதை. நங்கல் கால்வாய் நமது இந்திய இன்ஜினீயர்களின் அபூர்வ சாதனைகளுக்கு ஒரு அத்தாட்சி. நம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

இந்தக் கால்வாயை விட அதிசயமான அணை ஒன்று, நங்கலிலிருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் இதே ஸட்லஜ் நதியில் கட்டி வருகிறார்கள். பக்ரா என்னும் இடத்தில் கட்டி வரும், உலகிலேயே மிகப் பெரிய இந்த அணையைப் பார்க்கலாம், கிளம்புங்கள். (தொடரும்)

இரு உள்ளங்கள்



சரஸன்

“அப்பா! எனக்கு இன்னொரு மாம்பழம் கொடு!”

“எதற்காகடா? உனக்குத்தான் முழுசா ஒன்று கொடுத்திருக்கேனே!”

“பக்கத்து வீட்டுப் பாலுவுக்குத் தரணும்” என்றான் மணி.

தந்தைக்குக் கோபம் வந்து விட்டது. “போடா! உனக்கு வேலையில்லை? ஊராருக்கெல்லாம் தரவேணும் என்கிறாயா? உன் வரையில் பார்த்துக்கோ!” என்று அதட்டினார் அவர், மணியை.

மணியின் முகம் கடுகளவாய் விட்டது. தனக்குக் கொடுக்கப்பட்ட மாம்பழத்தைக் கையில் வைத்துக் கொண்டே, ஏமாற்றத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

மணியின் மன உணர்ச்சியைக் கோதண்டராமன் எப்படி அறிய முடியும்? அவர் தம் வேலையை பார்க்கப் போய் விட்டார்.

மணி தன் கையில் உள்ள பழத்தைத் தின்ன மனமில்லாமல், ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டான். அவன் மனம் துடியாய்த் துடித்தது. தன் அத்யந்த நண்பன் பாலுவுக்குத் தராமல் அதைத் தின்ன அவன் எப்படித் துணிவான்?

பாலுவும் மணியும் இணை பிரியாத தோழர்கள். வயது இருவருக்கும் ஆறுதான் ஆகின்றது. பள்ளியில் ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள்.

இருவரும் எதைச் சாப்பிட்டாலும், பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதுதான் வழக்கம். ஒரு சமயம், பாலு தன் வீட்டில் செய்த பொருவிளங்காயை, தன் நண்பன் மணி ஊரில் இல்லாத காரணத்தினால், அவன் திரும்பி வரும் வரை வைத்துக் காப்பாற்றிக் கொடுத்தான் என்றால், பார்த்துக் கொள்ளுங்கள். பாலுவின் வீட்டாரைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லித் தான் ஆக வேண்டும்.

பாலுவுக்கு மணியின்பேரில் உள்ள பிரியத்தை அவர்கள் உணர்ந்து கொண்டு, மணிக்கு ஒரு பகுதி ஒதுக்கி வைப்பது வழக்கம்.

ஆனால் மணியின் வீட்டில் நடைமுறைப் பழக்கம் வேறு விதமானது. அவனுடைய பெற்றோர்கள் இதயக் கனிவு இல்லாதவர்கள். அத்துடன் குழந்தைகளின் உள்ளத்தை ஊடுருவிப் பார்த்தறியும் திறனை ஆண்டவன் அவர்களுக்கு ஏனோ அளிக்கவில்லை.

தங்கள் மைந்தன் மணி, பாலுவுக்கு எந்தத் தின்பண்டத்தையாவது கொடுப்பதைப் பார்த்து விட்டால் அவர்கள் அவனைக் கடிந்து கொள்வார்கள்.

ஒரு சமயம், மணி பாலுவுக்குத் தன் வீட்டில் செய்த மைசூர்ப்பாகைக் கொடுத்து விட, அதை அவன் தந்தை பார்த்து விட்டு, அவனை அறைந்த அறையை அவன் மறக்கவே முடியாது. மணிக்கு ஒன்றும் புரியவில்லை. ‘பாலு தன் வீட்டில் எந்தப் பண்டம் செய்தாலும், தனக்குக் கொடுக்கத் தவறுவதில்லை. தன்னைத் தேடிக் கொண்டு வந்து, கொடுத்து விட்டுப் போகிறான். ஆனால் தன்னால் மட்டும் அவனுக்கு ஒன்றும் தர முடிவதில்லையே! அப்படி ஏதாவது கொடுக்க விரும்பினால், அதைத் திருட்டுத்தனமாய்த் தான் தரவேண்டியிருக்கிறது. இது ஏன்?’ என்று அவனுடைய பிஞ்சு மூளைக்குச் சிறிதும் எட்டவில்லை.

அன்று பள்ளிக்கூடத்தில் மணி பாலுவைச் சந்தித்தான். “மணி! இந்தா பிஸ்கட். ஊரிலிருந்து என் அத்திம்பேர் வந்திருக்கிறார். அவர் வாங்கிக் கொண்டு வந்தார்” என்று கூறி இரண்டு பிஸ்கட்டுகளைக் கொடுத்தான் பாலு. அதைப் பெற்றுக்கொள்ளத் தயங்கியபடியே, மணி, “வேண்டாம், பாலு!” என்றான்.

“ஏன் வேண்டாம்?” என்று கேட்டான்

"பாலு! நீ உனக்கு எது கிடைத்தாலும் எனக்குத் தராமலிருப்பதில்லை. ஆனால் என்னால் உனக்கு ஒன்றும் கொடுக்க முடியவில்லை. எனக்கும் உனக்கு எல்லாம் தர வேண்டும் என்று ஆசைதான். ஆனால் என் அப்பா அம்மா கூடாது என்கிறார்கள்" என்று துயரத்துடன் கூறினான் மணி.

பாலுவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவனுக்கும் காரணம் புலனாகவில்லை. தன் வீட்டில் தன் பெற்றோர் 'மணிக்கும் கொடு' என்கிறார்கள். ஆனால் மணியின் வீட்டில் ஏன் தடுக்கிறார்கள் என்று யோசித்தும் விடை கிடைக்கவில்லை.

"மணி! நீ சாப்பிடாமல் எனக்குப் பிடிக்காது!" என்று மணியின் பையில் பிஸ்கட்டுகளைத் திணித்து விட்டான் பாலு. மணியினால் மறுக்க முடியவில்லை.

மணியின் சித்தப்பா கல்கத்தாவில் பெரிய வேலையில் இருக்கிறார். அவரிடமிருந்து ஒரு நாள் ஒரு பார்ஸல் வந்தது மணியின் தந்தைக்கு.

அதில் ரஸகுல்லாக்கள் இருந்தன. 'கல்கத்தா ரஸகுல்லா என்றால் கேட்பானேன்? வீட்டில் எல்லாரும் உற்சாகத்துடன் பார்ஸலைப் பிரித்து, அதை ருசிக்கத் தொடங்கினார்கள். மணியும் தன் பங்கைப் பெற்றான். ஆனால் மற்ற எல்லாருக்கும் இனித்த ரஸகுல்லா அவனுக்கு மட்டும் கசந்தது ஏன்? காரணம் தெரிந்ததுதான். தன் நண்பன் பாலுவுக்கு அதைத் தர முடியவில்லையே என்பதுதான். இதை எண்ணியபோது தன் பெற்றோர் பேரில் கோபம் கோபமாய் வந்தது அவனுக்கு.

அப்போது பாலு அங்கு வந்து நின்றான். அவனைக் கண்டதும் மணி மகிழ்ச்சி கொண்டான். அடுத்த கணம் முகம் துவண்டு விட்டது. தன் கையில் உள்ள ரஸகுல்லாவையும் தன் தந்தையையும் மாறி மாறிப் பார்த்தான்.

பாலுவைக் கண்டதும் மணியின் தந்தை, "என்னடா? எதற்காக வந்து நிற்கிறாய்?" என்று அதட்டியபடியே 'சள்'ளென்று அவனிடம் எரிந்து விழுந்தார்.

பாலு அரண்டு போய் விட்டான். அவர் ஏன் அம்மாதிரி தன் பேரில் எரிந்து விழுகிறார் என்று அவனுக்குப் புலப்படவில்லை. மௌனமாகவே மணியை நோக்கியபடி அசைவற்று நின்றான்.

"போடா! மணி இப்போது வர மாட்டான். போ!" என்று முகத்தில் அறைந்தாற் போலக் கூறினார். ஏமாற்றத்துடன் பாலு திரும்பினான். அதைக் கண்டு மணி மிகவும் வேதனைப்பட்டான்.

சற்று நேரத்துக் கெல்லாம் மீண்டும் வாசலில் பாலு வந்து நின்றான்.

"என்னடா? மறுபடியும் வந்து பிராணனை வாங்குகிறாய்? மணி இப்போது வர மாட்டான் என்றுதான் உனக்குச் சொல்லியனுப்பினேனே!" என்றார் மணியின் தந்தை கோபத்துடன். அவர் முகத்தில் என்றும் கொன்றும் வெடிப்பதைப் போலக் கோபம் பொங்கி வழிவதைக் கண்டு பாலு சற்றுப் பின் வாங்கினான். ஆனால் தன் நண்பனைத் தந்தை அவமானப் படுத்துவதைக் கண்டு மணிக்குத் துக்கத்தினால் அழுகையே வந்து விடும் போலிருந்தது.

ஆனால் பாலு தயங்கியபடியே, "மாமா! எங்க மாமா காஷ்மீரில் இருக்கிறார். அவர் இன்று ஒரு கூடை ஆப்பிள் அனுப்பினார். ரொம்ப நன்றாயிருக்கிறது. எங்கள் அப்பா மணிக்கும் கொடுக்கச் சொன்னார். அதற்காகத்தான் சற்று முன்பு நான் மணியை அழைத்துக் கொண்டு போக வந்தேன். அவன் வரமாட்டான் என்று நீங்கள் சொன்னதால், அப்பா என்னையே கொண்டு போய்க் கொடுத்து விட்டு வா என்று சொன்னார்" என்று கூறி விட்டு மணியின் அருகில் நெருங்கி வந்து, "இந்தாடா மணி!" என்று அவன் கையில் ஆப்பிள் பழங்களைத் திணித்து விட்டு, பதிலுக்குக் கூடக் காத்திராமல் ஓடிவிட்டான்.

மணி கையில் பழங்களுடன் பிரமித்துப் போய் நின்றான்.

பாலுவினுடைய தந்தையின் பரந்த உள்ளத்துடன், தம் அற்பத்தன உள்ளத்தையும் ஒப்பிட்டுப் பார்த்த மணியின் தந்தை ஆவேசம் வந்தவரைப் போல, "மணி! மணி! போய்ப் பாலுவைச் சீக்கிரம் அழைத்துக் கொண்டு வாடா" என்று கூறினார்.

அப்பா அவனுக்கு ரஸகுல்லா கொடுக்கத்தான் கூப்பிடுகிறார் என்பதை மணியின் குழந்தை உள்ளம் எப்படித்தான் புரிந்து கொண்டதோ தெரியவில்லை. "பாலு, பாலு!" என்று மகிழ்ச்சி வெறியில் கூவிக் கொண்டே அவன் வீட்டை நோக்கி வேகமாக ஓடினான்.

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு: செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனம் 7 — ராகம் — கேதாரம் — ரூபக தாளம்

பல்லவி

ஸகல புவன நாயகா நின்
தாள்பணிந்த எங்களைக் காத்தருள் (ஸகல)

அனுபல்லவி

புகலறியேன் கடல் சூழும்
புவிமீது சிவனே (ஸகல)

சரணம்

நிகழு முலகு சதமென நினைந்து
நெறி பிறழ்ந்து உழன்றேன்
சிதம்பரம் வளர் பொன்னம்பலவாணா
சிவகாமி ரமணா (ஸகல)

கேதார ராகம் 29-வது மேளமான தீர சங்கராபரணத்தில் பிறந்தது.
சதுச்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், காகலி நிஷாதம்.

ஆரோஹணம்: ஸ ம க ம ப நி ஸ்

அவரோஹணம்: ஸ் நி பா ம கா ரி ஸ ரி க ஸா

உபாங்கராகம்

இதை திச்ரகதி ஆதிதாளமாகவும் போட்டுப் பாடலாம்.

பல்லவி — 1 களை

ஸா நி — ஸா மா கா மா || பா ஸ்ா — நி ஸ்ா ; மா ||
ஸ க ல பு வ ன நா - ய கா நின்

பா ; — ஸ் நி பா ப ம க ம || ப நி ப ம — கமகா ,ரி ஸா ஸ நி ||
தாள் ப - ணி ந் த - எ ங் - க - ளை - க்கா - - - த்த ருள் -

ஸா நி — ஸா மா கா மா || பா ஸ்ா — நி ஸ்ா ; க ம ||
ஸ க ல பு வ ன நா - ய கா நி ன் -

பா , ரி — ஸ் நி பா பம கம || ப நி ப ம — கமகா ,ரி க ரி ஸ நி ||
தா ள் - ப - ணி ந்த - எ - ங்க - ளை - க்கா - - - த்த - ருள் -

ஸா ஸ நி — ஸா மா கா மா || க ம ப நி — ப நி ஸ்ா ; ஸ் நி ||
ஸ க - ல பு வ ன நா - - - ய - கா நி ன் -

ம் ம் க் ரி — ஸ் நி ப ம கம பஸ் || நிஸ் ,நி பா — ,ம ம க ரி ஸ ஸ நி ||
தான் - - ப - ணி - ந்த - எ - ங்க - - ளை - க்கா - - த்தருள் -

ஸா ஸ நி — ஸா மா கா மா || க ம ப நி — ப நி ஸ்ா ; ஸ் நி ||
ஸ க - ல பு வ ன நா - - - ய - கா நின் -

ம் ம் க் ரி — ஸ் ரி ஸ் நி பம பநி || ஸ்ரிஸ்ா,நி — பநிபா,ம கமகா,ரி ஸஸநி ||
தா - - - ள்ப - ணி - ந்த - எ - ங்க - - - ளை - - - க்கா - - த்தருள் -

ஸா நி — ஸா மா கா மா || பா ஸ்ா — நி ஸ்ா ; ; ||
ஸ க ல பு வ ன நா - ய கா

அனுபல்லவி

பா பா — ஸ்ா நி ஸ்ா ; || ; ; — ; ; ஸ் ரி ஸ் நி ||
பு க ல றி யேன்

பா பா — ஸ்ா நி ஸ்ா || ஸ்ா ஸ்ா — க்ம் க்ரி ஸ்ரிஸ் ||
பு க ல றி யேன் க டல் சூ - - - - - - -

ஸ்ா ; — ; ; ஸ்ா , நி || பா , ம — கா , ரி ஸ ம க ம ||
ழும்

பா பா — ஸ்ா ஸ்நி ஸ்ா ; || ஸ்ா ஸ்ா — க்ம் க்ரி ஸ்ரிஸ் ||
பு க ல றி - யேன் க டல் சூ - - - - - - -

ஸ்ா ; — ஸ்ா ஸ்ா ஸ் நிபா ; || பா , ம — கா க ரி ஸ ரி ஸ ||
ழும் பு வி மீ - - து - சி வ - னே - -

பா பா — ஸ்ா ஸ்நி ஸ்ா ; || ஸ்ா ஸ்ா — க்ம் கா ரி ஸ் ரிஸ் ||
பு க ல றி - யேன் க ட ல் சூ - - - - - -

ஸா			ஸா ஸ் நி ரி ஸா நி	‖	பா , ம	—	க ம க ரி ஸ ரி ஸ	‖
மூம்			பு வி - பீ - -		து -		சி - வ - னே - -	
பா	பா	—	ஸா ஸ் நி ஸா ;	‖	ஸா ஸ்ப்மா	—	க்ம் கா ரி ஸ் ரி ஸ்	‖
பு	க		ல றி - யேன்		க ட - ல்		கு - - - - - -	
ஸா	;	—	ஸ் நி ஸ் ரி ஸ் நி ப ம	‖	க ம ப நி	—	ஸ் நி ப ம க ரி ஸ நி	‖
மூம்			பு - வி - பீ - - -		து - - -		சி - வ - னே - - -	

‖ ஸகல புவன நாயகா ‖

சரணம்

கா	மா	—	பா ம க மா பா	‖	க ம ப நி	—	நிபா, ப ம கா மா	‖
நி	த		மூ மூ - ல கு		ச - த -		மெ - ன - நி னை	
பா	;	—	; ; ; ;	‖	நி ஸா நி	—	பா ; ; , ம	‖
ந்து								
கா	மா	—	பா ம க மா பா	‖	பா ப நி	—	நிபா, ப ம கா மா	‖
நி	த		மூ மூ - ல கு		ச த -		மெ - ன - நி னை	
பா	;	—	க ம ப நி பா ப ம	‖	ம கா ரி	—	ரி ஸ ஸா, க ரி கா ஸ	‖
ந்து			நெ - றி - பி ற ம் -		ந்து - -		உ - ழ - ன்றே - ன்	
கா	மா	—	பா ம க மா பா	‖	பா ஸ் நி	—	பா ப ம கா மா	‖
நி	த		மூ மூ - ல கு		ச த -		மெ ன - நி னை	
பா	;	—	ப ரி ஸ் நி பா ப ம	‖	ம கா ரி	—	ரி ஸ ஸா, க ரி கா ஸ	‖
ந்து			நெ - றி - பி ற ம்		ந்து - -		உ - ழ - ன்றேன் - -	
பா	பா	—	பா ஸா ஸா ஸா	‖	ஸா ஸா	—	க்ம்கா க் ரி ரி ஸா ,க்	‖
சி	தம்		ப ரம் வளர்		பொ ன்னம்		ப - - ல - வா - -	
ரி கா ஸ்		—	ஸா ஸ் நி ரி ஸா நி	‖	பா , ம	—	க ம க ரி ஸ ரி ஸ	‖
ணு - -			சி வ - கா - -		மீ -		ர - ம - ணு - -	

‖ ஸகல புவன நாயகா ‖


அநுபல்லவியில் உள்ள ஸங்கதிகளைப் பாடிக் கொள்ளவும்.



உங்கள்
பாதுகாப்புக்கு
VICKS Inhaler
எப்பொழுதும் கவனியுங்கள்
தங்க சுகாதார முத்திரையை
அடைத்த மூக்கைத்
துரிதமாகச் சுத்தம் செய்கிறது!
VICKS Inhaler
விக்ஸ்
இன்ஹேலர்



ஆஹா,
போட்டால்...
போடணும்
மைதீன்
புகையிலை
MYDEENCO
E.S.மைதீன் & கோ
கும்பகோணம்.



DEPENDABLE
SERVICE
அனேக மயர்ஸ் பம்புகள் சென்ற 25 வருஷங்களுக்கு மேலாகத் திறம்பட சேவை செய்து வருகின்றன. உயர்ந்த முறையில் மயர்ஸ் பம்புகள் தயாரிக்கப் படுவதாலும், விற்பனைக்குப் பிறகு உடனுக்குடன் சுலபமான முறையில் சேவை அளிக்கப்படுவதாலும் சிறந்து விளங்குகின்றன.
MYERS
AUTOMATIC
ELECTRIC PUMPS
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிட்.
45, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

"சின்ன அம்மா! சின்ன அம்மா!"

"யாரது! கிழவியா! வா! வா! எங்கே வந்தாய் இவ்வளவு தூரம்!" என்று கேட்டுக் கொண்டே வெளித் தாழ்வாரத்துக்கு வந்தேன் நான்.

"சும்மாத்தான் உங்களைப் பார்த்து விட்டுப் போகலாமின்னு வந்தேனுங்க..." என்று கூறிக் கொண்டே கீழே உட்கார்ந்தாள் கிழவி.

"ரொம்ப இளைத்துப் போய் விட்டாயே!" என்றேன் நான்.

"ஆமாமுங்க. சும்மா சும்மா ஏதாவது உடம்புக்கு வந்து கிட்டேயிருக்குதுங்க, ஆறு மாசமா!" என்று கூறிய



ஒரு ரூபாய்

ஜயலக்ஷ்மி

கிழவி தன் இடுப்பிலிருந்த சுருக்குப் பையை எடுத்து வெற்றிலை போடத் தொடங்கினாள்.

"உனக்கோ வயதாகிக் கொண்டே போகிறது! எந்தச் சமயம் எப்படியிருக்குமோ யார் கண்டார்கள்! ஏன் கிழவி! பொன்னிக்குச் சீக்கிரமா கலியாணத்தைப் பண்ணி விடுவது தானே!" என்றேன்.

"நானு மாட்டேங்கிறேன்! அந்தப் பெண்ணு தான் கல்யாணமே வேண்டாம் என்று ஒரே பிடிவாதமாக இருக்காளே! அவளுடைய முறைமைக்காரனுங்க ரெண்டு பேரு இருக்காங்க. யாரையாவது ஒருத்தனைக் கட்டிக்கக் கூடாது! பிடி கொடுத்தே பேச மாட்டேங்கிறாளே அவள்! ஒரு வருஷமாக அந்தப் பையன்கள் ரெண்டு பேரும் ஒருத்தன் மாற்றி ஒருத்தனாக வந்து என்னைப் பிடுங்கித் தின்னுட்டுப் போறானுங்க. இவளானால் கலியாணமே வேண்டாம், அல்லி ராஜ்யம் பண்ணப் போகிறேன் என்கிறாள். எனக்கு இரவில் தூக்கம் பிடிக்கவில்லை. தன்னாத காலத்திலே வயசுப் பெண்ணை வீட்டுலே வைத்துக் கொண்டிருக்கிறதுன்னா லேசுங்களா அம்மா!" என்று சொன்ன கிழவிக்கு ஏனோ குரல் தழதழத்தது.

"பொன்னிக்கு அந்த முறைப் பையன்களில் யாரையும் கட்டிக்கப் பிடிக்கவில்லையோ என்னமோ!" என்றேன் நான் சிரித்துக்கொண்டே.

"அதையாவது என்கிட்டே சொல்லணும், அல்லவா!" என்று கேட்டாள் கிழவி.

"வெட்கப்படுகிறாள் போலிருக்கிறது! ஏன் கிழவி! நான் தான் சொல்லுகிறேனே! பொன்னியை எங்க கார் டிரைவர் கண்ணப்பனுக்கே கட்டிக் கொடுத்துடு. அவளுக்கு அவன் மேலே தான் ஆசை. அவனுக்கும் பொன்னிமேலே உயிர்!" என்றேன் நான் திடுதிப்பென்று.

"ஏன் அம்மா, உங்ககிட்டே அவள் ஏதாவது சொன்னாளா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"இல்லை, கிழவி! நானாகவேதான் தெரிந்து கொண்டேன்!" என்று கூறினேன் நான்.

"எப்படிங்கம்மா தெரிஞ்சுக்கிட்டீங்க! ஏதாவது தப்பிதமாக நடந்துக்கிட்டிருப்பாளா அம்மா, பொன்னி!" என்று மிகுந்த கவலையுடன் என்னைக் கேட்டாள் கிழவி.

"சே! சே! என்ன கிழவி நீ! பொன்னி அப்பேர்ப்பட்ட பெண் இல்லை!" என்றேன் நான் அழுத்தமாக.

"அப்படியானால் விஷயத்தை விவரமாகச் சொல்லுங்களேன்!" என்று கெஞ்சமாட்டாத குறையாகக் கேட்டாள் கிழவி.

"சொல்லுகிறேன், கிழவி. பேசாமலிரு!" என்று அவளை அதட்டி விட்டுக் கூறத் தொடங்கினேன்.

போன மாதத்திலே ஒருநாள். ஐயா ஆபீஸுக்குப் போகக் கிளம்பிக் கொண்டிருந்தார். எனக்கு அப்போது அவசரமாக இரண்டு ரூபாய் வேண்டியிருந்த படியால் அவரைக் கேட்டு வாங்கிக் கொண்டேன். பிறகு அவர் காரில் ஏறிக்கொண்டு ஆபீஸுக்குப் போய் விட்டார். கண்ணப்பன் தான் காரை ஓட்டிக் கொண்டு போனான்.

அதே சமயம் காம்பவுண்டுக்கு அப்பாலிருந்து பக்கத்து வீட்டு அம்மாள் என்னை எதற்காகவோ கூப்பிடவே, ஞாபகமறதியாகக் கையிலிருந்த ரூபாய் நோட்டை அங்கே கூடத்தில் இருந்த மூக்காலியின்மீது போட்டு விட்டுப் போய் விட்டேன்.

சிறிது நேரம் கழித்து நான் திரும்பி வந்து பார்த்தபோது மூக்காலியின் மேல் ரூபாய் நோட்டைக் காணோம். விடுவிடுவென்று பின்கட்டுப் பக்கம் போனேன். அங்கே பொன்னி துணி துவைத்துக் கொண்டிருந்தாள்.

அவளிடம் "கூடத்தில் மூக்காலியின்மேல் இரண்டு ரூபாய் வைத்திருந்தேனே, நீ பார்த்தாயா பொன்னி!" என்று கேட்டேன் நான்.

கொஞ்சம்கூட யோசிக்கவில்லை பொன்னி! நொடியில் தன் இடுப்பிலிருந்த சுருக்குப் பையை எடுத்துப் பிரித்தாள். அதற்குள்ளிருந்து இரண்டு ஒரு ரூபாய் நோட்டுக்களை என்னிடம் நீட்டியபடி, "ஆமாங்கம்மா! துவைக்கறதுக்குத் துணிகள் ஏதாவது அங்கே

கிடக்குதான்னு பார்க்க வந்தேனுங்க. இந்தப் பணம் அங்கே கீழே விழுந்து கிடந்ததுங்க. நான் எடுத்து வைத்துக் கொண்டேன், உங்க கிட்டே கொடுத்துடலாம்னு! வேலைத் தொந்தரவிலே அதை மறந்துட்டேங்க!" என்றாள்.

அவள் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்ட எனக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. சரி! இந்த நாடகத்தை முழுக்கத் தான் ஓடவிட்டுப் பார்த்து விடுவோமே என்று எண்ணிக்கொண்டு, பொன்னியிடம் விடை பெற்றுக்கொண்டு வாசற் பக்கம் வந்தேன்.

அப்பொழுதுதான் கண்ணப்பன் காரை ஷெட்டுக்குள் விட்டு விட்டு என்னை நோக்கி வந்தான் கையில் சாவியுடன்.

"ஏண்டா, கண்ணப்பா! கொஞ்ச நேரத்துக்கு முன்னே ஐயாவைக் கேட்டு இரண்டு ரூபாய் வாங்கி அந்த முக்காலியின்மேல் வைத்திருந்தேன். அதை இப்போ காணோம். நீ பார்த்தாயா! உன்னையும் பொன்னியையும் தவிர வேறு யாரையும் நான் கூடத்தில் வர விட்ட இல்லை" என்றேன் நான் சிரிக்காமல்.

"ஆமாங்க! நான் தான் பெட்ரோல் டின்னை எடுக்க அங்கே வந்தேனுங்க. முக்காலியின் மேல் ரூபாய் கிடந்தது. காற்றிலே எங்கேயாச்சும் பறந்து போயிடப் போவுதேன்னு, அதை எடுத்து வந்து உங்க கிட்டே கொடுத்துடலாம்னு வந்தேனுங்க. நீங்க பக்கத்து வீட்டு அம்மா கிட்டே பேசிக்கிட்டு இருந்தீங்க. ஐயாவும் அவசரப்படவே வந்து கொடுத்துக்கலாமின்னு போயிட்டேனுங்க. இந்தாங்க அந்த ரூபாய்!" என்று சொல்லித் தன் சட்டைப்பையிலிருந்து இரண்டு ஒரு ரூபாய் நோட்டுக்களை எடுத்து என்னிடம் கொடுத்தான் கண்ணப்பன்.

'அட என் சமர்த்துகளா' என்று உள்ளூறச் சிரித்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றேன். ஏனென்றால் ஐயா என்னிடம் கொடுத்தது புத்தம் புதிய ஒரு இரண்டு ரூபாய் நோட்டு. பொன்னியும் கண்ணப்பனும் என்னிடம் கொடுத்தவைகளோ அழுக்குப் படிந்த இரண்டு ஒரு ரூபாய் நோட்டுக்கள்.

இந்த விசித்திர சம்பவத்தைச் சொல்வதற்காக நான் என் மாமியாரைத் தேடிக்கொண்டு அவர் அறைக்குள் போனேன்.

"விஜயா! நீ வர வர ரொம்ப மோசமாகப் போய் விட்டாய். ரூபாய் நோட்டுகளை யெல்லாம் கைபோன போக்கில் கண்ட இடங்களில் போட்டு விடுகிறாய். இதோ பார்! என் ராமாயணப் புஸ்தகத்திற்குள் வைத்திருக்கிறேன். கூடத்தில் இருக்கும் முக்காலியின் மேல் கிடந்தது" என்று சொல்லிக் கொண்டே ஒரு இரண்டு ரூபாய் நோட்டை என்னிடம் எடுத்துக் கொடுத்தார்.

நான் பொன்னி – கண்ணப்பனைப் பற்றி அவரிடம் சொல்லி "இதற்கு என்னம்மா அர்த்தம்?" என்று கேட்டேன்.

"ரெண்டும் சிறிசுகள்! அவர்களுக்குள் ஏதாவது இருக்கும். இல்லாவிட்டால் இப்படி ஒருவர்க்காக இன்னொருவர் பரிந்துகொண்டு வருவார்களா?" என்றார்கள் பெரியம்மா.

பிறகு நான் பொன்னியையும் கண்ணப்பனையும் கூப்பிட்டு ரூபாயை அவர்களிடம் கொடுத்து விட்டு, "இதெல்லாம் என்னடி பொன்னி?" என்று கேட்டேன் பொன்னியிடம்.

"போங்கம்மா!" என்று கூறி நாணித் தலை குனிந்தாள் பொன்னி. கண்ணப்பன் அவளை விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டிருந்தான், முகத்தில் பெருமிதம் பொங்க.

"இப்ப சொல்லு கிழவி. ஒருவர் மேலே ஒருவருக்கு எவ்வளவு பிரியம் இருந்தால் ஒருவர்மேல் உள்ள பழியைத் தான் ஏற்றுக் கொள்ளுவார்கள்! பொருள் நஷ்டமும் படுவார்கள்!" என்று கூறி முடித்தேன்.

"அதென்னமோ அம்மா! இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான் டிராமா ஆடுதுங்க. என்னத்தைச் சொல்றது போங்க!" என்றாள் கிழவி வியப்பு நிறைந்த குரலில்.

"அப்போ பொன்னியை யாருக்குக் கொடுக்கப் போகிறாய்?" என்று கேட்டேன் நான் விடாப்பிடியாக.

"நீங்க சொல்வதை யெல்லாம் பார்த்தால் அவளைக் கண்ணப்பனுக்கே கொடுத்துடலாம் என்றுதான் தோணுதுங்க. ஆனால் முறைப் பையன்கள் ரெண்டு பேருங்க இருக்கிற போது..." என்று இழுத்தாள் கிழவி.

"முறையாவது மண்ணாங் கட்டியாவது கிழவி! இந்தக் காலத்திலே யாரு அதை யெல்லாம் பார்க்கிறார்கள்! பெண்ணின் மனத்துக்குப் பிடிச்சவனும் இருந்து நல்ல குணவானாகவும் இருந்தால் பேசாமல் கலியாணத்தைச் செய்து வைத்து விட வேண்டியதுதான்!" என்றேன்.

"அப்படியே செய்து விட்டால் போகிறது. நான் வரட்டுங்களா!" என்று கேட்டுக் கொண்டே எழுந்திருந்தாள் வள்ளி.

"போய், வா! இந்த மாதமே முகூர்த்தம் வைத்துவிடு!" என்று கூறிக் கிழவியை அனுப்பி வைத்தேன் நான்.

அந்த மாதக் கடைசியிலேயே பொன்னி-கண்ணப்பனின் கலியாணம் நடந்து விட்டது என்று சொல்லத் தேவையில்லை.

கணவனும் மனைவியுமாக என்னை வந்து வணங்கினார்கள். நான் அவர்களுக்குப் புடவையும் வேஷ்டியும் பரிசு கொடுத்து, "இன்று போல் என்றும் இருங்கள்!" என்று அவர்களை ஆசிர்வதித்தேன்.

"நீங்க மட்டும் அந்த உதவி செய்திருக்காத போனால் இந்தக் கலியாணம் நடந்தே இருக்காதுங்க!" என்று கூறினான் கண்ணப்பன் நன்றி நிறைந்த குரலில்.

"'தாய் தகப்பன் இல்லாதவன். யாரோ, எவனோ! அவனுக்குப் போயா பெண்ணைக் கொடுப்பாங்க' என்றுதான் ஆயா சொல்லிக்கிட்டிருந்திச்சு. நீங்க அது இங்கே வந்திருந்த போது பொய்க் கதை ஒண்ணு சொல்லி அது மனசை மாத்திப் புட்டீங்க" என்றாள் பொன்னி.

"எல்லாம் உன் கண்ணீர் செய்த வேலை தான். ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணத்தை நடத்தி வை என்பார்கள். நான் ஒரே ஒரு பொய்தான் சொன்னேன். இதெல்லாம் பெரிதல்ல. உங்களுக்குள் ஒருவர் மேல் ஒருவருக்கு இப்பொழுது இருக்கிற அன்பும் ஆசையும் என்றும் மாறாமல் இருக்க வேண்டும். அதுதான் பெரிது!" என்றேன் நான் உணர்ச்சி ததும்ப.

"அது ஒருநாளும் மாறாதுங்க!" என்று அளவற்ற மகிழ்ச்சியோடு கூறினார்கள், பொன்னியும் கண்ணப்பனும் ஏக காலத்தில்.


கோபம் கொண்ட மனைவி...
ஒரே ஒரு வாரத்திற்கு முன்புதான் ராஜுவும் அவளும் ஒரு ஆனந்தமயமான ஓய்வு நாளைக் கழித்துத் திரும்புகையில், வரப்போகும் மகோன்னத மகிழ்ச்சி தரும் நன் நாட்களை நினைந்து நினைந்து திட்டமிட்டவாறு இன்பக் கனவு கண்டார்கள். ஆனால் இன்றோ கனவு காண என்ன இருக்கிறது எனத்தோன்றியது அவளுக்கு! அவன் சிறந்த மென்னவோ ஒன்றுமாயில்லை. கணவன் ராஜு இனித் தனக்குத் தேவையே இல்லை, என அவன் உணருமாறு நடந்து கொள்ள விரும்பினாள் — ஏன்? சற்று மீறியும் நடந்துகொண்டாள். ராஜு தன் அன்பை முதன் முதலில் அவளிடம் சொன்னதும், அன்று அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியும். ஆ! இவையாவும் எத்தனை இளைக்களாகிவிட்டன! — ஓர் அற்புதமான அழகு கொட்டும் நவநாகரீக சூராஜ்மல் கங்கணம் — நவீனப் பெண்மணிகள் பேணி விரும்பும் ஒரு நல்ல பரிசு, என்று, அந்த கங்கணத்தை ராஜு அவளுக்கு பரிசளித்தானே. அன்று முதல் அவர்கள் வாழ்க்கையே என்றும் ஓர் இன்பச் சோலையாக மாறியது.
நீதி: உங்கள் பிரேமை எவரிடமோ அவரை ஆனந்தத்தில் ஆழ்த்துவது ஒரு அற்புதப் பரிசே — அதுவும் ஓர் உயர் ரகப் பரிசு.
Surajmals
பாரதத்தின் பழமையான வைர வியாபாரிகள்
சூராஜ்மல்ஸ், 313, எஸ்பிளனேட் – மதராஸ்-1.
முக்கியமாக கவனிக்க: சூராஜ்மல்லில் வாங்கும் எந்தப்பொருளும் உங்களுக்கு திருப்தி அளிக்காவிடில் பணத்தை திரும்பப் பெற உத்திரவாதமும் உண்டு.
“ 1895 லிருந்து 1955 வரை பாரதத்தின் பணியில் 60 வருஷங்கள் ”



42. பூதப்பாண்டி

நாஞ்சில் நாட்டை நஞ்சை (நன்செய்) நாடென்றும் சொல்வதுண்டு. தொன்று தொட்டுத் தாளாண்மையுடைய வேளாளர் அந் நாட்டுப் பழங்குடிகளாய்ப் பணியாற்றி வருகிறார்கள். அன்னார் உழைப்பாலேயே நாஞ்சில் நாடு நஞ்சை நாடாயிற்று. மேலைக் கடலைக் கடந்து வரும் மாரிக் காற்று அந் நாட்டிலே பெரு மழை பொழியும். அதன் தூவானமே நெல்லை நாட்டில் 'சாரல்' ஆகும். இவ் வுண்மையை அழகாக உணர்த்துகின்றது மனோன்மணீயம்.

"இப்பெருந்தேயத்து எங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறு
கொண்மூ என்னும் கொள்கலம் கொண்ட
அமிழ்தினை அவ்வயிற் கவிழ்த்தபின் செல்புழி
வடிவம் நீரேதம் மிடிதீர் சாரல்"

(கொண்மூ — மேகம்; அவ்வயின் — அவ் விடத்து; மிடி — வறுமை.)

என்று பேசினான் பாண்டி நாட்டு அமைச்சன். "அரசே! இரவும் பகலும் வரத் தவறினும் நாஞ்சில் நாட்டில் மழை பெய்யத் தவறுவதில்லை. கருமேகம் அந் நாட்டில் மழையைக் கொட்டுகின்றது. பின்பு வெகு வேகமாய்ச் செல்லும் வழியில் அது வடிக்கும் துளிகளே நமது நாட்டை வாழ்விக்கும் சாரல் ஆகும்" என்று அவன் பேசிய மொழிகளால் நாஞ்சில் நாட்டு நீர்வளம் நன்கு விளங்கும்.

'பல துளி பெரு வெள்ளம்' என்பது இந்நாட்டில் ஒரு பழமொழி. முன்னொரு காலத்தில் தென்பாண்டி நாட்டை ஊட்டி வளர்த்த நதியொன்று பல்துளி (பஃறுளி) என்னும் பெயர் பெற்றிருந்தது. அந் நதியையும் அதனால் வளம்பெற்ற நாட்டையும் கொடுங்கடல் கொள்ளை கொண்டது.

ஆயினும் அந்நதியின் பெயரை நாஞ்சில் நாட்டில் உள்ள பறளியாறு நினைவூட்டுகின்றது. 'நாஞ்சில் நாட்டுக் காவேரி' என்று நல்லறிஞர் போற்றும் அவ்வாற்றுக்குப் பல பெயர்கள் உண்டு. பழையாறு என்பது பொது மக்கள் இட்ட பெயர்; கோட்டாறு என்பது கல்வெட்டிலே கண்ட பெயர்; பறளியாறு என்பது பாட்டிலே பயின்ற பெயர்.

"எத்திசையும் புகழ்படைத்த
கொல்லம் தோன்றி
இருநூற்றுத் தொண்ணூற்று
இரண்டாம் ஆண்டு

....

தத்திவிழும் பறளியாற்று
அணையும் தள்ளி
தமிழ்ப்பாண்டி ராஜசிங்கம்
தனையும் வென்று
கொத்தலரும் பூஞ்சோலை
நாஞ்சி நாடும்
கோட்டாறும் கூபர்கோன்
கொண்ட நாளே"

[கூபர் கோன் - திருவிதாங்கூர் அரசன்]

என்ற பாட்டிலே குறிக்கப்பட்டுள்ள பறளியாறு என்ற பெயர் பஃறுளி யாற்றுப் பெயரின் சிதைவாகத் தோன்றுகின்றது.

இத்தகைய பெருமையுடைய ஆற்றின் கரையிலே 'பூதப்பாண்டி' என்னும் ஊர்

ஒன்றுண்டு. ஒரு பாண்டி மன்னன் பெயர் அவ்வூர்ப் பெயரில் அமைந்துள்ளது என்பது வெளிப்படை. பழங்காலத்தில் பாண்டி நாட்டையாண்ட மன்னருள் பூதப்பாண்டியன் என்பான் புகழ்பெற்ற வீரனாய் விளங்கினான் என்று புறநானூறு கூறும்.

பூதன் என்ற பெயருடைய பெரு மக்கள் சிலர் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. பெண்ணையாறு பாயும் நன்னாட்டில் புலவர்களை ஆதரித்த பூதன் ஒருவன் இருந்தான். அவன் அளித்த இனிய எளிய விருந்தை உண்டு பாராட்டினார் ஔவையார்.

> "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
> முரமுரென்றே புளித்த மோரும்—பரிவுடனே
> புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோறு
> எல்லா உலகும் பெறும்"

[வழுதுணங்காய் - கத்தரிக்காய் ; வாட்டு - பொரியல் ; பரிவு - அன்பு]

என்று போற்றினார் ஔவையார்.

மதுரையில் அரசாண்ட பூதப் பாண்டியன் புவிச் செல்வமும் கவிச் செல்வமும் பெற்று விளங்கினான். அகப் பொருளும் புறப்பொருளும் அமைத்துக் கவி பாடும் திறம் அவனிடம் இனிது அமைந்திருந்தது. இளவேனிற் காலத்தின் இயற்கை நலங்களை விளக்கி அம் மன்னன் பாடிய பாட்டொன்று அகநானூற்றிலே சேர்க்கப் பெற்றுள்ளது.

பெறுதற்கரிய பேறுகள் பலவும் பெற்று வாழ்ந்தான் அப் பாண்டியன். அவன் மனையாளாகிய பட்டத்தரசி ஓர் அருங் கலைச் செல்வி ; சிறந்த கற்பரசி. பண் பார்ந்த நல்லவர் பலர் அவன் நண்பராய் இருந்தனர். பசுந் தமிழ் வழங்கும் பாண்டி நாட்டைப் பரிபாலனம் செய்யும் உரிமை முன் செய்த நல்வினையாற் கிடைத்தது என்று எண்ணி எண்ணி அவன் இறும்பூது எய்தினான் ; குடிகள் நல்ல வண்ணம் வாழ்தல் வேண்டும் என்பதே அவன் குறிக்கோள்.

இத்தகைய நல்ல மன்னனுக்கும் தொல்லை கொடுக்கத் துணிந்தனர் மண்ணாசை பிடித்த பிறநாட்டு மன்னர். அன்னார் ஒன்று சேர்ந்து பாண்டி நாட்டின் மேல் படையெடுத்தனர். போர் நேர்ந்தது என்று அறிந்த பாண்டியன் பொங்கி எழுந்தான். வீரப் பெரும் படை திரண்டது. அப்படையின் நடுவே நின்று ஒரு வஞ்சினம் கூறினான் பாண்டியன். "என் நாட்டின் மீது மாற்றார் படை யெடுத்தார்கள் ! அவரது கொட்டத்தை அடக்குவேன் ! ஆர்ப்பரிக்கும் சேனையை அலற அடிப்பேன் ! பதறப் புடைப்பேன் ! அப் படை புறங்காட்டி ஓடக் காண்பேன் ! அப்படிக் காணேன் ஆயின் 'காதல் மனையாளைப் பிரியும் தகவிலன் ஆகக் கடவேன்; மாவன் முதலிய மெய்யன்பர்களின் நட்பினை இழந்தவன் ஆகக் கடவேன் ; நெறி முறை தவறிய கொடுங்கோலரசன் என்று இகழப் படுவேனாக; தென்னாடு காக்கும் பாண்டியர் குலத்திற் பிறவாது புன்னாடு காக்கும் பிற குடியிற் பிறப்பேனாக'' என்று பேசினான்.

அம்மன்னன் பெயர் கொண்ட பூதப் பாண்டியின் அருகே பறளியாற்றில் உள்ள அணைக்கட்டு 'பாண்டியன் அணை' என்று இன்றளவும் அழைக்கப்படுகின்றது. இவ் அணைக்கட்டில் பறளியாற்று நீரை எடுத்துச் சொல்லும் பாசனக்கால்வாய் 'புத்தனாறு' என்று பெயர் பெற்றுள்ளது. புத்தனாறு பிறந்த பின்னர் தாயாகிய பறளியாறு பழையாறு என்னும் பெயர் பெற்றது போலும் !

பூதப் பாண்டியில் பழமையான குகைக் கோயில் ஒன்று உண்டு. அங்குள்ள ஈசன் பூதலிங்கம் என்று அழைக்கப்படுகின்றார். அக்கோயில் பூதப்பாண்டியனால் நிறுவப் பெற்றதென்று அவ்வூரார் கூறுவர்.

இவ்வாறு நாஞ்சில் நாட்டில் தன் பெயரையும் புகழையும் நிலைநாட்டிய பூதப் பாண்டியன் இறந்தபோது பெருந் தமிழ் நாடு அருந் துயரில் ஆழ்ந்தது : பாண்டிமா தேவி உடன் கட்டையேறி உயிர் துறக்கத் துணிந்தாள். அவள் கருத்தறிந்த மதுரை மாநகரத்தார் பொறுக்க முடியாத வருத்த முற்றுக் கதறினர். கண்ணீர் பெருக்கினர். அந்நகரில் வாழ்ந்த சான்றோர் பலர் அரண் மனையிற் போந்து அரசியின் கருத்தை மாற்ற முயன்றனர். அப்போது அரசமா தேவி அவர்களை நோக்கி,

> "பல்சான்றீரே பல்சான்றீரே
> செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
> பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே"

"உயிர்க்கு உயிராகிய உன் கணவனுடன் செல்க" என்று வழியனுப்பாமல் என்னைத் தடுக்கும் பொல்லாப் பெரியோரே ! உமக்கு ஒன்று கூறுவேன். பழஞ் சோறுண்டு பாயில்லாமல் வெறுந் தரையில் படுத்து, கைம்மை நோன்பை மேற்கொண்டு உயிர் வாழும் கடைப்பட்ட மகளிர் இனத்தைச் சேர்ந்தவள் அல்லேன் யான் ! என் கணவனை ஏற்றும் ஈமப்படுக்கை வெம்மை விளைக்கும் நெருப்பன்று ! எனக்குத் தண்மை தரும் தாமரைப் பொய்கை யாகும்" என்று மறுமொழி கூறித் தீப் பாய்ந்து உயிர் நீத்தாள். பழந் தமிழ் நாட்டுக் கற்புநெறி வழுவாமல் கணவனுடன் சென்ற தேவியைக் கற்பரசிகளின் வரிசையில் வைத்துத் தமிழகம் போற்றுகின்றது.

(தொடரும்)



அரவிந்த் மில்ஸ் லிமிடெட்


அஹமதாபாத் - 2

டெல்லியில் நடக்கும் இந்தியன் பொருட்காட்சி சாலையில் அஹமதாபாத் மில் அதிபர்கள் சங்கப் பகுதியில் உள்ள எமது ஸ்டாலுக்கு விஜயம் செய்து எமது பற்பல தயாரிப்புகளைப் பார்க்கக் கேட்டுக் கொள்ளுகிறோம். இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

எல்லோருக்கும் தெரியும் —



ஆகையால்தான்
மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான
ஜனங்கள் **ப்ரூக் பாண்ட் தேயிலையையே**
அருந்துகிறார்கள்!



அத்தியாயம் 4

தமிழ் வாத்தியார்

எல்லோருடைய வாழ்க்கையிலும் இளமைப் பருவத்தின் நினைவுகள் அழியாமல் பதிந்து விடுகின்றன. அதிலும், என் பள்ளிக்கூட வாழ்க்கையைப் பற்றிச் சொல்ல வேண்டியது அவசியம். ஒரு பண்பாடு உள்ள தந்தையை அடையாத எனக்கு, பள்ளிக்கூடமும், உபாத்தியாயர்களும்தான் மனிதனாக வாழ வழி கற்றுக் கொடுத்தார்கள். அதிலும் என்னுடைய தமிழ் உபாத்தியாயர்தான் முக்கியமாக என் உள்ளத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தார். உண்மையில் அவரைத்தான் என் தந்தை என்று கூற வேண்டும். தமிழ் உபாத்தியாயர் தர்மலிங்கம். அவர்களுக்கு நான் எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறேன்.

ஸ்ரீ தர்மலிங்கம் அவர்கள் நல்ல சீலமுடையவர். அவருடைய நடை உடை பாவனைகள் எல்லாவற்றிலும் அவருடைய ஒழுக்கமான வாழ்க்கை பிரதிபலிக்கும். வாக்குத் தவற மாட்டார். மகா மானி. மொத்தத்தில் என் தந்தைக்கு நேர் விரோதமானவர். இரைந்து கூடப் பேச மாட்டார். ஆனால் ஒரே ஒரு ஒற்றுமை. அது தான் வறுமை. அவரையும் வறுமை வாட்டியது. பெரிய குடும்பம். குறைந்த வருமானம். ஒருவருடைய சம்பாத்தியத்தில், குழந்தைகள், வயதான தாய் தந்தையர், மனைவி, அவருடைய விதவைத் தங்கை இத்தனை பேர் காலம் தள்ள வேண்டும்.

எங்கள் பள்ளியில் ஒரு பையன் "வகுப்புக்கு ஒருவராக யார் வீட்டிலிருந்து வருகிறார்கள்?" என்று கேட்டான்.

"தமிழ் வாத்தியார் வீட்டிலிருந்து" என டக்கென்று கேலியாகப் பதில் வந்தது. அவர் வீட்டிலிருந்து ஏழுபேரும் எங்கள் பள்ளியில்தான் படித்தார்கள். எட்டாவது பாஸ் பண்ணிய ஒரு பெண் மட்டும் வீட்டில் இருந்தாள். அவளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய வயது.

நான் தமிழ் வாத்தியார் வீட்டுக்கு அடிக்கடி போவது வழக்கம். அவருடைய பிள்ளை காளமேகம் என் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

அவனுடன் அவர்கள் வீட்டுக்குப் போவேன். அவன் தாயாரும் ரொம்ப நல்லவர்தான். ஆனால் கொஞ்சம் முன் கோபம் அதிகம். ஏழு குழந்தைகளை மேய்த்துப் பார்த்தால் அல்லவா அந்தக் கஷ்டம் தெரியும்?

அவருக்கும் என்னிடம் பிரியம் உண்டு. நான் போகும்போதெல்லாம் எனக்குக் கையில் ஏதாவது பணியாரமோ, பக்ஷணமோ தருவார். இதனால் சில மாணவர்களின் பொறாமைக்கு நான் ஆளாக நேர்ந்தது. நான் கஷ்டப்பட்டுப் படித்து மார்க் வாங்கினால் கூட "வாத்தியார் ஐயா சம்சாரம் மார்க் போடச்சொல்லியிருப்பாங்க" என்று பேசிக் கொள்வார்கள். ஆனால் நான் அதைப் பொருட்படுத்துவதில்லை. உண்மை எனக்குத் தெரிந்திருக்கும் போது அவர்களிடம் சண்டை போடுவானேன் என்று பேசாமலிருந்து விடுவேன். அதிலும் என் தந்தையைப் போல் சண்டைக்காரன் என்று பெயர் வாங்கக் கூடாதென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தேன். ஆகவே யாரேனும் சண்டைக்கு வந்தால் கூட நான் ஒதுங்கிப் போய் விடுவேன். இதனால் எனக்குப் பள்ளிக்கூடத்தில் ரொம்ப நல்லபெயர். உபாத்தியாயர்களுக்கெல்லாம் பணிவாக இருக்கிற பிள்ளைகளைத்தானே பிடிக்கும்?


தமிழ் வாத்தியார் வீட்டுக்கு நான் சென்ற நேரங்களில் அவருக்கும் ஓய்வு நேரம் இருந்தால் என்னிடம் சில சமயம் பேசிக் கொண்டிருப்பார். எனக்குப் புத்திமதி சொல்லுவார்.

"உன் அப்பாவுக்கு இருக்கும் சாமர்த்தியத்துக்கு அதை நல்ல வழியில் செலுத்தினால் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கலாம். ஆனால் சீட்டாடுவதில் அவனுடைய சாமர்த்தியம் செலவழிந்து போய் விட்டது. இனிமேல் அவனால் திருந்த முடியாது. நீ அவனைப் போல் இருக்கவே இருக்காதே, ரங்கதுரை. அவனும் நல்லவன்தான். இந்தச் சீட்டாடும் வழக்கம் ஏற்படுவதற்கு முன்னால் அவன் ரொம்ப முன்னுக்கு வருவான் என்று எண்ணியிருந்தேன். அநியாயமாய் வீணாய்ப் போய் விட்டான்" என்று கூறுவார்.

அதிகாலையில் எழுந்து அவர் குளத்தில் ஸ்நானம் செய்து விட்டுப் பூஜை செய்வார். எனக்கு அவரிடம் விவரிக்க முடியாத ஒரு பிரியமும், மரியாதையும் உண்டாகி இருந்தன. அவர் மூலம் தான் நான் என் தந்தையைப் பற்றிப் பல விஷயங்கள் அறிந்து கொண்டேன்.

என் அன்னை என் தந்தையைப் பற்றிக் குறைவாகப் பேசவே மாட்டார். ஒரு தடவை கூட அவர் கோபித்துக் கொள்வதைப் பற்றியோ, பணம் கொடுக்காததைப் பற்றியோ என் காது கேட்கக் குறை சொன்னதே இல்லை.

ஆனால் தமிழ் வாத்தியார் வீட்டில் அவர் மனைவி எப்போதும் அவரை ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார். நான் போகும்போதெல்



லாம் அவரிடம் ஏதேனும் குறைப் பட்டுக் கொண்டிருப்பார். "குழந்தைக்கு ஒரு நல்ல துணி இல்லை. கல்யாணம் பண்ணுகிற வயதாகி விட்டது" என்பார். அல்லது, "நீங்கள் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்பதற்குள் பின்னையாருக்குக் கூடக் கல்யாணமாகி விடும்" என்பார். ஆனால் இவற்றையெல்லாம் தமிழ் வாத்தியார் பொருட்படுத்தவே மாட்டார். காதில் விழாத மாதிரியே உட்கார்ந்திருப்பார். இந்த மாதிரிப் பேச்சுக்களை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன்.

ஒரு நாள் அவருடைய பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது. மிகவும் பிரயாசைப்பட்டுக் கல்யாணம் நிச்சயித்திருந்தார் தமிழ் வாத்தியார். மாணவர்களாகிய எங்களுக்கெல்லாம் ஒரே உற்சாகம். ஊரில் கல்யாணம் என்றாலே உற்சாகமாக இருக்கும். அதிலும் வாத்தியார் வீட்டில் கல்யாணம் என்றால் சந்தோஷத்துக்குக் கேட்பானேன்? ஆளுக்கு ஒரு வேலையாக இழுத்துப் போட்டுக் கொண்டு உற்சாகத்துடன் செய்தோம்.

கல்யாணத்திற்குப் பத்து நாட்களுக்கு முன்னால் நான் அவர் வீட்டுக்குப் போனேன். நான் சென்றபோது வாத்தியாரும் அவர் மனைவியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"எப்படித்தான் இந்தக் கல்யாணத்தைச் சமாளிக்கப் போகிறீர்களோ? ஒரு சாமான் இல்லை. ஊரையெல்லாம் அழைத்துச் சாப்பாடு போடாவிட்டாலும், சம்பந்திப் பேருக்காவது சாப்பாடு போட வேண்டுமா இல்லையோ? எப்போது வாங்கப் போகிறீர்கள்? எப்படி வாங்கப் போகிறீர்கள்? ஒன்றும் புரியவில்லையே?" என்றார்.



அதற்கு அவர், "என்னை என்ன செய்யச் சொல்கிறாய் கமலம்? கையில் பணமிருந்தால் என்ன வேண்டுமானாலும் வாங்கலாம். எனக்குக் கடன் கேட்க அவமானமாக இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் முன்பணம் கொடுக்கும்படி கேட்டேன். அவர்கள் கொடுக்க மறுத்து விட்டார்கள். நான் வேறு எங்கே கேட்பது?" என்றார்.

அவர் குரலில் தொனித்த பரிதாபம் என்னை உருக்கியது. அவர் மனைவியின் கோபத்தை அதிகரித்தது.

"இப்படி என்னிடம் கூறினால் என்ன அர்த்தம்? எப்படியாவது கல்யாணத்தை நடத்த வேண்டுமல்லவா? வீட்டிலே உட்கார்ந்து வருத்தப்பட்டால் நடக்குமா? எங்கேயாவது போய்ப் பணம் புரட்டிக் கொண்டு வாருங்கள். பந்தல்காரன் நாளைக்கு வருவான். அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டும்" என்று கோபமாகக் கூறினார்.

தமிழ் வாத்தியார் வெளியே வந்தார். தம் தடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். என்னைப் பார்க்கும்போதெல்லாம் சந்தோஷமாகப் பேசும் வழக்கமுள்ள அவர் அன்று என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. நேரே சென்று விட்டார். அவருடைய மனம் எவ்வளவு புண்ணாகியிருக்க வேண்டுமென்று அதிலிருந்தே தெரிந்தது.

அவர் சென்ற பிறகு நான் உள்ளே சென்றேன். வாத்தியாரின் மனைவி என்னைப் பார்த்ததும், "ரங்கா! சரியான சமயத்தில்தான் வந்திருக்கிறாய். பரண் மீது ஏறி அங்கே இருக்கும் பாத்திரங்களையெல்லாம் எடுத்துக் கொடுக்கிறாயா?" என்று கேட்டார். நானும் உடனே ஏறினேன். சாமான்களை எடுத்துக் கொண்டே பேச்சுக் கொடுத்தேன். கல்யாணத்தைப் பற்றித்தான் பேச்சு ஆரம்பித்தது.

அவர் கூறினார்: "உங்க வாத்தியார் செய்வது கொஞ்சமாவது சரியா இருக்கா ரங்கா! பெண்ணுக்குக் கல்யாணம் அவர் செய்ய வேண்டுமா? நான் செய்ய வேண்டுமா? கடன் கேட்க மாட்டேன், மானம்தான் முக்கியம் என்றால் எனக்குக் கோபம் வராதா? நிச்சயமான கல்யாணம் நின்றுபோனால் அவமானமில்லையாக்கும்?"

நான் சிறியவனானாலும் என்னிடமிருந்த அன்பினால் அவர் மனம் விட்டுப் பேசினார். எனக்கும் பணக் கஷ்டம்

தெரிந்திருந்தபடியால் அவர்களுடைய பேச்சை நான் புரிந்து கொள்வேன் என்றும் தோன்றியிருக்கலாம்.

அப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதை அவரிடம் கூறிக் கவலைப்பட வேண்டாமென்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன். என் வகுப்பு மாணவர்களின் வீடுகளுக்கெல்லாம் சென்று அவர்களை அழைத்துக் கொண்டேன். எல்லோரும் சேர்ந்த பிறகு என் யோசனையைக் கூறினேன். அல்லிக் குளம் மாந்தோப்பில் எங்கள் மகாநாடு நடந்தது. அனைவருக்கும் தமிழ் உபாத்தியாயருடைய நிலைமையைக் கூறினேன். மாணவர்களுக்கு எப்போதுமே தமிழ் உபாத்தியாயரிடம் மதிப்பு அதிகம். மார்க்கு நான் நிறைய வாங்கும்போதுதான் பொருமைப் படுவார்களே தவிர மற்ற சமயங்களில் நான் சொல்வதைக் கேட்பார்கள்.



ஆகவே நான் உபாத்தியாயர் வீட்டுக் கல்யாணத்துக்கு வேண்டிய சாமான்களை, அவரவர்கள் சக்திக்குத் தகுந்த முறையில் சேகரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னதும் எல்லாருக்கும் உற்சாகமே உண்டாகி விட்டது.

“எங்கள் வீட்டிலிருந்து நான் பூசணிக்காய் கொண்டு வருகிறேன்” என்றான் ஒருவன்.

“எங்கள் வீட்டு மரத்திலிருந்து முருங்கக்காய் கொண்டு வருகிறேன்” என்றான் இன்னொருவன்.

“எங்கப்பாவிடம் சொல்லித் தேங்காய் அனுப்புகிறேன்” என்றான் தென்னந் தோப்பு முதலியார் வீட்டுப் பையன்.

“நான் மாலைகளும், புஷ்பமும் கொண்டு வருகிறேன்” என்றான் பூக்காரச் சிங்காரத்தின் புத்திரன்.

“நான் அப்பாவிடம் சொல்லிப் பால், தயிர் கொண்டு வருகிறேன்” என்றான் பால்காரச் சடகோபனின் மகன்.

இப்படிப் பல சாமான்கள் சேகரிக்கத் திட்டமிட்டோம். எல்லாவற்றையும் நான் எழுதிக் கொண்டேன்

பின்னர் என் வீட்டுக்குப் போனேன். ‘நான் என்ன கொடுப்பது?’ என்ற யோசனை என்னுடைய உள்ளத்தை மிகவும் வாட்டியது. வீட்டுக்குச் சென்றதும் எல்லா விவரங்களையும் அம்மாவிடம் கூறினேன்.

அம்மா உடனே, “அரை மூட்டை அரிசி கொடுக்கலாம் ரங்கா. நானும் கல்யாணத்தில் சீர் வைக்க முறுக்குச் சுற்றித் தருகிறேன். இதை அவருக்குத் தெரியாமல் அவர் வீட்டு அம்மாளிடம் சொல்லி விட்டு வா!” என்றார்.

நான் சந்தோஷமாக ஓடினேன். நான் சென்றபோது தர்மலிங்கம் அவர்கள் வீட்டுக்கு வரவில்லை. ஆகவே நான் அவர் மனைவியிடம் சென்று விஷயங்களைக் கூறினேன். அவர் முதலில் சந்தேகித்தார். என் அன்னை கூறியதைச் சொன்னதும் அவர் முகம் மலர்ந்தது.

“பொன்னம்மாவின் குணத்துக்கு அவன் எவ்வளவோ சிறப்பாக இருக்கணும். அவனுடைய புண்ணியத்தால் நீ நன்றாக இருப்பாய்” என்று மனமார வாழ்த்தினார்.

பிறகு நான், “இதை வாத்தியார் ஐயாகிட்டே சொல்லி விடாதீர்கள். அவர் கூடாதென்று சொல்லித் தடுத்து விடுவார்” என்றேன்.

கல்யாணப் பந்தல் போடுவதற்குக் கூட மாணவர்களெல்லாம் உதவி செய்தோம். விவாகத்துக்கு முதல் நாள் தான் அவருக்கு விவரம் தெரியும். தேங்காயும், அரிசியும், புஷ்பமும், காய்கறிகளும் தாமாக வந்து சேர்ந்தன. அதைக் கண்டு அவர் பிரமித்துப் போய் விட்டார். எனக்கு அதைப் பார்த்த போது என்ன களிப்பாக இருந்தது தெரியுமா?

இரண்டு நாட்களும் கல்யாண வீட்டில் வேலை செய்தோம். அப்போது கோடை விடுமுறையானபடியால் சௌகரியமாக இருந்தது.

கல்யாணம் முடிந்த பிறகு உபாத்தியாயரும், அவர் மனைவியும் என்னைக் கூப்பிட்டார்கள். ஒரு நல்ல வேஷ்டி பரிசளித்தார்கள். நான் வாங்கிக் கொள்ள மறுத்தேன். மற்ற நண்பர்கள் கேலி செய்வார்களோ என்ற பயம். பிறகு தட்ட முடியாமல் வாங்கி உடுத்திக் கொண்டு இருவருக்கும் நமஸ்கரித்தேன். உபாத்தியாயர், “நீ மேலும் மேலும் நன்றாகப்


Tushar
பண்டிகை நாட்களிலும்
மற்றும் எல்லா நாட்களிலும்
துஷார்
விட்டமின் சேர்ந்த
வனஸ்பதி
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். கர்நூல்.
துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்
டெல்லியில் நடைபெறும் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ் பொருட் காட்சியில் உள்ள பிர்லா தொழிற்காட்சிப் பகுதியில் எமது ஸ்டால் நெ. B-71க்கு விஜயம் செய்யுங்கள்

படித்து நல்ல உத்தியோகம் பார்த்து, உன் தாயார் மனம் குளிரச் செய்ய வேண்டும்'' என்று ஆசீர்வதித்தார்.

அவரது மனைவி, ''வாத்தியார் நல்ல ஆசீர்வாதமாகச் செய்து விட்டார். அவர் சொல்லாததை நான் சொல்கிறேன். உனக்கு நல்ல குணவதியாக மனைவி கிடைப்பாள், ரங்கா'' என்று பரிகாசமாகக் கூறினர். எனக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது. அங்கிருந்து ஓடியே போய் விட்டேன்.

அவருடைய வாக்கு பொய்க்காது என்று எனக்கு ரொம்ப நம்பிக்கை இருக்கிறது. என் இந்துவைவிட நல்ல குணமுள்ள பெண் யாரேனும் இருக்க முடியுமா? இந்து எப்படியும் எனக்குக் கிடைத்து விடுவாள் என்று தான் தோன்றுகிறது.

அத்தியாயம் 5

மனமாற்றம்

தமிழ் உபாத்தியாயர் வீட்டுக் கல்யாணம் முடிந்து ஐந்தாறு நாட்களுக்குப் பின் ஒரு நாள் எங்கள் வீடு ரணகளமாயிற்று. அன்றுதான் எனக்கு என் தாயின் மன உளைச்சல் தெரிய வந்தது. பல நாட்களாக அடக்கி வைத்துக் கொண்டிருந்த தாப மெல்லாம் அன்று சீறிக் கொண்டு வெளி வந்தது. அவருக்கு அப்படி மிதமிஞ்சிய கோபம் வருவதற்கு நிறையக் காரணங்கள் இருந்தன. பூமி தேவிக்குக் கூட உள்ளே செந்தழலான அக்னிக் குழம்பு கொந்தளித்துக் கொண்டே இருக்கிறதல்லவா? ஒரு நாள் அது பேரதிர்ச்சியுடன் மோதி எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து கொண்டு வெளியே கொட்டுகிறதல்லவா? அன்று என் அன்னை கிட்டத்தட்ட அந்த நிலையை அடைந்து விட்டார்.

அன்றுதான் அந்த அக்னிக் குழம்பின் வேகமும், உஷ்ணமும் எனக்குத் தெரிய வந்தன. அவரையே அந்த வெப்பம் கடுமையாகத் தகித்து விட்டதென்று சொல்ல வேண்டும்.

என் தந்தை அன்று இரவு வழக்கம் போல் சீட்டாடிவிட்டுச் சாப்பிடவந்தார். அவர் முகம் இருந்த அழகைப் பார்த்த போதே இன்று ரொம்ப நஷ்டமென்று என் அன்னைக்குத் தெரிந்திருக்கும். வந்தவுடன் சாப்பிட உட்கார்ந்தார். என் அன்னை மத்தியானம் வடித்த சாதத்தை இலையில் வைத்தார். அது ஆறிப்போய் வரவரவென்று காய்ந்து போயிருந்தது. சற்று முன்னால் நானும் அதைத்தான் சாப்பிட்டிருந்தேன்.

அந்த சாதத்தைக் கண்டதும் அவருக்கு ஒரே கோபம் வந்தது. அதை எடுத்து வீசி எறிந்தார். சமையல் அறை பூராவும் சாதம் வான வெளியில் இறைந்து கிடக்கும் நட்சத்திரங்களைப் போல் சிதறியது.

எனக்கு உடலெல்லாம் நடுங்க ஆரம்பித்து விட்டது. வழக்கம்போல் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துக் கொள்ளக் கூடப் போக முடியவில்லை. மரம் மாதிரி நின்றேன்.

எறிந்த கையோடு எழுந்தார். திகைத்து நின்ற என் அன்னையின் அருகில் சென்று கன்னத்தில் ஓங்கி ஒரு அடி அடித்தார். ''சோறு பொங்கி வைக்கக் கூட முடியவில்லையா உனக்கு? இதை மனிதன் தின்ன முடியுமா?'' என்று கத்தினர். இரவின் நிசப்தத்தில் அவருடைய ஆத்திரமான குரல் பயங்கரமாக ஒலித்தது.

என் அன்னையின் கண்கள் நீரைக் கக்கின. ஆத்திரம் தாங்காமல் நடுங்கிய குரலில், ''வீட்டில் அரிசி இருந்தால் தானே சமைக்கலாம்?'' என்றார்.

''ஏன்? தர்மலிங்கம் வீட்டுக்குக் கொடுக்க இருந்ததோ? அருமைப் பிள்ளையின் குருவுக்குக் காணிக்கை செலுத்தினீர்களோ?'' என்று இரைந்தார்.

அரிசி கொடுத்த விவரம் என் தந்தைக்கு முன்பே தெரியும். அப்போது ஒன்றும் சொல்லவில்லை. அவருடைய சுபாவமே அப்படி. ஏதாவது செய்யும் போது, அவருக்குப் பிடிக்காத விஷயமாக இருந்தால் சொல்ல மாட்டார். பிறகு எப்போதாவது சொல்லிக் காட்டி வதைத்து விடுவார். என் அன்னை அவருடன் எப்படித்தான் விவரம் தெரியாத பருவத்திலிருந்து வாழ்ந்து வந்தாரோ? அதை இறைவன்தான் அறிவார்.


என் அன்னையின் பதில் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.


''ஏன்? நீங்கள் சீட்டாடிச் சீட்டாடி இந்தக் குடும்பத்தைச் சீரழித்தது தவறில்லை. நான் அரை மூட்டை அரிசி தர்மலிங்க வாத்தியாருக்குக் கொடுத்ததினால்தான் நம் வீட்டுக்குத் தரித்திரம் வந்து விட்டதோ?'' என்றார்.

''வாயை மூடு, இல்லாவிட்டால் கொன்று விடுவேன்!''

''குற்றமுள்ள நெஞ்சு உங்களை உறுத்துவதனால்தான், என்னைக்

ஹாஸ்யக் களஞ்சியம்





கொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது. நான் சொன்னதில் என்ன தவறு என்று நாலுபேரைக் கூட்டி நியாயம் கேளுங்கள். உங்களைப் பார்த்து ஊரெல்லாம் சிரிக்கிறது. எங்கே பார்த்தாலும் கடன். அது உங்களுக்கு அவமானமாக இல்லையா? நான் எனக்காகவா சொல்கிறேன்? நான் நேற்று சாதம் வேண்டுமானாலும் சாப்பிடுவேன். சாப்பிடாமலேயே இருந்தாலும் இருப்பேன். உங்களுக்குத்தானே இரண்டு வேளையும் சுடுகிற சாதம் வேண்டியிருக்கிறது?'' என்றார்.

என் தந்தையின் கோபம் எல்லை கடந்து விட்டது. என் அன்னையைப் பிடித்துத் தள்ளினார். அவருடைய தலை சுவரில் மோதியது.

''என்னைக் கொன்று உங்களுக்கு என்ன பிரயோஜனம்? கொஞ்சம் நின்று யோசித்துப் பாருங்கள். இன்று முதல் சீட்டாடுவதை நிறுத்தி விடுங்கள். நான் எப்படியாவது எல்லாக் கடனையும் அடைத்து விடுகிறேன். மறுபடியும் மானமாய் இந்த ஊரில் வாழலாம்'' என்றார்.

என் தந்தையின் உடல் நடுங்கிற்று. பக்கத்தில் தொங்கிய குடையைக் கையில் எடுத்துக் கொண்டார். 'ஐயோ! அம்மாவைக் குடையினால் அடிக்கப் போகிறாரா?'–இந்த எண்ணம் எனக்கு என்று மில்லாத தைரியத்தை அளித்தது. ஓடிச் சென்று அப்பாவின் முன் நின்றேன். என்னைக் கண்டதும் அவர் நின்றார். என்ன தோன்றியதோ தெரியவில்லை. குடையை ஒரு மூலையில் வீசி விட்டு வேகமாக வெளியே போய் விட்டார். நான் நின்ற இடத்திலேயே தடாலென்று உட்கார்ந்தேன்.

அதன் பிறகு என் தந்தை ஐந்தாறு நாட்கள் வீட்டுக்கு வரவில்லை. என் அன்னை அப்போது பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. 'அவர் ஓடிப் போய் விட்டாரோ? திரும்பி வரவே மாட்டாரோ?' என்ற நினைப்பு அவர் மனத்தைப் பிழிந்து எடுத்து விட்டது.

''துரை, அப்பா எங்கேயாவது இருக்காரா என்று தேடிப் பாரேன். அவருடைய சிநேகிதர்களிடமெல்லாம் விசாரியேன்'' என்று என்னை ஏவிக் கொண்டே இருந்தார். நான் ஊர்



முழுதும் பத்துத் தடவை சுற்றியலைந்தும் அவரைப் பற்றிய சமாசாரம் யாருக்கும் தெரியவில்லை.

"நான் எப்போதும் போல் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கக் கூடாதா? ஏன் வாதாடினேன்? ஈசுவரா! அவரை இந்தத் தடவை கொண்டு வந்து சேர்த்து விடு. பிறகு என்ன செய்தாலும் பேச மாட்டேன். அவர் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தால் போதும்" என்றெல்லாம் புலம்பிக் கொண்டே இருந்தார்.

இப்போது எண்ணிப் பார்த்தால் எனக்கு ரொம்ப வியப்பாக இருக்கிறது. அவருடைய உள்ளம் எப்பேர்ப்பட்டது? தன்னை இவ்வளவு பாடுபடுத்திய ஒரு மனிதரிடம் எவ்வாறு இத்தனை அன்பு இருக்க முடியும்? அன்பே இல்லாத பாலைவனம் போன்ற ஒரு மனிதனிடம் எப்படி அன்பு வைக்க முடியும்?

மனோதத்துவத்தை ஆராயும் எண்ணத்துடன் பார்க்கும் போது இதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இது என்ன அன்பு? எப்படி உண்டாயிற்று? அவர் அவ்வளவு கொடுமைப்படுத்தியும் மாறுமலிருந்த காரணம் என்ன? இவையெல்லாம் எண்ணத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றன.

அழகோ, குணமோ, பணமோ, திறமையோ, அன்போ ஒன்றுமே இல்லாதவரை, அவர் மனைவி எதற்காக இவ்வளவு நேசித்தாள் என்பது புரியவே இல்லை.

அதை நினைக்கும்போது நான் இந்துமதியிடம் வைத்திருக்கும் அன்பு ஒன்றுமே இல்லை எனத் தோன்றுகிறது. இந்துவுக்கு அழகு இருக்கிறது. நல்ல குணம் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பளிங்கு போன்ற உள்ளம் இருக்கிறது. அன்பு சொட்டும் இதயம் இருக்கிறது. கூர்மையான அறிவு இருக்கிறது. கலையுள்ளமும், திறமையும் இருக்கின்றன. அவள் திறமையைப் பற்றி எனக்கு முதலில் தெரிந்திருக்கவில்லையானாலும், மற்றவையெல்லாம் தெரிந்துதானே இருந்தன.

உண்மையில் அப்படியா? இந்துவிடம் அழகும், புத்திசாலித்தனமும் திறமையும் இல்லா விட்டால் நான் நேசித்திருக்க மாட்டேனா?

இல்லை! அப்படி இல்லை! இந்துவிடம் எனக்கு ஏற்பட்ட அன்புக்கு இதெல்

லாம் மூலகாரணமில்லை. இவையெல்லாம் நான் உணர்கிறேன், அனுபவிக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் அதனால்தான் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது.

இது வேறு ஏதோ உள்ளத்துக்குப் புலப்படாத காரணத்தினால் எழுந்தது. ஆத்மாவின் விழிப்பினால் ஏற்பட்ட அன்பு. ஒவ்வொரு ஆத்மாவும் தன்னோடு ஐக்கியமாகி விடக்கூடிய இன்னொரு ஆத்மாவைத் தேடிக் கொண்டே இருக்கிறது. எத்தனையோ பேரிடம் அது ஐக்கியமாக முயற்சிக்கிறது. கடைசியில் திடீரென்று ஒருநாள், பார்த்த உடனே, "இந்த ஆத்மா தான் என்னுடன் ஐக்கியமாகக் கூடிய ஆத்மா" என அறிந்து கொள்கிறது.



அந்த நிமிஷத்தில்தான் ஆத்மாவுக்கு விழிப்பு ஏற்படுகிறது. அந்தப் புதிய அனுபவத்தினால் அகம்பாவம் என்கிற நிழல் அதன் மீதிருந்து விலகி, ஆத்மா பரிசுத்தமடைகிறது.

எனக்கு இந்துவிடம் உள்ள அன்பு இத்தகையது என்றே எண்ணுகிறேன். இது மனங்களின் கலப்பு மட்டும் அல்ல. ஆத்மாக்களின் கலப்பு என்றே தோன்றுகிறது. இந்த அனுபவத்தை அடைந்தவன்தான் மனிதன் என்று எனக்குத் தோன்றுகிறது.

என் தந்தை ஆறு நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்தார். அவரைப் பார்த்த போதே, பெரிய வித்தியாசம் தெரிந்தது. முகம் மாறியிருந்ததைப் போலவே மனமும் மாறியிருந்ததென்று சிறிது நேரத்தில் தெரிந்தது.

அவர் உள்ளே வந்ததும் என் அன்னை பேசாமல் இலை போட்டார். இலையின் முன் சாப்பிட உட்கார்ந்தவர், சாதம் பரிமாறியதும், குழந்தை மாதிரி கண்ணீர் விட்டு அழுதார். என் அன்னையின் கண்களிலிருந்தும் நீர் சொரிந்தது. நானும் அழுதேன். மூன்று பேருடைய கண்ணீரும் ஒன்றாகக் கலந்து எங்கள் உள்ளங்களையும் கலங்கச் செய்தன.

ஒருவாறு சாப்பிட்டு முடிந்த பிறகு என் தந்தை என்னைப் பார்த்து, "ரங்கா! நீ போய் விளையாடு" என்று அனுப்பினார். நான் அவருடைய குரலில் தொனித்த பரிவைக் கண்டு வியந்தேன். அதட்டியே பேசி வழக்கமான அவர் அப்படிப் பேசியஃது விநோதமாகக்கூட இருந்தது.

நான் படபடக்கும் உள்ளத்துடன் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அல்லிக்குளத்துக்குப் போய் விட்டேன். அங்கு சென்று உட்கார்ந்ததும் தமிழ் வாத்தியாரின் நினைவு வந்தது. உடனே, தலைதெறிக்க அவர் வீட்டுக்கு ஓடினேன். அவரைப் பார்த்து அப்பா என்னிடம் பரிவாகப் பேசியதைச் சொல்ல வேண்டுமென்று நெஞ்சம் பறந்தது. இரைக்க இரைக்க நான் ஓடி வந்ததைப் பார்த்ததும் முதலில் அவர் மிகவும் பயந்தே போய் விட்டார்.

"என்ன ரங்கா? என்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

"அப்பா வந்து விட்டார். அம்மாவோடு பேசிக் கொண்டிருக்கிறார்" என்று கூறினேன்.

அவர் அப்போதும் ஏதோ சண்டை நடக்கிறதென்று நினைத்துக் கொண்டு, "ரொம்ப சத்தம் போடுகிறாரா?" என்று கவலையுடன் கேட்டார்.

அதன் பிறகு நான் நிதானித்துக் கொண்டு விஷயங்களைச் சொன்னேன். அப்பா அழுதார் என்று நான் கூறியதும் அவன், "அழுதானா? அப்படியானால் நிஜமாகவே இனிமேல் மாறி விடுவான். அவனுக்குக் கண்ணீர் சுரக்கும் கோளங்களே இல்லை என்று இது வரை எண்ணியிருந்தேன். இப்போது அது சரியாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. இனிமேல் அவன் ஒழுங்காக இருப்பான், பார்!" என்று கூறினார்.

என் மனமும் அமைதியடைந்தது. ஆனால் இந்த அமைதியை நீடிக்க விடாமல் மிராசுதார் சகுவரமூர்த்தி எங்கள் வாழ்க்கையில் வந்து குறுக்கிட்டு விட்டார். (தொடரும்)

மேலும் மலிவானது!



குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்

ரம்மியமணம் கொண்ட ப்ரோடெக்ஸ் உயர்ந்தரக சர்வ பிரயோக வாசனைப் பௌடர்; மிக மிகக் குறைந்த விலையில் மிக மிகப் பெரிய டப்பா! இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ப்ரோடெக்ஸ் டால்கம் பௌடரைவிரும்புகின்றன—அதன் வசீகரமான வாசனையினாலும் எல்லாவற்றிற்கும் உபயோகப்படும் பரிமள டால்கம் பௌடர் என்பதனாலும்......

இன்று ப்ரோடெக்ஸ் உபயோகித்தீர்களா?

குணம் உத்தரவாதம்
கால்கேட் பாமாலிவ்
அளிக்கிறது



ப்ரோடெக்ஸ்
சர்வப்பிரயோக
வாசனைப்பௌடர்

PTP/6/3



எவரா யிருந்தாலும் சரியே....

இயற்கையாகவே, மற்றவர்கள் தன்னைக் காணவேண்டும், போற்ற வேண்டும் என்றே நீங்கள் விரும்புகிறீர்கள்—உங்களுக்காகவும், நீங்கள் உடுத்தும் ஆடைகளுக்காகவும்.

அந்த விருப்பம் ராய்பூர் ஆடைகள் மூலம் நிச்சயமாக நிறைவேறும்! அவைகளின் ஜால வர்ணங்களும், ஒப்பில்லாத உயர்ந்த வேலைப்பாடும், ஒரு தனி அழகை உற்பத்தி செய்கின்றன.

போற்றத் தக்க அழகு ஒப்பில்லாத ஆடைகளின் மூலமே கிட்டும் —
நாகரீகத்திற்கு
ராய்பூர் ஆடைகள்

MOON & STAG
RAIPUR MILLS-AHMEDABAD

ஆடவர்களுக்கும், பெண்டிர்களுக்கும், குழந்தைகளுக்கும்
என்ன நயமான துணிகள்!

SANFORIZED
SHRUNK FABRIC


சான்போரைஸ்ட்

பாப்ளின் — ஷர்டிங் — கோடிங்
-பிரின்டெட்-
சேலை—வாயில்—கேம்பிரிக்
-மற்றும்-
ப்ளவுஸ் துண்டு—மேலாக்கு
கைகுட்டை

ராய்பூர் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்



PNI RP-1



கல் நாயனம்

கி. ரா. கோபாலன்

நவராத்திரி உத்சவம்: ஊரில் பிருந்த விசேஷம். எல்லாக் கோயில்களிலும் கொலு அலங்கரித்திருப்பார்கள். அந்த வருடம் ஒரு புதுமை. கும்பேஸ்வர ஸ்வாமி கோயிலில் வருஷா வருஷம் வைக்கப் பட்டிருக்கும் அதே பொம்மைகளே வைக்கப்பட்டிருந்தாலும் அந்த வருடம் ஒரு புதிய பொருளும் கொலுப் பொம்மைகளின் வரிசையில் வைக்கப்பட்டிருந்தது. அது ஜனங்களின் மனத்தில் இன்னும் சிறிது பரபரப்பையும் ஆவலையும் எழுப்பக் கூடியதாய் இருந்தது. அது என்ன? கருங் கல்லிலே குடைந்து செய்யப் பட்ட ஒரு நாயனம். கோயிலில் நெடுநாளாய்ப் பூட்டியிருந்த ஒரு அறையைச் சோதனை செய்தபொழுது அந்தக் கல் நாயனம் அகப்பட்டதாகவும், அதை நவராத்திரி கொலுவில் வைத்திருப்பதாகவும் சொல்லிக் கொண்டார்கள். இதனால் மற்ற வருஷங்களை விட அந்த வருஷம் கோயிலில் கூட்டம் சிறிது அதிகமாகவே இருந்தது.

நான் அன்று சில நண்பர்களுடன் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் அந்தக் கல் நாயனத்தைப் பார்ப்பதற்காகக் கோயிலுக்குச் சென்றேன். நாங்கள் செய்த புண்ணியமோ என்னவோ, நாங்கள் அங்கு சென்றபோது ஒரு நாயனக்காரர் அந்தக் கல் நாயனத்தை எடுத்து வாசிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். பளுவான அந்த நாயனத்தைக் கைகளால் எடுத்துப் பாங்காக வைத்துக் கொள்ளவே அவர் மிகவும் சிரமப் பட்டார். இந்நிலையில் சரியாக ஸ்வர ஸ்தானங்களைத் தொட்டு லாகவமாக வாசிப்பது என்பது எவ்வளவு கடினம்! அந்த நாயனக்காரர் மிக சிரமப்பட்டுச் சில நிமிஷநேரங்கள் ஏராளமான அபஸ்வரத்துடன் ஏதோ வாசித்தார். எப்படியோ 'அந்தக் கல் நாயனமும் வாசிக்கக் கூடியதுதான். சிரமப் பட்டால் வாசிக்க முடியும். அது விளையாட்டுக்காகச் செய்து வைத்ததல்ல. ஒரு காலத்தில் அந்தக் கல் நாயனத்தையும் யாரோ வாசித்திருக்கிறார்கள் என்பதெல்லாம் அவர் செய்த பரீட்சையின் மூலம் ஜனங்கள் மனத்தில் பட்டதல்லவா? அது போதும். நாதஸ்வரக் கச்சேரியா கேட்க வந்தோம்!' என்ற ஆறுதலுடன் வெளி சபா மண்டபத்தின் படிக்கட்டில் வந்து உட்கார்ந்தோம்.

"வேலை மெனக்கெட்டுப் போய் ஒருவன் இப்படிக் கல்லிலே நாயனம் செய்து வைத்திருக்கிறான், பார். அதைத் தூக்கத்தான் முடிகிறதா, சரியாக வாசிக்கத்தான் முடிகிறதா" என்று கேட்டார் ராமய்யர்.

"அதை ஒன்றும் வேலை மெனக்கெட்டுச் செய்யல்லே. பிரயோசனகரமாய்த்தான் செய்திருக்கிறான். அதைச் செய்தவனுடைய கைத்திறன் எப்படிப்பட்டது என்று எல்லோராலும் அறிந்துவிட முடியுமா? மரத்தில் செய்வது போல் கருங்கல்லில் குடைந்து செய்வது எவ்வளவு கடினம் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். அதோடு ஸ்வர ஸ்தானங்களுக்கு எவ்வளவு அழகாகத் துளை போட்டு இருக்கிறான், பார்! அசுர வேலை, அப்பா! அசுர வேலை!" என்றான் மூர்த்தி.

"அதிலே என்ன சந்தேகம்? இந்த மாதிரி ஒரு நாயனத்தைச் செய்யக் கூடிய ஒரு சிற்பி இருந்திருக்கும் போது இந்த நாயனத்தை எடுத்து லாகவமாக வாசிக்கக்கூடிய திறமையான நாதஸ்வர வித்வான் ஒருவனும் இருந்திருக்கத்தான் வேண்டும். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை!" என்றான் நடராஜன்.

இந்தச் சமயத்தில்தான் 'ஹி ஹி' என்று அர்த்தமில்லாமல் சிரித்துக் கொண்டே வைத்தி அங்கு வந்து சேர்ந்தான். வைத்தி வந்ததுமே எங்களுக்குச் சுவாரஸ்யம் ஏற்பட்டு விட்டது.

"அடடே! வாப்பா வைத்தி. இத்தனை நேரம் உன்னைக் காணுமே என்றுதான் தவித்துக் கொண்டிருந்தோம். உட்காரு!"

"கல் நாயனம் பார்த்தீர்களா? அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று எங்களைப் பார்த்துக் கேட்டான் வைத்தி.

அவனிடம் விஷயம் கேட்கத் தயாராயிருக்கும்போது, நாங்கள் கல் நாயனத்தைப் பற்றி எங்கள் அபிப்பிராயத்தை என்ன சொல்லப் போகிறோம்!

"எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லே, அப்பா! உனக்கு அதைப் பற்றித் தெரிந்தால் சொல்லு, கேட்கிறோம்!" என்றான் எங்களில் ஒருவனான மூத்து.

"நான் சொல்லுகிறேன், கேளுங்கள், அந்தக் கல் நாயனத்தைப் பற்றிய கதையை. அது நூறு வருஷங்களுக்கு முன்னால் இதே ஊரில் நடந்தது" என்ற ஒரு பெரிய பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தான்.

"சிற்பி நாகேசனும் மூத்துக் குமாரனும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். ஒருவர் மேல் ஒருவருக்கு உயிர். சிற்பி நாகேசன் சங்கீத ஞானம் படைத்த சிறந்த ரஸிகன். மூத்துக் குமாரனின் நாதஸ்வர வாசிப்பைக் கேட்பதில் அவனுக்கு அசாத்திய பிரேமை. நாகேசனின் கலைத் திறனைக் கண்டு மூத்துக் குமாரன் மெய் சிலிர்த்துப் போவான்.

உயிருக்கு உயிராக இருக்கும் இந்த நண்பர்கள் ஒருவருக்கொருவர் எதைத்தான் சந்தோஷத்தோடும் அன்போடும் செய்ய மாட்டார்கள்! சிற்பி நாகேசன், தன் தங்கை அஞ்சனாவும் மூத்துக் குமாரனும் காதல் பறவைகளாய்க் கூடி விளையாடுவதை அனுமதித்தான். ஆம்! அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள காதலை அறிந்து அவன் அளவு கடந்த பெருமையும் சந்தோஷமும் அடைந்தான். அவர்களுக்குக் கூடிய சீக்கிரம் திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தான்.

அஞ்சனா அழகான பெண். இசை ஞானமும் இனிய குரலும் படைத்தவள். அவளுடைய அழகும் இசையும் இயற்கையாகவே மூத்துக் குமாரனின் மனத்தைக் கவர்ந்து விட்டன.

ஒரு நாள் நாகேசன் ஒரு அழகான சிற்பத்தைச் செதுக்கிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் மூத்துக் குமாரன் அங்கு வந்தான். மூத்துக் குமாரனைக் கண்ட நாகேசன் அவனை முக மலர்ச்சியோடு வரவேற்றான். மூத்துக் குமாரன் வந்திருக்கிறான் என்பதைப் பேச்சுக் குரல் மூலம் அறிந்த அஞ்சனாவும் அங்கு வந்தாள். அந்தச் சமயத்தில் மூத்துக் குமாரன் கேலியாகச் சிரித்துக் கொண்டே, "இந்த மாதிரி சிற்பங்களையெல்லாம் மிகவும் நன்றாகத்தான் செய்கிறாய். ஆனால் நான் வாசிக்கும் நாயனம் போல் உன்னால் கருங் கல்லில் செய்து விட முடியுமா!" என்று கேட்டான்.

நாகேசன் மிகவும் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, "இந்தக் கேள்வியை நீ வேறு யாரிடமாவது போய்க்கேட்டிருக்கணும், தம்பி. கல்லில் ஒரு நாயனத்தை நான் செய்து விடுவது பிரமாதமல்ல. ஆனால் அதை எடுத்து ஒழுங்காக வாசித்துக் காட்ட இந்த உலகத்தில் ஒரு நாதஸ்வரக்காரரைத் தேடிப் பார்ப்பது தான் கடினம்!" என்றான்.

"அது வாஸ்தவம். விளையாட்டுக் குழந்தைக்குப் பொம்மை செய்து கொடுப்பது போல், நாயனம் போலக் கல்லில் ஏதோ ஒன்றைச் செய்து வைத்தால் எப்படி வாசிக்க முடியும்!" என்றான் மூத்துக்குமாரன் ஜெண்டலாக.

"தம்பி, நான் கல்லில் ஒரு நாயனம் செய்கிறேன் என்றால் அதை விளையாட்டுப் பொம்மை போலவா செய்வேன்! உண்மையாக அசல் நாயனத்தில் உள்ளது போல் பிசகாமல் ஸ்வர ஸ்தானங்களை அமைத்து, சீவாளி பொருத்த வேண்டிய இடத்தையெல்லாம் அழகாகவே செய்து வைப்பேன். சாமர்த்தியம் இருந்தால் ஒருவன் எடுத்து ஊதும் அளவுக்கே குற்றம் குறையில்லாமல் செய்வேன்" என்றான் நாகேசன்.

"அப்படி நீ செய்வதாய் இருந்தால் அதை நான் எடுத்துச் சுத்தமாய் வாசித்தே காட்டுவேன். அப்படி உன்னால் செய்ய முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம்" என்றான் மூத்துக் குமாரன்.

"செய்து விடுகிறேன். அப்படி நான் செய்யாவிட்டால் நான் என் தொழிலையே விட்டு விடுகிறேன். ஆனால் நான் செய்த நாயனத்தில் நீ ஒழுங்காகவும் ஸ்வர சுத்தமாகவும், இன்னும் நீ மர நாயனத்தில் எப்படி வாசிக்கிறாயோ அப்படி வாசித்துக் காட்டாவிட்டால் என்ன செய்வது...!" என்றான் நாகேசன்.

"நீ கல்லில் நாயனம் செய்வதோடு மட்டுமல்ல. அப்படி நீ ஒழுங்காக ஒரு நாயனத்தைச் செய்து விட்டால் அதை நான் எடுத்து ஒழுங்காக வாசித்து விட்டால், நீ உன் தொழிலை விட்டுவிட வேண்டும். அப்படி நான் வாசிக்கத் தவறி விட்டால் நீ என்ன சொல்கிறாயோ, அதற்குக் கட்டுப்படுகிறேன்" என்றான் மூத்துக்குமாரன்.

நாகேசன் சிறிது யோசித்தான். "நீ உன் தொழிலை விட வேண்டாம். நீ சுத்தமாக வாசித்துக் காட்டாவிட்டால் அத்தகைய திறமையில்லாத உனக்கு என்னுடைய தங்கையைக் கல்யாணம் செய்து தரமாட்டேன்" என்றான் நாகேசன்.

நாகேசனின் வார்த்தையைக் கேட்டதும் அஞ்சனாவுக்குச் சுரீரென்று திகில் ஏற்பட்டது. இதென்ன இவர்களுடைய தர்க்கம் விபரீதமாகப் போகிறதே என்ற கலக்கம் அவளுக்கு ஏற்பட்டது.

மூத்துக் குமாரன் சென்ற பிறகு அவ்வளவு நேரமும் நண்பர்கள் இருவரின் சம்பாஷணையையும் கேட்டுக் கொண்டிருந்த கோயில் மணியக்காரர் சிவநேசம் பிள்ளை நாகேசனைப் பார்த்து, "இந்தப் பந்தயத்தில் நிச்சயம் மூத்துக்குமாரன் ஜெயித்து விடுவான். ஏனென்றால் அவனைப் போல ஒரு நாதஸ்வர வித்வான் இந்த நாட்டிலேயே இல்லை" என்றார்.

"அவன் மகா வித்வான்தான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால் இதிலே சில நுணுக்கமான விஷயம் இருக்கிறது. அதை நீங்க மறந்துட்டீங்க. அவன் சாதாரணமாக மரத்தால் செய்த நாயனத்தை வாசிப்பதில் கெட்டிக்காரன். ஆனால் நான் எடுத்து வாசிக்கச் சொல்வது கல்லால் செய்த நாயனம். அவன் இதில் நிச்சயம் தோற்றுப் போய் விடுவான்" என்றான் நாகேசன் உறுதியுடன்.

"அதென்னமோ அந்த நுணுக்கமெல்லாம் நான் என்ன கண்டேன்!" என்றார் சிவநேசம்.

"நாயனத்தை எப்படி எடுத்து வைத்துக் கொண்டு ஊதுறாங்க என்பதை நீங்க கவனித்திருப்பீங்க. அடியில் கட்டை விரல் இரண்டாலேயும் நாயனத்தைத் தாங்கி இருப்பாங்க.

மற்ற விரல்கள் மேலே ஸ்வர ஸ்தானங்களை ஓயாமல் மாறி மாறித் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். மர நாயனம் அதற்கு இசைந்த வண்ணம் இலேசாக இருக்கும். கல் நாயனம் மிகவும் பளுவாகத்தானே இருக்கும்! அதுவும் தவிர ஊதும் போது மர நாயனத்தில் காற்றுப் போவது போல் கல் நாயனத்தில் போகாது. மூச்சுத் திணறும். இவ்வளவு சிரமத்தையும் அவன் சிறிதும் உணராமல் என்னிடம் வீம்பு பேசி விட்டுப் போய் விட்டான்'' என்றான் நாகேசன்.

நாகேசன் கோயில் மணியக்காரரிடம் பேசியதை யெல்லாம் அஞ்சனா கேட்டுக் கொண்டு தான் இருந்தாள். அண்ணனின் பேச்சு அவள் நிலை அதிகமாக்கியது. கோயில் மணியக்காரர் சென்றதும் அவள் பரபரப்போடும் திகிலோடும் நாகேசனிடம் வந்து, "அண்ணா, இப்படி விபரீதமாக ஒரு போட்டியும், பந்தயமும் உண்டா! கொஞ்சம் யோசியுங்க'' என்றாள்.

"நான் என்ன யோசிப்பது! அவன் தான் யோசிக்கட்டுமே! யோசனை இல்லாமல் என்னிடம் வீம்பு பேசலாமா! அவன் சிறந்த வித்வான் தான்; ஒப்புக் கொள்ளுகிறேன். தன் திறமையை எதிலும் காட்டி விடலாம் என்று கனவு காணக் கூடாது, பாரு. அவன் தான் கல் நாயனத்தை அபூர்வமாக வாசித்து விடுவேன் என்கிறானே, அதில் உனக்கென்ன கவலை!'' என்றான்.

"என்ன கவலையா! கவலை இல்லாமல் எப்படி இருக்க முடியும்! நீங்கள் இப்படி விபரீதமாக ஒரு போட்டியை ஏற்படுத்திக் கொண்டால்......'' என்றாள் கவலையோடு.

நாகேசன் சிறிது நேரம் யோசித்தான். "உனக்குத் துயரத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. வேண்டுமானால் நான் ஒரு வழி செய்கிறேன். பந்தயம் வைத்தது வைத்ததுதான். அதை மாற்ற முடியாது. ஆனால் பந்தயத்தில் அவன் தோற்று விட்டாலும், உனக்கு அவன் மேலுள்ள காதலுக்காகவும் நான் அவன் மீது கொண்டுள்ள நட்புக்காகவும் உன்னை அவனுக்குக் கல்யாணம் செய்து தருகிறேன்'' என்றான்.

அஞ்சனாவுக்கு நாகேசனின் வார்த்தை ஓரளவு ஆறுதலை அளித்தாலும் பந்தயத்தில் தோற்ற பின் முத்துக் குமரன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப்படுவானா என்ற சந்தேகம் எழுந்தது. அவனும் தன் அண்ணனைப் போல் மதிப்பும் கௌரவமும் உள்ளவன்தானே! இருந்தாலும் அவன் மனநிலையையும் அவள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

மறு நாள் மாலை அவள் முத்துக் குமரனைத் தனியாகச் சந்தித்த பொழுது, "நீங்கள் ஏன் அண்ணாவிடம் வீணாகக் கல்லில் நாயனம் செய்ய உன்னால் முடியுமா என்று கேட்டு விபரீதமாக ஒரு போட்டியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்!'' என்றாள் மெதுவாக.

முத்துக் குமரன் விஷமமாகச் சிரித்தான். "இதில் என்ன விபரீதம்! உன் அண்ணன் கல்லில் எப்படி நாயனம் செய்வது என்று விழிக்கிறானோ!'' என்றான்.

"அவர் ஒன்றும் விழிக்க வில்லை. அவர் செய்து விடுவார். ஆனால் நீங்கள் அதை வாசிக்க வேண்டாமா!''

"உன் அண்ணன் கல்லில் நாயனம் செய்து விடுவான் என்று நீ நம்பும் போது அதை நானும் எடுத்து அழகாக வாசித்து விடுவேன் என்ற நம்பிக்கை உனக்கு ஏற்படாதுபோனது தான் துரதிர்ஷ்டம்'' என்று பெருமூச்சு விட்டான் முத்துக் குமரன்.

"ஏனோ என் மனத்தில் நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறது.''

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்! வாசிக்க முடியும் என்ற நம்பிக்கைதான் எனக்கு இருக்கிறதே!''

"நீங்க எனக்காக இதிலே ரொம்பப் பிடிவாதம் காட்டாதிங்க'' என்றாள் அஞ்சனா.

"பிடிவாதம் காட்ட வேண்டிய இடத்திலே பிடிவாதம் காட்டினால்தான் கௌரவம் நிலைக்கும்'' என்றான் முத்துக் குமரன்.

"நீங்கள் பிடிவாதம் காட்டலாம். ஆனால் இதில் நீங்கள் தோற்று விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்......''

"தோல்வியைப் பற்றி எதற்காக நாம் நினைக்க வேண்டும்!''

அவள் தயக்கத்தோடு சொன்னாள். "நீங்கள் நினைக்க வேண்டாம். நீங்கள் தோற்று விட்டாலும் அண்ணா உங்களுக்குத்தான் என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதாய் இருக்கிறார்'' என்றாள்.

முத்துக் குமரன் அலட்சியமாகச் சிரித்தான். "உன் அண்ணன் மட்டும்தான் மனி

தனே! மானமுள்ளவனே! நான் தோற்று விட்டால்! உன்னோடு சேர்த்துப் பதினாயிரம் பொன்னை வைத்துக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்றான்.

"இவ்வளவுதானா நீங்கள் என்மீது வைத்துள்ள அன்பு காதல் எல்லாம்!" என்றாள் துடிப்போடும் விம்முதலோடும்.

"உன்மீது எனக்குள்ள காதலை நீ இவ்வளவு எளிதாக அளந்து விட்டதுதான் அசட்டுத் தனம். நான் கல் நாயனத்தை எடுத்து ஊது வேனா ஊதமாட்டேனா என்று சந்தேகப் படுகிறவள்தானே! நீ அதைப் போலத்தான் காதலைப் பற்றியும் முடிவு கட்டுகிறாய். ஆனால் எத்தகைய காதலையும், கல்யாணத்தையும் தோல்வி மனப்பான்மையோடு வரவேற்க நான் சித்தமாய் இல்லை'' என்றான் முத்துக் குமரன் கண்டிப்பான குரலில்.

அஞ்சனா, "சர்வேசுவரன்தான் நல்லது செய்யணும்!" என்ற துயரம் நிறைந்த வார்த்தையைச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

நாகேசன் கல்லில் நாயனம் செதுக்குவதில் ஈடுபட்டிருந்தான். மிகுந்த பிரயாசையுடனும் கவனத்துடனும் வேலை செய்து வந்தான். சிறிது சிறிதாகக் கல்லில் நாயனம் உருவாகிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் முத்துக் குமரனும் வந்து அவன் செய்யும் வேலையைக் கவனித்து விட்டு, அவனுடைய திறமையைப் புகழ்ந்து விட்டுச் செல்வான்.

அஞ்சனாவின் பயமும் சஞ்சலமும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இனிமேல் எதையும் தடுக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. அன்று இரவு அவள் தூங்கவே இல்லை. அவள் மனம் பலவிதமாகக் குழம்பியது. சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அன்று இரவே அவன் செய்து வைத்திருக்கும் கல் நாயனத்தைச் சிறிது பின்னப்படுத்தி விட்டால்... சகோதரனை விடத் தன் காதலனின் கௌரவத்தைத்தான் அவள் பெரிதாக நினைத்தாள். தன் ஆயுளில் என்றுமே தன் சகோதரனுக்குச் செய்து அறியாத பெருந் துரோகத்தைச் செய்யத் துணிந்தாள்.

படபடக்கும் நெஞ்சைக் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்து வெளித் தாழ்வாரத்துக்கு வந்தாள் அஞ்சனா. மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளியில் சுவர் ஓரமாக இரண்டு நாயனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதில் ஒன்றில் சிவானிக் குஞ்சங்கள் கட்டப் பட்டிருந்தது. மற்றொன்று சாதாரணமாக இருந்தது. சிவானிக்குஞ்சம் கட்டப்பட்டிருக்கும் நாயனம் கல் நாயனம் செய்வதற்கு மாதிரியாக வைத்துக் கொள்ளப்பட்ட மர நாயனம். அதற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது கல் நாயனம் என்பது அஞ்சனாவுக்குத் தெரியும். அவள் பதைபதைப்போடு சுற்றிலும் பார்த்தாள்.

அங்கிருந்த கட்டில் ஒன்றில் நாகேசன்படுத்து ஆழ்ந்த நித்திரையிலிருப்பதை அறிந்தாள். சிறிது தூரத்தில் ஒரு சிறு சுத்தியல் கிடந்தது. பதைபதைப்போடு அதைக் கையில் எடுத்துக் கொண்டு போய் சிவானிக் குஞ்சம் கட்டப் படாதிருக்கும் நாயனத்தின் அடி பாகத்தில் சுத்தியலால் ஒரு அடி அடித்தாள். அந்த சம

யம் தன் தலையில் யாரோ சுத்தியலால் அடித்தது போல் சட்டென்று நித்திரை கலைந்து எழுந்தான் நாகேசன். அவன் பரபரப்போடு எழுந்து பாய்ந்து அந்த நாயனங்களில் ஒன்றை எடுத்துப் பார்த்தான். அவனுடைய பதை பதைப்பும் திகிலும் சிறிது தணிந்தன. ஆனால் ஆத்திரமும் கோபமும் புகைந்து எழுந்தன.

அஞ்சனா நடுங்கியபடியே நின்றாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகி வழிந்தது. அவள் கையிலிருந்த சுத்தியல் நழுவிக் கீழே விழுந்தது. "அண்ணா, நான் செய்தது தவறு......" என்றாள்.

"தவறுதான். மர நாயனத்தையல்லவா உடைத்து விட்டாய்! கல் நாயனத்தைச் சேதப் படுத்தி யிருந்தால் நீ செய்தது உனக்குச் சரியாக இருந்திருக்கும்...நீ என்ன செய்வாய்! அவன் உன்னை அப்படி மயக்கி இருக்கிறான். இப்படி ஒரு சூழ்ச்சி செய்து என்னைக் குலைத்துவிடலாம் என்ற தைரியத்தில்தான் இன்று வரையில் அவன் என்னிடம் வீம்பு பேசியிருக்கிறான். இல்லாவிட்டால் அவன் கல் நாயனத்தை வாசித்து வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்திருக்க மாட்டானா!" என்றான் கோபத்தோடும் ஆத்திரத்தோடும்.

அஞ்சனா விம்மும் குரலில், "அண்ணா அவர் இந்தக் காரியம் செய்யும்படி தூண்டவில்லை. நானாகத்தான் இதைச் செய்யத் துணிந்தேன். வீணாக அவர்மீது பழி சுமத்த வேண்டாம். இதற்காக நீங்கள் எனக்கு எத்தகைய தண்டனை கொடுப்பதாய் இருந்தாலும் அனுப விக்கச் சித்தமா யிருக்கிறேன்" என்றாள்.

நாகேசன் ஏளனமாகவும் வெறுப்போடும் சிரித்தான். "அவன் 'தூண்டி விட்டான்' என்று நீ சொல்லுவாய்! அப்படிச் சொன்னால் அவனுடைய மதிப்பல்லவா பாழாகி விடும்! இந்தத் துரோகம் நீ எனக்குச் செய்யத் துணிந்ததற்கு உன்னை நான் மன்னிக்கவே முடியாது. ஆனால் நீ இதை உன் சொந்த புத்தியினால் செய்ய வில்லை. அவனுடைய தூண்டுதலினால் செய்திருக்கிறாய் என்பதினால் உன்னைச் சும்மா விடுகிறேன். என் கண்ணெதிரே நிற்காதே. போய்விடு!" என்றான் வெறுப்போடு.

கண்ணீர் பெருகிய வண்ணம் தலை குனிந்து குன்றிப் போய் நின்று கொண்டிருந்த அஞ்சனா தன் சகோதரனிடம் எதுவும் பேசச் சக்தி யற்றவளாய் உள்ளே சென்றாள்.

மறுநாள் காலையில் முத்துக் குமரன் வழக்கம் போல் சந்தோஷத்தோடும் குதூகலத்தோடும் அங்கே வந்தான். அவன் வந்ததுமே கல் நாயனத்தை எடுத்துப் பார்த்து விட்டு, "பேஷ்! பாக்கி வேலையையும் பூர்த்தி செய்து விட்டாய் போலிருக்கிறது. மர நாயனத்தை விடக் கொஞ்சம் கனமாகத்தான் இருக்கிறது. பார்வைக்கு மிகவும் அழகாகவே இருக்கிறது. ஸ்வர ஸ்தானங்களும் ரொம்ப சுத்தமாகவே இருக்கின்றன. வாசிப்பதற்கும் லாகவமாக வரும் போல்தான் இருக்கிறது. எல்லாம் நாளை தினம் தெரிந்து விடும்" என்று சிரித்துக் கொண்டே கூறி விட்டுப் போய் விட்டான்.

முத்துக் குமரன் மனம் குலையாமல் எப்பொழுதும் போலவே தமாஷாகப் பேசுவது நாகேசனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

நாகேசனுக்கும் முத்துக் குமரனுக்கும் ஏற்பட்டுள்ள போட்டி பற்றிக் கடந்த பத்து தினங்களாகவே ஊரில் வதந்தியாக இருந்தது. பஞ்சாயத்தார்களும், ரசிகர்களும், சங்கீத மேதைகளும் சபையில் நிறைந்திருந்தனர். நாகேசனால் செய்யப்பட்ட கல் நாயனம் மேடை மீது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரம் வந்ததும் நாகேசனும் முத்துக் குமரனும் அந்த மேடைக்குச் சமீபமாக வந்தார்கள். ஜனங்களின் பரபரப்பும் அதிகமாகியது. முத்துக் குமரன் மேடை மீது ஏறி உட்கார்ந்து அங்கு வைத்திருந்த நாயனத்தை லாகவமாகத் தூக்கி நாகேசனைப் பார்த்துப் பணிவோடு, "உனக்கு என்ன வாசிக்கணும், சொல்லு" என்றான்.

நாகேசன் மிகவும் அலட்சியமாக, "சும்மா நீ எப்பொழுதும் வாசிக்கிற சங்கராபரண ராகத்தையே வாசித்து ஆதி தாளத்திலே பல்லவி வாசித்தால் போதும்" என்றான்.

முத்துக்குமரன் சீவாளிகளை எல்லாம் ஊதிச் சரி பார்த்துக் கொண்டான். ஒரு சில விநாடிகளில் நாதஸ்வரத்தின் இனிய ஒலி அக் கோயிலெங்கும் பரவி ஒலித்தது. அதிகம் சொல்லுவானேன்! இரண்டு மணி நேரம் சங்கராபரண ராகம் உயிர் பெற்று வந்து நர்த்தனமாடி எல்லோரையும் பிரமிக்க வைத்து விட்டது.

"போதும். இது போதும். முத்துக்குமரா! நீ ஜெயித்து விட்டாய். நான் தோற்று விட்டேன். இந்தச் சபை எதிரில் ஒப்புக் கொள்கிறேன். நம்முடைய ஒப்பந்தப் பேச்சுப்படி இனி நான் சிற்றுளியைத் தொட மாட்டேன். என் தங்கை அஞ்சலையை உனக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விடுகிறேன்" என்றான் நாகேசன் தழுதழுத்த குரலில்.

முத்துக்குமரன் அந்த நாயனத்தைக் கீழே வைத்து விட்டு எழுந்து நாகேசனை அணைத்துக் கொண்டு, "சபையிலுள்ளவங்க எதிரே இதை ரொம்ப வணக்கத்தோடு சொல்கிறேன். நான் இவருடைய தங்கை அஞ்சலையைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் இவரு தன் தொழிலை விடாமல் இருக்க வேண்டும். இவர் தன் தொழிலை இந்தப் பந்தயத்துக்காக விட்டு விடுவது இவருக்கு மாத்திரம் நஷ்டமில்லை. நாட்டிற்கே நஷ்டம். இங்குள்ள பெரியோர்கள் இவரை என் வேண்டுகோளுக்கு இணங்கும்படி செய்ய வேண்டும்!" என்றான்.


அங்குள்ள பெரியோர்களும் முத்துக்குமரனின் வார்த்தையை அனுசரித்துப் பேசி நாகேசனை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவே நாகேசனும் மனம் சமாதானமடைந்து அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினான்" என்று வைத்தி ஒரு விதமாகக் கதையை முடித்தான்.

"அதிருக்கட்டும்! எப்படி முத்துக்குமரன் திடீரென்று வந்து அந்தக் கல் நாயனத்தை லாகவமாக எடுத்து ஒழுங்காக வாசிக்க முடிந்தது! அவ்வளவு பளுவான வாத்தியத்தை இரண்டு கட்டை விரல்களால் மட்டும் தாங்கிச் சிரமமில்லாமல் வாசித்து விட்டானென்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டுமல்லவா!" என்றான் முத்து.

"அதுதான் கதையில் நான் சொல்ல வேண்டிய முக்கியமான விஷயம். முத்துக்குமரன் கல் நாயனத்தை எடுத்து சுருதி பிசகாமல் ஒழுங்காக வாசிக்கத் தொடங்கியதும் நாகேசனே திகைப்படைந்து விட்டான். அவ்வளவு லாகவமாக எடுத்து மிகச் சிறந்த முறையில் அவன் வாசித்துக் காட்டி விடுவான் என்று அவன் நம்ப வில்லை யல்லவா! அவனுக்கே மிகவும் ஆச்சர்யமாகவும் குழப்பமாகவும் தான் இருந்தது. இதைப் பற்றி முத்துக்குமரனிடம் தனித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளாத வரையில் நாகேசனின் மனம் நிம்மதி யடையாது போயிருந்தது. ஒரு நாள் முத்துக்குமரனோடு பேசிக் கொண்டிருக்கும் போது மெதுவாகக் கேட்டு விட்டான். முத்துக் குமரன் 'திடீரென்று நான் வந்து உன்னால் கல்லிலேயே ஒரு நாயனம் செய்ய முடியுமா என்று கேட்கும் போதே, நீ தெரிந்து கொண்டிருக்க வேண்டும். கல்லில் ஒரு நாயனம் செய்து அதை வாசித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஆர்வமும் எனக்கு இருந்தன. நானே உன்னைக் கல்லில் நாயனம் செய்ய முடியுமா என்று கேட்டிருப்பேன். நான் ஒரு நாயனக்காரன். எவ்வளவு நாள் குருகுல வாசம் செய்து இந்த வித்தையைக் கற்றுக்கொண்டிருப்பேன்! சாதாரணமாக ஒரு மர நாயனத்துக்குச் சரியாக ஸ்வர ஸ்தானங்களைத் தொட்டு வாசிக்கவே ரொம்ப சிரமப்பட வேண்டும். இப்பொழுது எல்லா வற்றையும் அனாயாசமாக வாசித்தாலும் ஆரம்பத்தில் எவ்வளவு பாடு பட்டிருப்பேன்! சாதாரண மர நாயனத்தை ஒழுங்காக வாசிக்க நான் இவ்வளவு சிரமப்பட்டிருக்கும்போது ஒரு கல் நாயனத்தை வாசிக்க எவ்வளவு சிரமப்பட வேண்டும் என்று நான் யோசித்திருக்க மாட்டேனா! மர நாயனத்திலேயே கைப் பழக்கமானதை விட்டு வேறொரு நாயனத்தை மாற்றிக் கொடுத்தால் கூடக் கொஞ்சம் சிரமப்படுமே! அப்படி இருக்கும்போது ஒரு கல் நாயனத்தை நான் எடுத்து வாசிக்க வேண்டு மென்றால் அதற்குத் தக்கபடி என்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள மாட்டேனா! அது எவ்வளவு கனமிருக்கும்! எப்படிக் காற்றுப் போகும் என்பதெல்லாம் ஆரம்பத்திலேயே எனக்குத் தோன்றாதா! நீங்கள் பந்தயம் வைத்ததிலிருந்து எனக்கு அது தானே கவலை! சாதாரணமாய் ஒரு கல் நாயனம் எவ்வளவு கனமிருக்கும் என்று நான் நினைத்தேனோ அதை விட இன்னும் கொஞ்சம் கனமான இரும்புக்குழாயை வைத்துக்கொண்டு தினமும் ஒழிந்த நேரத்திலெல்லாம் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு மூச்சை அடக்கி விட்டு மனத்தால் ஒரு ராகத்தையோ பல்லவியையோ நினைத்துக்கொண்டு ஸ்வர ஸ்தானங்களைத் தொட்டுப் பார்ப்பேன். இது ஏதோ தேகாப்பியாசம் செய்வது போல் முதல் இரண்டு மூன்று நாள் இருந்தது. அப்புறம் எல்லாம் சர்வ சாதாரணமாய்ப் போய் விட்டது. அப்புறம் சபையிலே வந்து கல் நாயனத்தை எடுத்து எப்படி வாசித்தேன் என்று சொல்லணுமா......!' என்றான்.

"நாகேசன் முத்துக் குமரனை ஆர்வத்தோடு அணைத்துக் கொண்டு, 'என் தங்கை அஞ்சலை ரொம்ப பாக்கியம் செய்தவள்' என்றான் தன்னையும் மறந்த பேரானந்தத்தோடு!"

வைத்தி கதையை முடித்ததும் எல்லோருமே, "பேஷ், பேஷ். கதை ரொம்பப் பிரமாதம்!" என்றார்கள்.



'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப் பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—


1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

வள்ளி மணாளன்



டி. எஸ். எஸ்.

அந்தப் பாஸஞ்சர் வண்டியை மெயிலாகவே மாற்றிவிட வேண்டும் என்ற எண்ணமோ என்னவோ, குமாரசாமி வண்டியின் வேகத்தை அதிகரிக்க விசையை முடுக்கி விட்டான். பிறகு இஞ்சினின் இரும்புப் பிடியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு எதிரே வரப் போகும் ஸ்டேஷனை மிகுந்த ஆவலுடன் பார்த்தான். முதல் கைகாட்டி மரமும் வந்து விட்டது!

குமாரசாமியின் மனம் இன்பலோகத்தில் மிதக்கத் தொடங்கியது. அவன் இன்னும் இரண்டு மூன்று நிமிஷங்களில் தன் மனத்தைக் கொள்ளை கொண்ட வள்ளியைப் பார்க்கப் போகிறான்; அவளுடன் பேசப் போகிறான்! அவள் கையில் மண் குடத்துடன் வந்து ஒய்யாரமாக நிற்கப் போகிறாள்!

உண்மையில் அவள் இஞ்சினில் தண்ணீர் பிடிக்கவா வருகிறாள்! குமாரசாமியுடன் கொஞ்சும் மொழி பேச அல்லவா வருகிறாள்!

குமாரசாமியின் மனம் பெரிய பெரிய கோட்டைகளை யெழுப்பியது. அவனை எங்கிருந்தோ ஒரு சந்தோஷம் வந்து பற்றிக் கொண்டது. அவனையும் அறியாமல் அவனது முகத்தில் ஒரு குறுநகை தோன்றி மறைந்தது.

இஞ்சினை ஒருமுறை காது செவிடாகும்படி பலக்கக் கத்த விட்டான்! தினமும் இந்த இடம் வரும்போது இந்த மாதிரி அவன் இஞ்சினைக் கத்த விடுவது வழக்கம். 'வள்ளி, இதோ வந்து விட்டேன்' என்பது அதன் அர்த்தம் போலும்!

அப்பாடி! ஒருவழியாய் அந்தச் சின்ன ஸ்டேஷனில் போய் வண்டி நின்றது. இஞ்சின் தன் களைப்புத் தீர நீண்டதொரு பெருமூச்சை வெளிப்படுத்தியது. இஞ்சினுக்கு அருகில் நாலைந்து சிறுவர்களும் சில பெண்களும் வழக்கம்போல் தண்ணீர் பிடிக்கக் காத்துக் கொண்டிருந்தனர். தண்ணீரைத் திறந்து விட்டு விட்டுக் குமாரசாமி வெளியே வந்தான். அவனது கண்கள் வள்ளியைத் தேடலாயின!

வயது வந்த புளிய மரம் ஒன்றின் அடியில் குமாரசாமியின் ஆசைக் காதலி வள்ளி நின்று கொண்டிருந்தாள். அவளது அழகிய முகம் என்றும் போலில்லை. சற்று வாட்டமுற்றதாகக் காணப்பட்டது. இந்த நிலையில் அவளைக் கண்டதும் குமாரசாமியின் மனம் துணுக்குற்றது. ஒரே எட்டில் அவள் அருகில் போய் நின்றான்.

"வள்ளி!" என்றான் அவன்.


தரையை நகத்தால் கீறிக் கொண்டு தலை குனிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள் வள்ளி. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொல வென்று உதிர்ந்தது. விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். "வள்ளி! ஏன் அழுகிறாய்!" என்று கேட்டான் குமாரசாமி, நெகிழ்ந்த உள்ளத்துடன்.

"நேற்று அப்பாவிடம் சமாசாரத்தைச் சொன்னேன், அவருக்கு ஒரே கோபம் வந்திடுச்சு......" அவளுடைய கரைந்த குரலில் கண்ணீர் கலந்து தொனித்தது. அவள் மேலும் தொடர்ந்து, "ஊர் பெயர் தெரியாத ஒருவனோடு நான் உன்னை அனுப்பத் தயாராயில்லை. அதோடு உனக்கு முறைக்கார மாமன் ராமலிங்கம் இருக்கிறான். அப்படி யிருக்கும் போது எவனோ இஞ்சின்காரனை.. அப்படி இப்படி என்று கண்டபடி கோவிச்சுக்கிட்டாரு!" என்றாள் விக்கியபடியே.

கார்டின் விசில் சப்தம் குமாரசாமியின் காதில் நாராசமாய் விழுந்தது. ஸ்டேஷன் மணி சப்தம், அவனது தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தது. அவனுக்கு வந்த கோபத்தில் அப்படியே வண்டியை விட்டு விட்டு எங்கேனும் கண்காணாத காட்டுக்கு ஓடிவிடலாமா என்று தோன்றியது. ஒரு நொடியில் மனத்தை நிதானப்படுத்திக் கொண்டு, "வள்ளி, நாளைக்கு எனக்கு ஓய்வு தினம். வந்து பார்க்கிறேன். சாவகாசமாகப் பேசலாம்" என்று சொல்லி விட்டு வேண்டா வெறுப்பாக இஞ்சினில் ஏறினான் குமாரசாமி.

* * *

(குமாரசாமிக்கு ரயிலில் உத்தியோகமாகி நான்கு வருடங்கள் இருக்கும். தான் உண்டு, தன் ரயில் உண்டு என்று இருப்பவன் குமார



இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதர் திரு ஷெர்மன்கூபர் சமீபத்தில் பம்பாய், பயர்ஸ்டோன் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். அவரைக் கம்பெனி டைரக்டர்களும் இன்ஜினியர்களும் வரவேற்றுப் பல பகுதிகளைக் காண்பித்தனர். படத்தின் நடுவிலிருப்பவர்தான் திரு கூபர்.

சாமி. முதல் தேதி பிறந்தால் தன் செலவுக்குப் போக மீதியை அப்படியே தன் தந்தையிடம் கொடுத்து விடுவான்! உண்மையிலேயே குமாரசாமிக்கு இந்த ரயில் உத்தியோகம் ரொம்பவும் பிடித்திருந்தது.

அதை மேலும் அதிகமாகப் பிடிக்கச் செய்தவள் அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிட்ட வள்ளி. அன்று மத்தியான வண்டியில் அவனுக்கு வேலை. ஒரு மணிக்கு அந்த ஸ்டேஷனில் எதிர் எதிர் வண்டிகள் சந்திப்பு. இவனுடைய வண்டி முன்னால் வந்து விட்டபடியால் எதிரே வந்து கொண்டிருந்த வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்தான். இஞ்சினை விட்டுக் கீழே இறங்கினவன் சுற்று முற்றும் பார்த்தான். ஜிலுஜிலு வென்று குளுமையாகக் காற்று வீசியது. நெருப்பில் வெந்து போன குமாரசாமிக்கு அந்தக் கிராமத்துக் காற்று தன்னை அப்படியே சொர்க்க லோகத்துக்குத் தூக்கிச் சென்றது போல் இருந்தது.

கையில் மண் குடத்துடன் சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த பெண் ஒருத்தி அவனையும் இஞ்சினையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளது பார்வையிலிருந்தே அவள் கருத்தைப் புரிந்து கொண்ட குமாரசாமி, "தண்ணீரா வேண்டும்!" என்று கேட்டான்.

'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாக அவள் தன் தலையை அசைத்தாள்.

குடத்தில் நீர் பிடிக்கும் பொழுது அவள் தன் ஓரக் கண்களால் அவனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். திடீரென்று அவனுக்குத் தன் உள்ளத்தில் ஒருபுத்துணர்ச்சி பரவுவது போலத் தோன்றியது. அவனும் மெய்ம்மறந்து நின்றான். குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்து போன அவள் சற்றைக்கொருதரம் திரும்பித் திரும்பி அவனைப் பார்த்துக் கொண்டே போனாள். குமாரசாமியும் அவள் கண்ணுக்கு மறைகிற வரையில் பார்த்துக் கொண்டிருந்தான். இது தான் அவர்களிடையே ஏற்பட்ட முதல் சந்திப்பு!

அன்றிலிருந்து தினமும் குமாரசாமி வரும்வண்டிக்குத்தான் அவள் தண்ணீர் பிடிக்க வருவாள். நாளடைவில் தண்ணீர் எடுத்துச் செல்வதோடு மட்டும் நில்லாமல், குமாரசாமியின் மனத்தையும் எடுத்துப் போவதற்கு ஆரம்பித்தாள்!

வள்ளியைக் காண வில்லை என்றால் குமாரசாமிக்கு அந்த ஊரை விட்டு வண்டியைக் கிளப்பவே மனம் வராது. நாளடைவில் அவர்களது காதல் அப்படி வளர்ந்து அன்னியோன்னியமாகி விட்டது!

வள்ளி மாநிறம்தான். அப்படி ஒன்றும் வள்ளி பிரமாதமான அழகி என்று சொல்வதற்கும் இல்லை! நேர் வகிடுதான் எப்போதும் எடுப்பாள். உருண்டையான களையான முகம். தலை மயிரை அள்ளிச் சுருட்டிச் செருகிக் கொண்டிருப்பாள். அவளுக்கு வயது பதினேழு பதினெட்டு இருக்கும்.

ஆனாலும் குமாரசாமியின் கண்களுக்கு அவள் பேரழகியாகவே பட்டாள். அவளுக்கு இணை இந்த லோகத்திலேயே யாரும் கிடையாது என்பது அவனுடைய திண்ணமான எண்ணம்! காதலர் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் அவர்கள் வேறு எதையும் பொருட் படுத்த மாட்டார்கள் என்று சொல்வதெல்லாம் இதுதான் போலிருக்கிறது.

* * *

குமாரசாமி தான் சொன்னபடி வள்ளியைச் சந்திக்க அந்த ஊர் மாந்தோப்புக்கு வந்திருந்தான்; வள்ளியும் வந்திருந்தாள். இருவரும் உட்கார்ந்து கொண்டு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர். வள்ளியின் தந்தையை எப்படிச் சரிப்படுத்துவது, ராமலிங்கத்தை எப்படிச் சமாதான முறையில் நின்று ஒதுக்குவது என்ற பல திட்டங்களையெல்லாம் பற்றிப் பேச்சு சென்றது!

"வள்ளி! உன் மாமனின் வீரத்தையும் போக்கிரித் தனத்தையும் பற்றித்தான் கேள்விப் பட்டிருக்கிறேனே தவிர, ஆளை ஒரு தடவைகூடப் பார்த்ததில்லையே!" என்றான் குமாரசாமி.

அந்தச் சமயம் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அவர்கள் உட்கார்ந்திருந்த மாமரத்தின் கிளை ஒன்றிலிருந்து ஒரு மனித உருவம் 'தொப்' பென்று கீழே குதித்தது. அது வள்ளியிருக்கும் இடத்தை நோக்கி நடந்து வந்தது.

"நீ யார்!" என்றான் குமாரசாமி.

"நான் யாரா! என் போக்கிரித்தனத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகவும் என்னைப் பார்க்க வேண்டும் என்றும் சொன்னாயே, அதே போக்கிரி ராமலிங்கம்தான் நான்!" என்று சொல்லி விட்டு ராமலிங்கம் கடகடவென்று வாய்விட்டு ஒரு முறை சிரித்தான்.



இருமல், தொண்டைப்புண், பிராங்கைடிஸ் ஆஸ்த்மா மற்றும் கக்குவான் இருமல் இவைகளினின்று நிவாரணம் அளிப்பதால்தான் டாக்டர்கள் 60 வருஷகாலமாக பெர்டுஸின் டெஷ்னரைச் சாப்பிடும்படி சொல்லிவருகிறார்கள். துரித நிவாரணம், யாதொரு கெடுதியுமின்றி நிவாரணம். சாப்பிடுவதற்கு ஆனந்தம். ஆகவே நீங்களும் பெர்டுஸின் வாங்குங்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கிறது.

இடாபா லிமிடெட், ஷான், லீஷென்ஸ்டின் ஸ்விஸ் கஸ்டம் அண்ட் இகனமிக் டெரிடெரி இவர்களின் அனுமதியின் பேரில் இன்பா லிமிடெட் தபால் பெட்டி 1041, பம்பாய் - 1 இவர்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

ILY.9.TAM

குமாரசாமிக்கு என்ன பதில் சொல்லுவதென்றே புரியவில்லை.

அதற்குள்ளாக, "அந்தப் போக்கிரி நீயா, நானு!" என்று கேட்டு வலுச் சண்டைக்கு இழுத்துத் திடீரென்று குமாரசாமியின் மேல் ஒரு குத்தும் விட்டுவிட்டான் ராமலிங்கம்!

குமாரசாமிக்கும் கோபம் வந்து விட்டது. ராமலிங்கத்தின் இரும்புக் கையைப் பிடித்துத் தன் இரு கைகளாலும் முறுக்கினுன். இதைச் சற்றும் எதிர்பாராத ராமலிங்கம் துடியாய்த் துடித்தான்; புழுவாய் நெளிந்தான்.

"ஏண்டா, என்னிடமா உன் வேலையைக் காட்டுகிறுய்! தொலைத்து விடுவேன், தொலைத்து!" என்று சொல்லிக் கொண்டே ஒரு குத்து விட்டான் குமாரசாமி.

"ஐயோ, வேண்டாங்க! விட்டு விடுங்கள். எனக்குப் பயமாயிருக்கிறது!" என்று கத்தினுள் வள்ளி.

இதற்கிடையில் குத்து வாங்கின ராமலிங்கம் மரக்கட்டை போல் 'பொத்' தென்று கீழே விழுந்தான். மூர்ச்சையாகிவிட்டதாக நினைத்து, வள்ளியைக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரச் சொல்லிவிட்டு ராமலிங்கத்தின் முகத்தைத் துடைக்கலானுன் குமாரசாமி.

வள்ளியை அந்த இடத்திலிருந்து அகற்ற ராமலிங்கம் நடித்த நாடகம் என்பது, ராமலிங்கம் திடீரென்று எழுந்து குமாரசாமியைத் தாக்கின போதுதான் தெரிய வந்தது!

பிறகு கொஞ்ச நேரம் இருவருக்கும் வலுத்த சண்டை நடந்தது. இவன் அவனைத் தாக்க அவன் இவனைத் தாக்க, அந்தத் தோப்பு ரணகளமாக மாறியது!

முரடன் ராமலிங்கத்தினிடம் மாட்டிக் கொண்டு தவித்துத் தண்ணீராகக் கீழே விழுந்து விட்டான் குமாரசாமி. சட்டென்று குமாரசாமியின் மேலே ஏறி உட்கார்ந்து கொண்ட ராமலிங்கம், "இந்த ராமலிங்கத்திடமா உன் வேலை! உனக்கு இங்கேயே சமாதி கட்டிவிடுகிறேன், பார்!" என்று சிம்ம கர்ஜனை செய்ததோடு நில்லாமல், இடுப்பிலே செருகியிருந்த கத்தியையும் எடுத்து விட்டான்.

அடுத்த கணம் "ஐயோ!" என்ற அலறல்! குமாரசாமி போட்ட கூக்குரலா அது! இல்லை!

சிறிய பாறாங்கல் ராமலிங்கத்தின் பின் தலையைப் பதம் பார்த்ததனுல் ஏற்பட்ட ஓலம் அது! ராமலிங்கம் தரையில் புரண்டு துடிதுடித்தான். அவனது மண்டையிலிருந்து ரத்தம் ஆற்றுப் பெருக்கைப்போல் 'குபு குபு' என்று வெளிவந்தது.

அந்தக் கல்லைத் தூக்கி ராமலிங்கத்தின் பின்னுலிருந்து அவனைத் தாக்கியவள் வள்ளி. அவள் வெறி பிடித்த பெண் சிங்கமாக நின்று கொண்டிருந்தாள்.

குமாரசாமிக்குக் கொஞ்சம் உணர்வு வந்து ஒரு முறை முனகிக் கொண்டே கை கால்களை அசைத்தபோதுதான், வள்ளிக்குத் தன் சுய நினைவு வந்தது.

இதன் விளைவாகக் குமாரசாமியைப் பற்றி ராமலிங்கம் தூபம் போட்டான்.



சென்னை அட்வகேட் ஸ்ரீ டி. எஸ். நாகஸ்வாமி அய்யரின் புதல்வி சௌபாக்யவதி லக்ஷ்மிக்கும் ஸ்ரீ கே. வீராசாமி அய்யர் பி. ஏ. அவர்களின் குமாரர் ஸ்ரீ வி. சுந்தரேசன் எம். எஸ்ஸி. (இந்தியன் ஆடிட் அன்ட் அகௌன்ட்ஸ் சர்வீஸ்) அவர்களுக்கும் சென்னையில் செப்டம்பர் 1ம் தேதி விவாகம் சிறப்பாக நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

வெளியிலேயே போகக் கூடாது என்று வள்ளிக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வள்ளியைக் காணுமல் தினமும் குமாரசாமி ஏமாந்த வண்ணமிருந்தான்.

குமாரசாமிக்கு அன்று இரவில் வேலை; இரவு வண்டி அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. குமாரசாமி வெளியிலே எட்டிப் பார்த்தான். அருகிலிருந்த செடிகொடிகள் அதிவேகமாகப் பின்னுேக்கிச் சென்று கொண்டிருந்தன. அதேபோல் அந்தக் கிராமத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் குமாரசாமியின் எண்ணங்களும் பழைய சம்பவத்தை நினைப்பூட்ட அவனைப் பின்னுேக்கி இழுத்துச் சென்றன. பலவகைப்பட்ட எண்ணங்கள் ஒன்றோடொன்று மோதிக் குமாரசாமியைத் திணற அடித்தன. அவனையும் அறியாமல் இயந்திரம் போல் இஞ்சினைக் கத்த விட்டான். அது தன் பரிதாபகரமான இரட்டைக் குரலில் ஓலமிட்டு அழுதது!

வழக்கம்போல் கிஸ்தி வசூல் செய்து விட்டுப் பணத்தைக் கிராமத்துக்குக் கொண்டு வந்து கொண்டிருந்தார், பெரியசாமி, – வள்ளியின் தகப்பனுர். அவருக்குத் துணையாக இரண்டு ஆட்கள் கூட வந்தனர். ரயில் பாதைக்கு அருகில் வயல் மேட்டுக்குப் பக்கமாக வளைந்து வளைந்து ஓடும் ஒற்றையடிப் பாதையில், கையில் லாந்தருடனும் குண்டாந்தடியுடனும் பேசிக் கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தனர், பெரியசாமியும் அவரது ஆட்களும்.

வண்டி வருவதற்குள்ளாக இருப்புப் பாதையைத் தாண்டிவிட வேண்டும் என்று நினைத்துத் தண்டவாள மேட்டின் மேல் ஏறினுர்கள். அச் சமயம் சுமார் பத்து கஜ தூரத்தில் 'லொட், லொட்' என்று சப்தம் கேட்டுத் திரும்பினுர்கள். இருளில் பேய் போன்றதொரு கரிய உருவம் வெகு மும்முரமாகத் தண்டவாளத்தைப் பெயர்த்துக் கொண்டிருந்தது.

"அட பாவி! ரயில் வர வேண்டிய வேளையிலே யாரோ பாதையை யல்லவா பெயர்க்கிறான்!" என்றார் பெரியசாமி.

திருகாணியைக் கழற்றிக் கொண்டிருந்த அம் மனிதனை எதிர்பாராதவிதமாக மூவரும் போய்ச் சூழ்ந்து கொண்டனர். பெரியசாமி அவன் தலை மயிரைப் பிடித்துக்கொண்டு, வந்த கோபத்தை யெல்லாம் சேர்த்து அவன் முகத்தில் ஒரு குத்து விட்டார். இதற்குள் ரயில் அருகில் வந்து விட்டது. தண்டவாளத்தில் ஏதோ நடக்கிறது என்பதை உணர்ந்த இஞ்சின் ஓட்டி குமாரசாமி சட்டென்று வண்டியை நிறுத்தி விட்டு ஸ்தலத்திற்கு விரைந்தான். அப்போது, பாதி சுய நினைவை இழந்திருந்த அம் மனிதன், "குமாரசாமி இன்றோடு ஒழிந்தான். அவனுக்கு என் கையாலேயே சமாதி!" என்று முனகிக் கொண்டிருந்தான்.

இஞ்சின் வெளிச்சத்தில் அம்மனிதனின் முகத்தைப் பார்த்த பெரியசாமி திடுக்கிட்டு, "அட, பாவி! ராமலிங்கமா!" என்று கூவினார்.

"ராமலிங்கம்!" இந்தப் பெயரைக் கேட்டதும் குமாரசாமிக்கு உடலில் மின்சாரம் பாய்வதுபோன்று அதிர்ச்சி ஏற்பட்டது! "ஆமாம்! ராமலிங்கமேதான்! அட, பாவி! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்!" என்று கோபம் பொங்கக் கூறினான்.

குமாரசாமி இப்படிச் சொன்னதும் பெரியசாமி, "ஏனையா! குமாரசாமி என்கிறது நீதானே!" என்று கேட்டார்.

அப்போது அவனுடைய சாந்தமான முகத்தில் அன்பு ததும்பியது. கனிவு பெருக அவன், "ஆமாம், பெரியவரே! நான்தான் குமாரசாமி" என்றான்.

அப்பொழுது அந்தப் பெரியவரின் மனத்திலிருந்து ஒரு பெரிய சுமை நீங்கிவிட்டது என்பது அவர் விட்ட நீண்ட பெருமூச்சின் மூலம் தெரிய வந்தது.

"அப்பா! என் மகள் வள்ளி உன்னையே நினைத்து அழுது கொண்டிருக்கிறாள். வேளா வேளைக்குச் சோறு தின்று இன்றைக்கு ஐந்து நாள் ஆகிறது! இந்தப் பாவி ராமலிங்கம் இப்படிப்பட்டவன் என்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால் இவனுக்குச் சரியான பாடம் சொல்லிக் கொடுத்திருப்பேன்! அநியாயமாக இவன் பேச்சைக் கேட்டு உன் பேரில் கோபம் கொண்டேன்; வள்ளியையும் வீட்டை விட்டே போகக் கூடாது என்று தடுத்திருந்தேன். இந்த அயோக்கியனை நம்பி நான் எவ்வளவு தூரம் மோசம் போக இருந்தேன், தெரியுமா! மகள், வள்ளி சொன்னதை என்னால் அப்பவே புரிஞ்சுக்க முடியல்லையே!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர் கண்களில் நீர் ததும்பியது, குரல் கரகரத்தது; துக்கம் தொண்டையை அடைத்தது.

"அப்பா, குமாரசாமி! நீ இனிமேல் நம் வீட்டுப் பிள்ளை" என்று மனம் குளிரப் பெரியசாமி சொன்னார்.

குமாரசாமிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

தண்டவாளத்திலே கைவைத்து ரயில் வண்டியின் வழியைத் தடுத்த ராமலிங்கம் சர்க்கார் விருந்தாளியாகப் போலீஸில் ஒப்படைக்கப்பட்டான். தண்டவாளம் சரிப்படுத்தப்பட்டுக் குமாரசாமியின் இஞ்சின் தடையின்றிச் சென்றது. ரயில் போட்ட சப்தம் 'நீ இனி வள்ளியின் கணவனடா!' என்று சொல்வது போல் குமாரசாமியின் செவிகளில் ஒலித்தது. அவன் மனம் வருங்கால வாழ்க்கையின் இன்பக் கனவுகளை எண்ணி ரயிலைக் காட்டிலும் பன்மடங்கு வேகமாக ஓடியது.

சாத்து முறை விழா

மயிலாப்பூர் வேதாந்த தேசிகர் ஆலயத்தில் சாத்து முறைத் திருவிழாவை மேற்படி ஆலய நிர்வாகிகள் செப்டம்பர் மாதம் கடைசி வாரத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். மயிலாப்பூர் வேத பாராயண சபையினர் இத்திருவிழாவில் பங்கு பற்றி அருந்தொண்டாற்றினர். அறிஞர்களின் பக்திப் பிரவசனங்களும் உபன்யாசங்களும் ஆஸ்திக மக்களின் உள்ளத்தைக் குளிர்வித்தன. வேத அத்யயனம் செய்த மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. செப்டம்பர் 28-ந் தேதியன்று எம்பார் விஜயராகவாச்சாரியார் அவர்கள் "தேசிக வைபவ"த்தின் பெருமையை ஹரிகதா காலட்சேபம் மூலமாக வெகு அழகாக எடுத்துரைத்தார். இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட ஆஸ்திக அன்பர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


புதுப் பழ சத்துக்கள்
கரும்புச் சர்க்கரை
க்ளுகோஸ்
எவற்ருல்
மார்ட்டன்
மிட்டாய்களும்
டாபீகளும் செய்யப்பட்டவை?
சுத்தமான பால்
பாதாம்
வெண்ணேயும் தாவரக் கொழுப்பு சத்தும்
மார்ட்டன் பண்டங்கள் சாறுள்ள, இனிமையான மிட்டாய்கள் மட்டுமல்லாமல், உடல் வளர்ச்சியும் தெம்பும் தரும் பால், வெண்ணெய், க்ளுகோஸ், சர்க்கரை போன்றவையும் கொண்டவை. அளவைப் பற்றிக் கவலையில்லாமல் நீங்களும் குழந்தைகளும் சாப்பிடலாம், ஏனெனில் அதிகத் தெம்பு தந்து பலப்படுத்துகின்றன.
மார்ட்டன் — உணவும் ஆகும் மிட்டாய்!
MORTON
தயவுசெய்து புது டில்லியில் இந்தியத் தொழில் காட்சியில் எங்கள் B. 71 ஸ்டாலுக்கு வாருங்கள்.
1955 அக். 29 முதல் டிச. 15 வரை
ஸி. & ஈ. மார்ட்டன் (இந்தியா) லிமிடெட்

ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் செல்லூலோஸ் பிலிம்

உங்கள் சரக்குகளுக்கு கவர்ச்சி அளிக்கட்டும்!

இந்த அனுகூலங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்.



மிகத் தெளிவானது
ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் செல்லூலோஸ்பிலிம் மூலம் கண்ணாடியை விட 5% அதிக ஒளி ஊடுருவிச் செல்லுகிறது.

மிக பலமானது
ஒரு அங்குல அகலமுள்ள ஒரு துண்டு பிலிம் 20 ராத்தல் எடையை தாங்கக் கூடும் – கிழியாமல் அறுகாமல்





மிக மலிவானது
20"×30" அளவுள்ள ஒரு தாளின் விலை 1¼ அணாவுக்கும் குறைவு

ட்ரான்ஸ்பெரன்ட் செல்லூலோஸ் பிலிம் உறையின் வழியாக வாடிக்கைக்காரர்கள் சரக்குகளை பார்க்கக்கூடுமானால் அவர்கள் அதை வாங்குவது திண்ணம். ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் செல்லூலோஸ் பிலிம் சரக்குகளை தொழிற்சாலையிலிருந்து கடைக்குச் செல்லும் வரை புத்தம் புதியதாக வைத்திருக்கிறது... வாடிக்கைக்காரர்கள் தாங்கள் செலவிடும் பணத்திற்குத்தக்க பலனை அடைவதை எடுத்துக் காட்டுகிறது! சட்டைகள், துணிமணிகள், சோப், பொம்மை, உலர்ந்த பழவகைகள் முதலியவைகள் ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரன்ட் செல்லூலோஸ் பிலிமில் பாக் செய்யப்பட்டால் கண்ணைக்கவரும் கவர்ச்சியை அடைகின்றன...விற்பனையும் வெகு எளிதாகி விடுகிறதல்லவா?



TRAYONS

ட்ரான்ஸ்பெரன்ட் செல்லூலோஸ் பிலிம்

கண்ணைக் கவருகிறது–விற்பனையை துரிதமாக்கிறது!

தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட்

பாக்டரி: ரேயான்புரம், திருவாங்கூர்–கொச்சின்.
ஸேல்ஸ் ஆபீஸ்: யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்ஸ், மதராஸ்-1.
மானேஜிங் ஏஜெண்ட்கள்: எம்சிடி & ஸன்ஸ் (திருவாங்கூர்) லிட்.,

TR. 545


மதராஸ் ஸ்டாக்கிஸ்டுகள்:

ரேயான் டிரேடெர்ஸ் லிமிடெட், 27, பவழக்காரத் தெரு, சென்னை - 1

(கிளை ஆபீஸ்கள்: மதுரை, சேலம், கோயமுத்தூர்)

பெங்களூர் ஸ்டாக்கிஸ்டுகள்:

மெஸர்ஸ் எச். சுப்பண்ணா & சன்ஸ், டாட்பெட், பெங்களூர் - 2



16. என்ன யோசனை?

முதலாளி கடிதத்தைப் படிக்க ஆரம்பித்ததும், "என்ன, ரமணி எழுதியிருக்கிறானே! என்ன எழுதியிருக்கிறான்?" என்று கூறிக்கொண்டே மேலும் ஆவலோடு படிக்க ஆரம்பித்தார்:

"அன்பே உருவான மானேஜர் ஸார் அவர்களுக்குப் பணிவான வணக்கம்.


அனாதையாகத் திரிந்த என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றினீர்கள். நாடக சபாவில் வேலைக்கு அமர்த்தினீர்கள். ஆறுமாதமாக வேளா வேளைக்குச் சாப்பாடு போட்டு அன்பாக, அருமையாக வளர்த்தீர்கள். இப்படிப்பட்ட உயர்ந்த குணம் படைத்த உங்களிடம் கடைசியாக நான் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் வந்துவிட்டேன். இதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் மிகவும் வேதனைப் படுகிறது.

நான் பட்டுத் துணியைத் திருடி ஒளித்து வைத்ததை நேரில் பார்த்ததாகத் திரை இழுக்கும் துரைசாமி கூறினார். அவருக்கும் எனக்கும் எவ்வித விரோதமும் இல்லை. அவர் ஏன் அப்படிக் கூறினார் என்பதே எனக்குப் புரியவில்லை! என் குணத்தை நீங்கள் நன்றாக அறிந்தவர்கள். அதனால், நான் திருடவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் மற்றவர்களுக்கு எப்படி நிரூபித்துக் காட்டுவது? அதற்கு வழியில்லாததால் நான் திருட்டுப் பட்டம் பெற வேண்டியதாயிற்று!

முதலாளி அவர்கள் என்னை வெளியே பிடித்துத் தள்ளினார்கள். அதற்காக நான் அவர்கள் மீது கோபப்படவில்லை; ஆத்திரப்படவும் இல்லை. நாடக சபாவில் பல விலை உயர்ந்த சாமான்கள் இருக்கின்றன. அதனால், ஒருவன் மேல் சந்தேகம் ஏற்பட்ட பிறகும், அவனை வைத்துக் கொள்ளுவது ஆபத்துதான். அந்த எண்ணத்தினால் தான் அவர் என்னை வெளியேற்றி யிருக்கிறார். அவர்மீது தவறில்லை. சந்தர்ப்பம் என்னைத் திருடனாக்கி விட்டது. ஆனாலும், உண்மையிலே நான் திருடன் இல்லை என்பதை எல்லாரும் அறிய வேண்டும். அறியக் கூடிய காலம் சீக்கிரம் வர வேண்டும் என்ற ஒரே ஒரு ஆசைதான் இப்போது எனக்கு இருக்கிறது.

நான் வேலையில் இருக்கும் போதாவது எனக்குக் கிடைத்த சிறு தொகையாகிய பத்து ரூபாயைத் தங்களிடம் கொடுத்துவிட்டு வயிறாரச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இனி, அந்தப் பத்து ரூபாய்க்கும் வழியில்லை! உங்களுக்குப் பாரமாகவே இருக்க வேண்டும். அதை நான் விரும்பவில்லை. அன்று இரவு நான் உங்களைப் பார்த்திருந்தால், நீங்கள் நிச்சயமாக என்னைப் போக விடமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நான் தங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் வந்துவிட்டேன்.

சிறுவர்கள் சித்திரப் போட்டி



ஐந்து ரூபாய் பரிசு பெற்றவர்கள்: 1. ஆர். கே. மோகன், வயது 9. 5, தெற்கு திரௌபதியம்மன் கோவில் தெரு, புத்தூர், திருச்சி. 2. பி. புர்ஹானுதீன், வயது 11. 18, ஸ்கூல் லேன், கொல்பிட்டி, கொழும்பு-3. 3. எஸ். பொன்னம்மாள், வயது 11. 9, ஜந்தர் மந்தர் ரோட், புது தில்லி.

நான் திருடன் அல்ல என்பது தெளிவாகும் வரை பட்டணத்தில் இருக்கக் கூடாது என்று தீர்மானித்தேன். கால் போனபடி நடந்தேன். சிறிது தூரம் சென்றதும், 'இவ்வளவு நாட்களாக நமக்கு உணவு தந்த அம்மாளிடம் சொல்லாமல் வந்து விட்டோமே!' என்று நினைத்து வீட்டுக்குச் சென்றேன். ஆனால், அவர்களிடம் எதுவும் சொல்லவில்லை. சொல்ல ஆரம்பித்தால் நேரமாகும்; நீங்களும் வந்து விடுவீர்கள். அப்புறம், என்னைப் போக விட மாட்டீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் தீபாவளிக்கு வாங்கித் தந்த புதுச் சட்டையை அன்று நான் அணிந்திருந்தேன். அதை அறையில் கழற்றிப் போட்டு விட்டு, நான் முதன் முதலில் உங்களிடம் வந்த போது அணிந்திருந்த பழைய சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு உடனே திரும்பி விட்டேன். அனாதைக்குப் புதுச் சட்டை எதற்கு?

இவ்வளவு நாட்களாக நான் நாணயமாகவே நடந்து வந்திருக்கிறேன். கடவுள் கிருபையால் இனியும் நாணயமாகவே நடக்க விரும்புகிறேன். என்னை இவ்வளவு காலமாக ஆதரித்து வந்த நாடக சபா முதலாளி அவர்களுக்கும், உங்களுக்கும், அம்மாளுக்கும் என் பணிவான வணக்கங்கள். மனமார்ந்த நன்றி.

தங்கள் அன்புள்ள
ரமணி"

கடிதத்தைப் படிக்கும்போதே மோகனரங்கத்தின் முகத்தில் பலவித உணர்ச்சிகள் மாறி மாறித் தோன்றின. படித்து முடித்ததும், கடிதத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். எதையோ அதில் தேடினார். பிறகு, "என்ன இது! இந்தக் கடிதத்திலிருந்து ரமணி எங்கே இருக்கிறான் என்று கண்டு பிடிக்க முடியாது போலிருக்கிறதே! விலாசத்தையே இதில் காணோமே?" என்றார்.

"அடடே! விலாசமே இல்லையா! எனக்கிருந்த ஆனந்தத்தில் அதைக் கூடக் கவனிக்கவில்லை" என்று கூறி விட்டுக் கடிதத்தை வாங்கி மதுரநாயகமும் பார்த்தார். விலாசம் இல்லை. உடனே அவர் தம்முடைய அறைக்கு ஓடினார். கிழித்துப் போட்ட உறையைத் தரையிலிருந்து எடுத்தார். அதில் ரமணியின் விலாசம் இருக்கிறதா என்று இருபுறமும் பார்த்தார். காணோம்! உடனே, 'எந்த ஊரிலிருந்து எழுதியிருக்கிறான்? அதையாவது தெரிந்து கொள்ளலாம்' என்று நினைத்துக் கொண்டே தபால் முத்திரையைப் பார்த்தார். 'தெப்பக்குளம்' என்றிருந்தது. உடனே அதை எடுத்துக்கொண்டு முதலாளியிடம் ஓடினார். "திருச்சியிலிருந்துதான் அவன் இதை எழுதியிருக்கிறான். இதோ தெப்பக்குளம் தபால் முத்திரை இருக்கிறது" என்று கூறினார்.

"என்ன! அவன் திருச்சியிலா இருக்கிறான்! அங்கே அவனுக்கு யார் இருக்கிறார்கள்?" என்று வியப்புடன் கேட்டார் மோகனரங்கம்.

"யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. உற்றார் உறவினர் ஒருவருமே

இல்லை என்றுதான் அவன் அடிக்கடி சொல்லுவானே!'' என்று கூறினார் நாடகசபை மானேஜர் மதுரநாயகம்.

''பின்னே, எதற்காக அங்கே போனான்? எப்படிப் போயிருப்பான்? ரயிலில் காசு கொடுக்காமலே அவன் போயிருப்பானோ......?''

''சேச்சே, அப்படி ரமணி ஒரு நாளும் செய்யமாட்டான். நடந்தே போனாலும் போவானே தவிர, பிறரை ஏமாற்ற நினைக்க மாட்டான்'' என்று உறுதியாகச் சொன்னார் மதுரநாயகம்.

''சரி, சாப்பாட்டுக்கு இத்தனை நாள் வரை என்ன செய்திருப்பான்? அவனோ சிறு பையன். பட்டினி கிடக்க முடியுமா? ஒரு மணி நேரம் தாமதமானால்கூட என்னால் பசியை அடக்க முடியவில்லையே!''

''பாவம்! அவன் போய் ஒரு வாரம் ஆகிறதே. என்ன பாடு படுகிறானோ! எப்படித் துடிதுடிக்கிறானோ!''

''ரமணி தங்கமான பையன். அப்போதே இரண்டு மூன்று நாட்கள் பொறுத்துப் பார்க்கலாம் என்று நீங்கள் சொன்னீர்கள். மிகவும் அவசரப்பட்டு விட்டேன். அவன் இப்போது பட்டினி கிடந்தால் அந்தப் பாவம் என்னைத் தானே சேரும்?...மதுரநாயகம், அவன் இப்போது திருச்சியில்தான் இருப்பான். இல்லையா?'' என்று கேட்டார்.

''அங்கேதான் இருக்க வேண்டும். அதுவும் ஒரு பெரிய நகரம். அங்கு ஏதேனும் வேலை கிடைக்குமா என்று தேடிப் பார்த்துக் கொண்டிருப்பான். ஆனாலும், சுலபத்திலே வேலை கிடைத்து விடுமா? அவனுடைய தங்கமான குணத்தைப் பற்றிப் பிறருக்கு எங்கே தெரியப் போகிறது?''

''இவ்வளவு நாள் பழகிய நமக்கே தெரியாமல் போய் விட்டதே!...அவனைப் போல் ஒரு பையன் கிடைக்கவே மாட்டான். அவனை எப்படியாவது திரும்பவும் இங்கே கொண்டுவந்து விடவேண்டும். ஆனால், ஆபீஸ் பையனாக வேண்டாம்; உங்களுக்கு உதவியாக இருக்கட்டும். சம்பளமும் அதிகமாகக் கொடுக்கலாம்...''

''அது சரி, இப்போது அவனை எப்படிக் கண்டு பிடிப்பது? ம்...எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி செய்தால்...?''

''அது என்ன யோசனை? சொல்லுங்கள், சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்'' என்று மிகுந்த ஆவலுடன் கேட்டார். (தொடரும்)

டி.கே.சி.யின் கடிதங்கள்

இருக்குற்றாலம்
7—5—45


தங்கள் கடிதம், கார்ட், தணிகை பற்றிய கட்டுரை எல்லாம் என் கைக்கு வந்தன. கட்டுரை மிக்க உணர்ச்சி மேலீட்டிலிருந்து எழுதியிருக்கிறது. அதற்கு முன்னுரை ஒன்று எழுதினால் கட்டுரையின் ஆர்வம் விளங்கும். அதையும் எழுதி அனுப்பி விடுகிறேன்.

தங்கள் கட்டுரையை (மேல் நாட்டார் இசை பற்றிய கட்டுரையைத் தான்) நான் ரொம்ப அனுபவித்தேன். தங்கள் மனக் கொதிப்பு அதில் எவ்வளவு அழகாய் வந்திருக்கிறது! ஆங்கிலம் கற்றவர்கள் எல்லாரும் படிக்க வேண்டும். ஆங்கிலம் கல்லாதவர் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள்தான் அந்தப் பைத்தியத்துக்கு உள்ளானவர்கள் அல்லவே. தாங்கள் சொன்னதுபோல் காவேரியைப் போல் ஆறும் இல்லை, சாவேரியைப்போல் ராகமும் இல்லை என்று கஷ்டமில்லாமல் சொல்லி விடுவார்களே அவர்கள்.

ஆங்கிலம் கற்றவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு அப்படியெல்லாம் பேச வராது. Handel, Wagner இவர்களைப் பற்றி ஏதோ புஸ்தகத்தில் எவனோ ஒரு அபத்தத்தை எழுதுகிறது; நம்மவர்கள் பட பட கைகள் – தாளம் போடுகிறது!

நம்முடைய சங்கீதத்தை எத்தனையோ தடவை கேட்டு, அதன் பின்தான் அனுபவித்து நிர்ணயிக்க முடிகிறது. ஜெர்மனியர்களுக்கும் அவர்களுடைய சங்கீதத்தை எத்தனையோ தடவை எப்படி எப்படியெல்லாமோ கேட்ட பிறகுதான் நிர்ணயிக்க முடிகிறது.

நம்முடைய யூனிவர்சிடிப் பட்டதாரிகளுக்குமட்டும் கேளாமலே நிர்ணயித்து அனுபவிக்க முடிகிறது! பாக்யசாலிகள்தான்!



படித்துப்பாருங்கள்

ரஷ்யாவின் நாட்டுப்புறக் கதைகள் (Russian Folk Tales)

காலம் மாறி வருகிறது. அதாவது மனிதன் ஒவ்வொரு பொருளுக்குக் கொடுக்கும் மதிப்பு மாறி வருகிறது.

முன்பெல்லாம் 'ராமாயணம் படித்திருக்கிறாயா!' என்று கேட்பார்கள். இப்பொழுது 'கம்பனைப் பார்த்திருக்கிறாயா!' என்றுதான் கேட்கிறார்கள். ஏன், 'வ. வே. சு. அய்யர் ராமாயணம் பார்த்திருக்கிறாயா! ரைட் ஆனரபிள் ராமாயணம் பார்த்திருக்கிறாயா!' என்றுதான் கேட்கிறார்கள்.

ஆம். நூலுக்கு மதிப்புக் கொடுப்பதுபோய், நூலை எழுதிய ஆசிரியர்களுக்கும், ஆசிரியரை விட விமர்சகர்களுக்கும் இன்று மதிப்பு ஏற்பட்டு வருகிறது! அதனால் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் நினைவில்லா விட்டாலும் நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் பெயர் நினைவிலிருக்கும்; ஸ்காட் எழுதிய நாவல்களின் விஷயங்கள் நினைவில்லா விட்டாலும் ஸ்காட்டின் பெயர் நினைவிலிருக்கும். 'கீதாஞ்சலி' என்ற நூலுக்குத்தான் நோபல்பரிசு கிடைத்தது என்பதும் அதன் மகத்துவமும் தெரியா விட்டாலும் டாகூரின் பெயர் நினைவிலிருக்கும் நம்மில் பலருக்கு!



ஆனால் ஷேக்ஸ்பியரும், ஸ்காட்டும், டாகூரும் நினைவிலும் சிரசிலும் கொண்டு வணங்கியது தங்கள் தங்கள் தேசத்துப் பாமர மக்களைத்தான். அந்த மக்கள் நாவிலே வழங்கிய நாடோடிக் கதைகள் அம்மாபெரும் இலக்கியங்களைச் சிருஷ்டி செய்ய ஊக்குவித்தன. அந்த பாமரக் கதைகளின் ஆசிரியர்கள் யார்! எந்தக் காலத்தில் தோன்றியவர்கள்! அவர்கள் பெயர் என்ன! அவர்கள் உடைமை என்ன!— இவை யொன்றும் யாருக்கும் தெரியாது!

ஒவ்வொரு நாட்டின் பாமர மக்களின் நாவிலும் அற்புதமான ரஸம் நிரம்பிய கதைகள் நடமாடத்தான் செய்கின்றன. அவைகளில் வீரம், காதல், ஹாஸ்யம் சோகம் ஆகிய எல்லா ரஸங்களும் காணலாம். நல்லதங்காள் கதையின் சோகமும், தேசிங்கு ராஜன் கதையிலுள்ள வீரமும், அல்லியரசாணி மாலையிலுள்ள பிடிவாதமும், மரியாதை ராமன் கதைகளிலுள்ள சாமர்த்தியமும் நீதியும், கோமுட்டி செட்டிக் கதைகளிலுள்ள ஹாஸ்யமும் தமிழ் மக்களின் கற்பனைச் செல்வத்தைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் நாட்டுக் கிராம மக்களின் விரிந்து பரந்து கிடக்கும் மன இயல்பைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இம்மாதிரியான ரஷ்ய நாட்டு நாடோடிக் கதைகளைத் தொகுத்து, எளிய சுவை மிக்க ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தில் மிருகங்களைப் பற்றிய கதைகள் இருக்கின்றன; ராஜகுமாரர்களைப் பற்றிய கதைகள் இருக்கின்றன; மந்திரவாதிக் கிழவிகளைப் பற்றிய கதைகள் இருக்கின்றன. அழகிய மங்கையர்களைப் பற்றிய கதைகளும் இருக்கின்றன.

ரஷ்ய நாட்டுக் கதைகள் என்றவுடன் புது கம்யூனிஸ ஆட்சி நிலவும் ரஷ்யாதான் நினைவுக்குவரும். ஆண்டானும் அடிமையும் இல்லாத அதிசய உலகம்தான் நினைவுக்கு வரும். லெனினும், ஸ்டாலினும் ஆட்சி புரிந்து புரட்சி நிகழ்த்திய ரஷ்யாதான் நினைவுத் திரையில் தோன்றும். புல்கானின் தலைமையில் இன்று சமாதான விருப்பமுள்ள ரஷ்ய தேசத்தைத்தான் நினைக்கத் தோன்றும். ஆனால் இதிலுள்ள கதைகள் பழைய ருஷ்ய நாட்டில் வழங்கி வந்த கதைகள்; முடியாட்சியிருந்தபோது உண்டான கதைகள். ஸார் ஆட்சியில் நிலவிய கதைகள்தாம். நிலச்சுவான்தார் அட்டகாசம் புரிந்த காலத்தில் எழுந்த கதைகள்தாம். மக்களை அடிமைப்படுத்தி ஆடுமாடுகளைப் போல் விற்று வந்த காலத்தில் எழுந்த கதைகள் தாம். ஆயினும் அந்த மக்களின் கற்பனைச் செல்வத்தில் வறுமை சற்றும் இருக்க வில்லை என்பது தெரிகிறது. எத்தனையோ கஷ்டத்தினிடையேயும், கொடுமை நிறைந்த வாழ்க்கைக்கு மத்தியிலும், உயர்ந்த லட்சியங்கள் கொண்டு அம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது தெரிகிறது.

பெயர் தெரியாத ரஷ்யப் பாமர மக்கள் புனைந்துள்ள இந்த அரிய கதைகளை ஆங்கிலம் தெரிந்த சிறுவர்களும் பெரியவர்களும் படித்து இன்புறலாம். நம் 'கல்கி' வாசகர்களும் அவற்றைத் தமிழில் படித்து இன்புற வாய்ப்பிருக்கும் என்பதை இங்கே ரகசியமாகச் சொல்லி வைக்கிறேன். — எஸ். வி. எஸ்.

ரவி சந்திரிகா



29. பாலக் கரையிலே!

ஆஸ்பத்திரிக்குப் போனதும் டாக்டர் சுரேஷ் ஒரு பையனிடம் உறக்க மாத்திரைகள் கொடுத்து அனுப்பினார். அவற்றை அப்புலிங்கம் சாமர்த்தியமாக ரவீந்திரனுக்குப் புகட்டியதன் பலனாக அன்றிரவுப் பொழுது விபரீதம் ஏதும் இன்றிக் கழிந்தது.

மறுநாட் காலை ரவீந்திரனுடைய வீட்டுக்கு டாக்டர் வந்தபோது உஸ்தாத் பீரானையும் உடன் 'அழைத்துக் கொண்டு வந்தார். அவர்கள் இருவரையும் மிக்க ஆவலோடு வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றான் அப்புலிங்கம்.

"மிராசுதார்வாள்! ஒரு வகையாக என்னுடைய திட்டம் தயாராக இருக்கிறது. காலைக்கே ரவீந்திரனை அழைத்துக்கொண்டு நான் பனிநூர்குடியிருப்புக்குக் கிளம்புகிறேன். எனக்கு ஒரு வார லீவுக்கு ஏற்பாடு செய்து விட்டேன். நீங்கள்தான் உங்கள் பையன் அப்புலிங்கத்துக்கு ஒரு வாரம் லீவு கொடுக்க வேண்டும்!" என்றார் சுரேஷ்.

"அதெல்லாம் சரி, டாக்டர். முதலில் கல்யாணியின் மனத்தைச் சரிப்படுத்த வேண்டுமே. உள்ளே போய்ப் பாருங்கள். அந்தப் பெண்ணுக்கு என்னுடைய சம்சாரம் எத்தனையோ ஆறுதல் சொல்லிப் பார்க்கிறாள். பாவம், அந்தக் குழந்தை அழுது கொண்டேயிருக்கிறது. முன்பெல்லாம் கடவுள் அப்புலிங்கத்துக்கு ஒரு சகோதரியைக் கொடுத்தான் இல்லையே என்று கவலைப்படுவேன். இப்பொழுது இதையெல்லாம் பார்த்த பிறகு அந்தக் கவலையே போய் விட்டது, டாக்டர்! என்ன வாழ்க்கை! என்ன பெண்கள் போங்கள்! பாவம், இந்த விசித்திர மனிதனுக்கு வாழ்க்கைப்பட்டு அந்தப் பெண்தான் என்ன சுகம்கண்டது!"



"மிராசுதார்வாள்! நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள். அந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் நஞ்சம் புருஷனிடம் அன்பு இருக்கிறது என்றால், அதைக் கூடத் துடைத்து மெழுகி விடும் போலிருக்கிறதே உங்களுடைய பேச்சு!"



"அதற்குச் சொல்லவில்லை டாக்டர்! பொதுவாக—"

"பிரசுதார்வாள்! ஏதோ விரக்தியால் இப்படிப் பேசுகிறீர்கள். உண்மையில் ரவியினிடம் கல்யாணிக்கு இருக்கிற பாசம்அபாரமானது. அவன் எத்தனை உயர்ந்த மனிதன் என்பது அவளுக்கு நன்ருகத் தெரியும். ஆனல் பாவம் சந்திரிகா ஒருத்தி இருந்தது தான் அவளை இதுவரை துன்பப் படுத்திக் கொண்டிருந்தது. இப்பொழுதோ அந்தக் கவலையும் இல்லை. எனவே இனிமேல்தான் அவளுக்கு ரவியினிடம் உள்ள அன்பு பூரணமாக வளரப் போகிறது. நீங்கள் வேண்டுமானுலும் பாருங்கள், நான் சொல்லுகிறதன் இரகசியத்தை—"

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே வெளியே வில் வண்டி வந்து நின்ற ஓசை கேட்டது.

என்ன ஆச்சரியம்! வண்டியிலிருந்து கல்யாணியின் தகப்பனுரும் தாயாரும், நாகரத்தினமும் இறங்கினுர்கள்.

டாக்டர் நாற்காலியிலிருந்து எழுந்து கூர்ந்து பார்த்தார். பிரசுதார் முருகானந்தமும் எழுந்தார்.

"ஓ! கனககுந்தரம் வருகிறுர். பாவம் கல்யாணியின் அம்மாவும், அவன் தம்பி நாகரத்தினமும் வருகிறுர்களே!"

பிரசுதார் இப்படிச் சொல்லிக் கொண்டே அவர்களை வரவேற்பதற்கு முன்பு, "கல்யாணி" என்றுகூப்பிட்டுக் கொண்டே ரவீந்திரனுடைய வீட்டுக்குள்ளே ஓடினுள் அந்த அம்மாள் — கல்யாணியின் தாயார்.

"அம்மா" என்று ஒரு கதறல் கதறினுள் கல்யாணி. "அம்மா! உன்னுடைய மருமகனைப் பாரம்மா! பாரம்மா!" என்று சொல்லிக் கொண்டே அப்படியே தாயாரின் மேல் விழுந்து பற்றியவாறு துடிதுடித்துக் கொண்டு கூச்சலிட்டாள் கல்யாணி. பெரியவர் கனககுந்தரம்மௌனமாகத் தமது மனைவியைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றவர், உணர்ச்சியை அடக்க முடியாமல் மேல் துண்டில் முகத்தைப் புதைத்துக் கொண்டே விம்மி விம்மி அழுதார். அந்த வீடு முழுதும்சோகத்தின் பிரலாபம் எதிரொலித்தது.

இத்தனை சோகத்துக்கும் காரணமான ரவீந்திரன் உள் கூடத்தில் நன்ருகப் பூட்டப்பட்ட அறைக்குள்ளே, இந்த உலக நடப்புக்களைப் பார்த்தும் பார்க்க முடியாத நிலையிலே, மனிதர்களின் குரல் காதில் விழுந்தும் கேட்க முடியாத ஒரு கனவுலகிலே மனம் பின்னிப் போனவனுகத் தானும் தனிமையுமாக இருந்தான்!

நாகரத்தினமோ உஸ்தாத் மீரானை அந்த வீட்டிலே கண்டதும் ஒன்றும் தோன்ருத

வனாக அந்தத் திகைப்பைச் சமாளித்துக் கொண்டே கூக்குரல் கேட்கும் அறைக்குள்ளே நழுவிச் சென்றான். டாக்டர் சுரேஷ் அவனைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றார்.

"பெரியம்மா! உங்களைத்தானே. தயவு செய்து சப்தம் போடாதீர்கள். நோயாளிக்குக் கெடுதல்—" என்றார். இந்த வார்த்தை அந்தக் கூக்குரலில் எடுபடவேயில்லை. அடுத்த வினாடி கனகசுந்தரத்தைப் பார்த்துச் சொன்னார்:

"ஐயா! தயவு செய்து உங்கள் மனைவியைக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கச் சொல்லுங்கள். பக்கத்து அறையிலே உங்கள் மாப்பிள்ளையைப் பூட்டி வைத்திருக்கிறோம். இந்த மாதிரிக் கூப்பாடு போட்டால் அவருக்கு வேகம் அதிகரிக்கும். அதனால் விபரீதமே ஏற்படலாம். புரிந்ததா!"

இவ்வாறு டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மிராசுதார் முருகானந்தம்



உள்ளே வந்து கனகசுந்தரத்தை இரண்டு கையாலும் தாங்கியவாறு வெளியே அழைத்து வந்தார்.

"அம்மா கல்யாணி! உங்களுக்கு எந்த விஷயமும் லேசாகச் சொன்னால் புரியும். உங்கள் கணவருடைய உடம்பு இப்பொழுது இருக்கும் நிலைக்கு நீங்கள் இந்த மாதிரிக் கூச்சல் போடலாமா? மனசைத் தளர விடாதீர்கள். என்னுடைய உடம்பில் உயிர் இருக்கும் வரைக்கும் உங்கள் புருஷரை இந்த நோயிலிருந்து காப்பாற்றுவதை விட எனக்கு முக்கிய காரியம் வேறில்லை. என்னை நம்புங்கள். கடவுள் அருளால் எல்லாக் கஷ்டமும் சரியாகி விடும். எல்லாம் என்று மறுபடியும் சொல்கிறேன்!"

டாக்டர் சுரேஷின் வார்த்தைக்கு எப்பொழுதுமே அந்தக் குடும்பத்தில் ஒரு மதிப்பு இருந்தது என்பது இப்பொழுதும் நன்றாகத் தெரிந்தது. ஏனென்றால் அவருடைய வார்த்தைக்குப் பிறகு அங்கே கூச்சல் அடங்கியது.

டாக்டர் சுரேஷ் நாகரத்தினத்தையும் அழைத்துக் கொண்டு மற்றவர்கள் உட்கார்ந்திருந்த தாழ்வாரத்துக்கு வந்தார்.

"வால்குடி ஐயா!" என்று கல்யாணி அம்மாளின் தகப்பனாரை அழைத்தவாறு பேச ஆரம்பித்தார் டாக்டர் சுரேஷ்.

"வால்குடி ஐயா! உங்கள் மாப்பிள்ளைக்கு ஏற்பட்டுள்ள நோயைப் பற்றி உங்கள் மகள் அளவுக்கு மீறிக் கவலைப்படுகிறான். அது இயல்புதான். ஆனால் இந்த வியாதி நாள்ப்பட்ட வியாதி என்பது என்னுடைய சித்தாந்தம். ஏற்கனவே அந்த நோய் உள்ளடங்கியிருந்தது. முன் கோபமாகவும், ஆத்திரமாகவும், விசித்திரச் செயல்களாகவும் அந்த நோய் இதுவரை அவ்வப்போது, தன்னைப் புலப்படுத்திக் கொண்டிருந்தது. இப்பொழுது எதிர்பாராத சூழ்நிலையினால் அது பலமாகத் தலைவிரித்தாடுகிறது. அவ்வளவுதான். இந்த நோயைச் சில நாளாகவே நான் ஆராய்ந்து வருகிறேன். தெய்வத்தில் அதிக நம்பிக்கை உள்ளவன் நான். எனவே, எப்படியும் இதைக் குணப்படுத்தி விடலாம் என்று நினைக்கிறேன். அதுவரை உங்கள் மகளை ஆறுதல் செய்து கவனமாகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குத்தான். உங்களைப் பார்த்தால் சாந்தமே உருவெடுத்தது போல் இருக்கிறீர்கள்—"

"டாக்டர்"—கனகசுந்தரம் பேச ஆரம்பித்தார்.

"டாக்டர், என்னுடைய மகளைப் பற்றி நானே சொல்லிக் கொள்வது நன்றாக இராது. ஆனாலும் உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும். உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. மாப்பிள்ளையின் கோபமும் தாபமும் நீங்கள் அறிந்த விஷயங்கள்தான். இத்தனைக்கும் மத்தியில் அவரே கதியென்று அவள் நடந்துவருவதைப் பார்த்தால், தெய்வம் இன்றைக்கும் இருக்கிறது, தமிழ் நாட்டுப் பண்பாடு இன்னும் சாகவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். என்னுடைய இளையமகளின் கல்யாணத்துக்கு வந்தவன் அத்தனை அவசரமாகத் திருச்சிக்குப் புறப்பட்டு வந்து கார் விபத்திலே சிக்கிக் கொண்டானே. நினைத்துப் பாருங்கள். அத்தனை தடுத்தும் அவன் ஏன் அப்படிப் புறப்பட்டு வந்தான்? புருஷனிடத்தில் அவளுக்கு அத்தனை பாசம் இருக்கிறது டாக்டர்!

"பெண்ணிற் பெருந்தக்க
யாவுள"

என்ற வள்ளுவரின் குறளைக் கேட்டிருப்பீர்கள். 'பெண் பிறப்பைப் போல் மேம்பட்ட பிறப்பு எது' என்று மணக்குடவர்



PILOT
PEN &
INK
PILOT INK
எல்லா பிரபல ஸ்டேஷனரி
கடைகளிலும் கிடைக்கும்.
THE PILOT PEN CO. (INDIA) LIMITED
Office. "Catholic Centre", Armenian Street, Madras-1 Phone: 2325



நீண்டு பெருகும் கூந்தல்
வேண்டுமானால்
கேசவர்த்தினி
தடவுங்கள். தலை அரிப்பைப் போக்குங்கள். மயிர்கொட்டுவதை நிறுத்துங்கள். அகால நரையைத் தடுங்கள். நரையைத் தாமதிக்கச் செய்யுங்கள். பளபளப்பான கேசத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.
மறைந்துள்ள கூந்த
லழகை எடுத்துக்
காட்டுங்கள் கேசவர்த்தினியின் உதவியால்.
ஷாம்புவின் உதவியால்
தலையைச் சுத்தமாகவும் பரிமளமுள்ளதாகவும் ஆக்குங்கள்
கேசவர்த்தினி அணா 14. ஷாம்பு அணா 14. தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.
கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்
No. 3



மிகச் சிறந்த
நித்திரை - கால
பானம் இதோ
இருக்கிறது -
— நல்ல தூக்கத்தை
அனுபவிக்க உங்களுக்கு
உதவிபுரிய !
ஓவல்டின்
இனிய ருசியுடன் ஊக்கமளிப்பது
OVALTINE

இதற்கு உரை எழுதுகிறார். கணவனே எல்லாமும் என்கிற கற்பு மட்டும் இருந்து விட்டால்,

"பெண்ணிற் பெருந்தக்க
யாவுள : கற்பெனும்
திண்மை உண் டாகப்
பெறின் !"

என்கிறார் திருவள்ளுவர்"—கல்யாணியைப் பற்றி இப்படிச் சொல்லும் போது கனக சுந்தரத்துக்குக் குரல் அடைத்தது.

"என்ன அப்பா! உங்களுடைய திருக்குறள் ஆராய்ச்சியை ஆரம்பித்து விட்டீர்களா? சரி, இனிமேல்......" என்று ஆரம்பித்தான் நாகரத்தினம். இது வரை சுவரோடு சுவராக ஒரே மௌனத்தில் உட்கார்ந்திருந்த உஸ்தாத் மீரான், நாகரத்தினத்தை அப்படி ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தார், இந்தச் சந்தர்ப்பத்தில்.

"நாகரத்தினம்! நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். உங்கள் தகப்பனார் தமிழ் நாகரிகம் என்ற பண்புகளின் உருவம் என்று நான் வியந்த வண்ணம் இருக்கிறேன். நீங்களானால்.."



"டாக்டர்! நாகரத்தினத்துக்கும் எனக்கும் வெகு தூரம். என்னுடைய பிள்ளை தான். ஆனாலும் என் போக்கு அவனுக்குப் பிடிப்பதில்லை. நான் அந்தக் காலத்து மனிதன். அவனோ......"

"அவன் விஞசகாலத்து ஆசாமி!" என்று வார்த்தையைச் செருகினார் உஸ்தாத் மீரான். அவருக்குக் கண் சிவந்திருந்தது.

டாக்டர் சுரேஷ் பேச்சை மாற்றினார்.

"என்ன மிராசுதார்வாள்! நீங்கள் என்னவோ பெண் குழந்தைகளைப் பற்றி அலுத்துக் கொண்டீர்களே, ஒரு பெண் குழந்தைகூட இல்லாத தகப்பனாராக இருந்து கொண்டு! லால்குடி ஐயா சொல்வதைக் கேட்டீர்களா?" என்றார் டாக்டர், அப்புலிங்கத்தின் தகப்பனாரிடம்.

"ஏது டாக்டர்! அப்பாவை இத்தனை தூரம் குழை அடிக்க ஆரம்பித்து விட்டீர்கள்? எனக்குப் பயமாக இருக்கிறதே!" என்றான் நாகரத்தினம், கடுகடுப்பாக முகத்தை வைத்துக் கொண்டே! உஸ்தாத் இந்த இடத்தில் ஒருதரம் இருமிக் கொண்டார். உள்ளத்தில் பொங்குகிற கோபத்தை இருமலாகக் கழித்து விடுகிறார் என்பது அவருடைய முகக் குறிப்பிலே தெரிந்தது.

"தம்பீ! எல்லாரிடமும் பேசுவதுபோல நம்முடைய டாக்டரிடமும் தூக்கி எறிந்து பேசாதே. அவர் ஒருவர்தான் உன்னுடைய அத்தானுக்கு ஊன்றுகோல். தெரிந்ததா?" என்றார் மிராசுதார், சாவதானமாக வார்த்தைகளை அடுக்கிய வண்ணம்.

"டாக்டர் ஸாரை எனக்கு நன்றாகத் தெரியுமே! அவர் வந்து சேர்ந்த பிறகு தானே மற்ற ஊன்றுகோல்கள் ஒன்றும் அத்தானுக்குத் தேவைப்படுகிறதில்லை. போதாத குறைக்கு ஒரு புல்லாங் குழல் வேறு பரிசு கொடுத்தாராமே. அதைவிடச் சிறந்த ஊன்றுகோல் வேறென்ன உண்டு?" என்றான் நாகரத்தினம் ஏகத்தாளமாக. உஸ்தாதுக்கு மீசை துடித்தது. கோபத்தை அடக்க முடியாமல் வார்த்தைகள் வெளி வந்தன. "இந்தா நாகரத்தினம்! உன்னுடைய அத்தானுக்கு வேறு ஊன்றுகோல்களும் இருக்கின்றன, தெரியுமா! இந்த உஸ்தாதின் சிலம்பப் பள்ளிக்கூடத்திலே இருக்கிற ஒவ்வொரு சிலம்பக் கம்பும் ஒரு ஊன்றுகோல். ஞாபகம் இருக்கட்டும்!" என்றார் மீரான்.

"ஓ! தெரியுமே! புதிதாக மலைக் காட்டிலேயிருந்து கூடப் பல ஊன்றுகோல்கள் வந்திருக்கின்றன என்று எனக்குத் தெரியும்!" என்றான் நாகரத்தினம்.

மகனுடைய பேச்சை எப்படி அடக்குவது என்று தெரியாமல் தகப்பனார் தவிக்கிறார் என்பது கனகசுந்தரத்தின் முகத்திலே தெரிந்தது. டாக்டர் இதைப் புரிந்து கொண்டார். சிரித்துக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

"மிஸ்டர் நாகரத்தினம்! தயவு செய்து என்னிடம் சண்டைக்கு வாருங்கள். எனக்குத் தர்மாமீட்டரைத் தவிர வேறு ஊன்றுகோலே தெரியாது! திராணி இல்லாத மனுஷன் நான்! என்னை விட்டு விட்டு உஸ்தாதிடம் ஏன் பேசுகிறீர்கள்? அதிலும் இந்தச் சந்தர்ப்பத்தில்......" என்று சிரித்தார் டாக்டர் சுரேஷ். நாகரத்தினம் சிரிக்கவில்லை.

"கம்பு பிடிக்கத் தெரியாதவனோடு நான் சண்டைக்குப் போவதில்லை டாக்டர். உண்மையில் இந்த வீட்டில் இத்தனை அலட்சியமும், நாங்கள் எல்லாம் பெரிதில்லை என்ற அகம்பாவமும் யாருடைய தைரியத்தினால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியும். அந்த அகம்பாவத்துக்கு இப்பொழுது இப்படிச் சோதிக்கிறான் கடவுள்!" என்றான் நாகரத்தினம்.

"ஏண்டா! கடவுளை ஏண்டா இழுக்கிறாய்? உனக்குக்கூடக் கடவுள் இருக்கிறாரா? அன்றைக்கு ராத்திரி குப்புசாமியைச் சுவரேறிக் குதிக்கச் சொன்ன போது கடவுள் எங்கேடா இருந்தார்? ஒரு நல்ல மனைவியின் மனசை நன்றாகக் கலைப்பதற்கு முனைந்தாயே, அன்றைக்கு எங்கேடா போயிருந்தார் உன்னுடைய கடவுள்? குருத் துரோகம் செய்வதற்குப் பகோராவைத் தயார் பண்ணினாயே, அப்பொழுது உன்னுடைய கடவுள் எங்கே போயிருந்தார்?"

"உஸ்தாத்—" என்றார் டாக்டர் சுரேஷ், அந்த ஒரு வார்த்தையிலே எத்தனையோ விஷயங்களை அடக்கி அவரை அமர்த்த விரும்புகிறவரைப் போல.

"டாக்டர்! நீங்கள் ஏன் உஸ்தாதை அமர்த்துகிறீர்கள்? அனாவசியம். கிழட்டுப் புலிக்குத்தான் எப்பொழுதுமே கோபம் அதிகம். ஆனால் காரியம் நடவாது. ஸர்க்கஸில் பார்த்ததில்லையா? வித்தைக்காரனிடம் பார்த்ததில்லையா? பல் போன சிங்கம், திராணி இல்லாத குதிரை, கிழட்டுக் கரடி, வயதான குரங்கு இதுகளை வைத்துக் கொண்டுதான் வித்தை காண்பிப்பார்கள். அவற்றைக் கோபப்படுத்தி ஜனங்களைப் பயமுறுத்தலாம். ஆனால் அவற்றினால் ஆபத்து ஒன்றும் இல்லை என்பது வித்தைக்காரனுக்கு மட்டும் நன்றாகத் தெரியும்!"

"நாகரத்தினம்! இப்படிச் சண்டை பிடிப்பதற்காகத்தான் நீ இங்கே எங்களோடு வந்தாயா?" என்று கேட்டார் கனகசுந்தரம். மகனை வேறு விதமாக அடக்க முடியவில்லை அவரால்!

"அப்பா! உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால், நீங்களும் உங்கள் மகளும், அந்தப் பைத்தியக்கார மாப்பிள்ளையும் எக்கேடு கெட்டுப் போங்கள். நான் வருகிறேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். இந்த டாக்டரும், இந்த உஸ்தாதும்—"

இதற்குள் உஸ்தாத் மீரானுக்குக் கோபம் கரைபுரண்டு விட்டது.

"இந்தா! நாகப்பாம்பு! என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசு! குச்சி பதில் சொல்லும். டாக்டரைப் பற்றி ஏதாவது பேசினாயானால்—!"

"உஸ்தாத்! இந்த வரட்டுப் பேச்செல்லாம் இனிமேல் நம்மிடம் வேண்டாம். குச்சி என்று சொன்னீர்களே, அதோடு வைத்துக் கொள்ளுங்கள். அதிகமாகப் பேச வேண்டாம். ஏதோ அந்தக் காலத்தில் உங்களிடம் தேங்காய் தட்டின மரியாதைக்கு இதுவரை பார்த்தேன். நீங்கள் என்னடா என்றால், வரவர இந்தக் குடும்பத்தையே எனக்குப் பகையாக்கிவிட நிற்கிறீர்கள். பார்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் நாகு.

"என்ன சொன்னாய்! பார்க்கலாமா? தம்பி யாரிடம் பேசுகிறாய் தெரியுமா?"

"உஸ்தாத்" என்று அவரைக் கையமர்த்தினார் டாக்டர். மீராசுதாரும், அப்புலிங்கமும், மீரானுக்கு அருகிலே வந்தார்கள். கனகசுந்தரம் தம்முடைய மகனுக்கு அருகிலே போய் நின்றுகொண்டு சொன்னார்:

"நாகரத்தினம்! நீ போடா பேசாமல்! நீ போடா! இங்கே நின்று என் பிராணனை வாங்காதே!"


"உங்கள் பிராணனையா! அது என்ன செய்தது பாவம்! வாங்குவதற்கு வேறு பிராணனா இல்லை!"

உஸ்தாத் சீறி எழுந்தார்.

"இந்தா! நாகரத்தினம்! வலுச் சண்டைக்குப் போகமாட்டான் இந்த உஸ்தாத்! ஆனால் வந்த சண்டையை விடமாட்டான். நீ இன்றைக்கு இந்த மாதிரிப் பேசினதற்காக அல்லாஹ் முன்னால் நீ கண்ணீர் வடிக்கவில்லையென்றால், உஸ்தாத் இந்த மீசையை எடுத்து விடுவான்! அவன் ஔரத்! அல்லாஹ் பேரில் ஆணையாகச் சொல்லுகிறேன்!"

"உஸ்தாத்! இது வீடு! நான் வருகிறேன். இனிமேல் உங்களைச் சந்திக்க வேண்டிய விதத்தில் சந்தித்துக் கொள்ளுகிறேன். சலாம் ஆலேகும்!"

உஸ்தாத் மீரானை நன்றாகப் பிடித்துக் கொண்டார் டாக்டர். கைப்பிடியைவிட



அவருடைய அன்பின் பிணைப்பு பலமாக இருந்தது. துடிக்கும் மீசையோடு உட்கார்ந்து விட்டார் உஸ்தாத்.

"பூஜை வேளையில் கரடி என்பார்கள். இங்கே இருக்கிற நிலைமை என்ன! இந்தப் பயல் பேசுவது என்ன! இப்படி ஒரு புத்திரன் நமக்கு வந்து வாய்த்தான்! எல்லாம் நம்முடைய பூர்வ புண்ணிய பலன் டாக்டர்!" என்று தலையில் அடித்துக் கொண்டே மேலும் சொன்னார் கனகசுந்தரம்:

"உஸ்தாத்! டாக்டர்! நீங்கள் இரண்டு பேரும் தயவுசெய்து கோபப் படாதீர்கள்! அவனுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்—" கனகசுந்தரம் இப்படிச் சொல்லும்போது குரல் தழதழத்தது.

"நீங்கள் பெரியவர். அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. உங்கள் பையனுக்குப் புத்தி வரவழைக்கத்தான் அல்லாஹ் இந்த மாதிரி என்னோடு அவன் பேசும்படிக்குச் செய்திருக்கிறான். இனிமேல் அவனுக்குப் புத்தி வந்துவிடும். அதற்கு வழி பிறந்து விட்டது!" இவ்வாறு உஸ்தாத் சொன்னபோது யாரும் பதில் பேசவில்லை.

அப்புவைப் பார்த்து டாக்டர் ஏதோ கண்ஜாடை காட்டினார். உடனே அப்புலிங்கம் எழுந்து உஸ்தாதிடம் ஏதோ சொல்லித் தன்னுடைய அறைக்கு அழைத்துப் போனான்.

டாக்டர் சுரேஷ் கனகசுந்தரத்தோடு பக்குவமாகப் பேச ஆரம்பித்தார். ரவீந்திரனுடைய மூளை நோய்க்கு அருவியும், காடும், நிம்மதியான ஆசிரம வாழ்க்கையும் அவசியம் என்று கூறினார். கல்யாணி கொஞ்ச நாள் கணவனைப் பிரிந்திருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார். நாகரத்தினத்தின் தொடர்பு இல்லாமல் இருக்குமானால் அவன் வால்குடியிலேயே இருப்பதில் தவறில்லை என்றும் சொன்னார் டாக்டர் சுரேஷ்.

"இதையெல்லாம் உத்தேசிக்கும்போது நீங்கள் இப்பொழுது இங்கே வந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று பார்த்தீர்களா!" என்றார் டாக்டர் சுரேஷ்.

"உங்கள் தந்தி கிடைத்ததும் எங்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை டாக்டர். உடனே வந்துவிட்டோம்!" என்றார் கனகசுந்தரம்.

"ஓகோ! நீங்கள் தந்தி கொடுத்தீர்களா, டாக்டர்!" என்று கேட்டார் மிராசுதார்.

"ஆமாம், நேற்று இரவு ஆஸ்பத்திரிக்குப் போனதும், இவர்களுக்கு ஒரு தந்தி கொடுத்தேன்!" என்றார் சுரேஷ்.

இவர்கள் இங்கே இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது அப்புலிங்கத்தின் அறையில் உஸ்தாதும் அப்புவும் பலமாகச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள்.

"விஷயம் பலமாக முற்றிவிட்டது. இனிமேல் என்னுடைய மகளுக்கு நிக்காஹைச் செய்து விட வேண்டியது மிக மிக அவசியம். அப்படியானால்தான் நான் பந்தம் இல்லாத மனிதன் ஆவேன். அப்படியானால்தான் இந்த விஷப் பாம்பின் பல்லை என்னால் எடுக்க முடியும்!" என்றார் உஸ்தாத்.

"இத்தனை துணிச்சல் இவனுக்கு எப்படி வந்தது உஸ்தாத்! எங்குபோனாலும் கால் பந்துமாதிரி அங்கும் இங்கும் இவனை எல்லாரும் பந்தாடினார்களே! யாரும் உதவி செய்யவில்லையே குப்புசாமியைத் தவிர? அப்படியிருந்தும் இவனுக்கு எப்படி இத்தனை துணிச்சல் வந்தது?" என்றான் அப்பு.

"அந்த பகோரான் பயல் இப்பொழுது புதிதாகச் சேர்ந்திருக்கிறான். இது தெரியாமல் நானே அந்த பகோரான் பயலோடு போய்ப் பேசினேன், ஆமினா விஷயமாக! என் புத்தியை ஜோட்டால் அடிக்க வேண்டும்!" என்றார் உஸ்தாத்.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள், உஸ்தாத்! பகோரான் அத்தனை மோசமானவன் என்று எனக்குத் தோன்றவில்லை. உங்களிடம் அவனுக்கு மிகுந்த பக்தி உண்டு உஸ்தாத்!"

"அதெல்லாம் அந்தக் காலம் அப்பு! இப்பொழுதெல்லாம் குரு என்கிற மரியாதையே தெரியாத காலம். குருவுக்குக் கபர்க் குழி தோண்டுகிறானே, அவன்தான் நல்ல சிஷ்யன்!"

"இல்லை, உஸ்தாத்! பகோரான் விஷயத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. இந்த நாகரத்தினம் பகோரானிடம் ஏதாவது பொய் பித்தலாட்டம் பேசி ஏமாற்றியிருப்பான். அதைப் பற்றித் தெளிவாக விசாரித்து விடவேண்டும்!"



"விசாரிக்கிறது என்ன விசாரிக்கிறது. நானே அந்தப் பயலை நேருக்கு நேராக—"

"உஸ்தாத்! என்னை மன்னியுங்கள். தயவு செய்து நீங்கள் போக வேண்டாம். அதிலும் இப்பொழுது உள்ள மன நிலையில் நீங்கள் போகவே கூடாது. நான் போய் பகேரானிடம் எல்லாவிவரங்களும் தெரிந்து வருகிறேன். நீங்கள் அதுவரை பொறுத்திருங்கள்" என்றான் அப்புலிங்கம்.

"அது சரி. ஆமினாவின் நிக்காஹைப் பற்றி என்ன சொல்லுகிறாய் தம்பி?"

"சொல்லுவது என்ன? எப்பொழுது மஜீதுக்கும் அவளுக்கும் மனம் ஒன்று பட்டாய் விட்டதோ, இனிமேல் அதற்குக் குறுக்கே நிற்பதில் அர்த்தம் இல்லை. முறைப்படி நிக்காஹை முடித்துவிட வேண்டியதுதான்!"

"அதற்கு ஒரு வழி பண்ண வேண்டும் முதலில். நான் ஒரு தனி மனிதனை வேண்டும். இனிமேல் நமக்கு எந்தவிதமான பந்தமும் இருக்கக்கூடாது!" என்றார் மீரான்.

"உஸ்தாத்! உங்களுக்கு உங்களுடைய மகனிடத்தில் எத்தனை பிரியம் என்பது எனக்குத் தெரியும். கவலைப் படாதீர்கள். மஜீத் ரொம்ப நல்ல பையன். விசுவாசம் உள்ளவன். ஏதோ வாலிப வேகத்தில் இப்படி ஒரு காரியம் செய்து விட்டான். மற்றப்படி—"

"கிழவன் மாதிரிப் பேசுகிறாயே தம்பி! நீயும் வாலிபன்தான். நீயும் நிக்காஹ் ஆகாத பிள்ளைதான். சாமியார் இல்லையே நீ!" இப்படிச் சொல்லும்போது உஸ்தாத் சிரித்து விட்டார்—மனத்தில் நிம்மதி அரும்புகிறது என்பதற்கு அடையாளமாக!

"சரி, வாருங்கள்! புறப்படுவோம். நானும் பகேரானைப் பார்த்து விட்டு வருகிறேன்!" என்று சொல்லி, அப்புலிங்கம் எழுந்தான்.

"நாங்கள் கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறோம் டாக்டர். நீங்கள் அதற்குள் ஒரு நிகழ்ச்சித் திட்டம் தயாரித்து வையுங்கள்!"

இவ்வாறு சொல்லிக் கொண்டு அப்புலிங்கம் வெளியே வந்தான். உஸ்தாதும் எல்லாருக்கும் சலாம் செய்து விட்டுப் புறப்பட்டார்.

காரிலே உஸ்தாதை ஏற்றிக் கொண்டு பாலக்கரையில் அவருடைய வீட்டிலே அவரை விட்டுவிட்டு அப்புலிங்கம் பீமநாயகன் பாளையத்தை நோக்கிச் சென்றான். பாலக்கரை ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே அந்தப் புகழ் பெற்ற கேட் பூட்டிக் கிடந்தது. கேட்டுக்கு எதிரே காரை நிறுத்தியதும் அப்புலிங்கம் அதைக் கவனித்தான்—வேகமாக நாகரத்தினம் கேட்டைத் தாண்டி நடந்து கொண்டிருந்தான்.

"சரி; இவனும் பகேரான் வீட்டுக்குத்தான் போகிறான் போலிருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டான் அப்பு.

"சரி; இந்த கேட் திறப்பதற்கு எப்படியும் இன்னும் அரை மணி நேரம் ஆகும். அதற்குள் நாகரத்தினம் பகேரான் வீட்டிலிருந்து கிளம்பி விடுவான்!" என்று யோசித்தவனாகக் கையிலே கொண்டு வந்திருந்த ஓர் ஆங்கிலப் புத்தகத்தை காரின் ஸ்டியரிங் வீலுக்கு மேலே வைத்து விரித்துப் படிக்க ஆரம்பித்தான் அப்பு.

'வாழ்க்கை' என்ற புதிரைப் பற்றி உலகப் பெரியார்களின் கருத்துக்களைத் திரட்டித் தரும் ஒரு தொகை நூல் அது.

"வாழ்க்கை என்பது ஒரு குஸ்தி மைதானம்!" என்றார் ஒருவர்.

"வாழ்க்கை என்பது ஒரு கால் பந்தாட்டம்!" என்றார் இன்னொருவர்.

"வாழ்க்கை என்பது ஒரு ஸர்க்கஸ் கூடாரம். ஒவ்வொரு மனிதனும் விதி என்ற ஸர்க்கஸ் மாஸ்டர் ஆட்டுகிற ஆட்டத்துக்கெல்லாம் ஆடவேண்டிய இரண்டு கால் மிருகம்!"—இப்படிச் சொல்லியிருந்தார் மற்றொருவர்.

"வாழ்க்கையில் இன்னும் என்ன என்ன எல்லாம் இருக்கிறதோ! பார்க்கலாம்!" என்று எண்ணிக் கொண்டே கேட்டைத் திறந்ததும் காரை ஓட்டிக்கொண்டு பகேரான் வீட்டை நோக்கிச் சென்றான் அப்பு.

வாழ்வின் விந்தையை என்ன சொல்வது! "அப்பு ஸாரா! வாருங்கள் ஸார்!" என்று சொல்லி நாற்காலியைக் காண்பித்தான் பகேரான். நாற்காலியில் உட்காரும் போதே இடது புறம் நாகரத்தினம் உட்கார்ந்து விஷமத்தனமாக விழித்தான்.

"ஓ! நாகரத்தினமா!" என்று முகமன் கூறினான் அப்பு.

"ஆமாம். எங்கள் அப்பாவின் புத்திர பாக்கியம்!" என்று சொல்லிக் கொண்டே தன்னம்பிக்கையோடு நாகரத்தினம் தொண்டையை இருமிக் கொண்ட விதத்தில் விஷமத்தின் வெற்றி தொனித்தது.

அப்பு பகேரானைக் கூர்ந்து பார்த்தான். அந்த முகத்தில் ஏதோ ஒரு பரிதாபம் இருந்தது. 'எக்கச் சக்கமாக' ஒரு பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டு விட்டது போன்ற நெருக்கடி பகேரான் முகக் குறிப்பில் தெரிந்தது.

உண்மை; பாலக்கரைப் புகை வண்டி நிலயத்தின் ஆசார வாசலிலே அரை மணி நேரம் அப்புலிங்கம் காத்துக் கொண்டிருந்தான் அல்லவா, அதற்குள், பகேரான் வீட்டில் அத்தனை பெரிய சிக்கலான காரியம் நேர்ந்துபோய் இருந்தது! (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram


"இந்த அழகு தரும் சோப் தனிவிதமானது"
புதியது!
நறுமணமுள்ளது!
ப்ரீஸ்
BREEZE
TOILET SOAP
"ஆக்டமர் கலந்துள்ளது"
* உடலிலுண்டாகும் துர்கந்தத்தை நீக்குகிறது
உங்களை புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
* சருமத்திலுள்ள கிருமிகளை கொல்லுகிறது
சருமத்தை ஆரோக்கியத்துடனிருக்க பாதுகாப்பளிக்கிறது!
ஆக்டமர் (பைதியோனல்) மான்ஸான்டோவின் புதுமையான பாக்டீரியோஸ்டாட். அது கிருமிகளை கொல்லக் கூடிய சிறந்த சக்தியை உடையதாயிருந்தாலும், சருமத்திற்கு மென்மையைத் தரக்கூடிய ரசாயனப் பொருள்.
BREEZE
TOILET SOAP
விலை 8 அணுதான்
ப்ரீஸ்-ஆக்டமர் கலந்த அழகு தரும் சோப்
BZ. 1-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon